# ஈழத்து அறப்போரும்
# உரிமை மறுப்போரும்

இலங்கைத்தமிழ்பேசும் மக்களின் சத்தியாக்கிரகவரலாறு



சத்தியாக்கிரக வழி வகுத்த உத்தமர்

**காந்தி அடிகள்.**

விலை: ரூபா

அமரர் கை. சிவபாதம் அவர்கள்.



# காணிக்கை.

எதிர்காலச் சமுதாயம் தமிழன் சுதந்திரப் போர் எவ்வாறு நடந்ததென்பதை அறிவதற்கு வரலாற்று முறைக்காகவாவது அறப்போர் நிகழ்ச்சிகளை வரைந்து வைக்க வேண்டுமென்ற உணர்வுத் துடிப்பினல் தோன்றிய இந்நூலினை, ஒருபாற் கோடாமை சான்றோர்க் கணியென வாழ்வாங்கு வாழ்ந்த எம் அரிய நண்பரும், பாடசாலைப் பரிசோதகராகவிருந்து அமரரானவருமாய **கை. சிவபாதம்** அவர்கட்குக் காணிக்கையாக்குகிறோம்.

---

இப்பிரதி கொக்குவில் பொ. அப்பையா அவர்களால் தொகுக்கப் பெற்று, யாழ்ப்பாணம் நாஷனல் அச்சகத்தில் அச்சிட்டு, ஷை பொ. அப்பையா அவர்களால் வெளியிடப் பட்டது

# முன்னுரை

இன்று இலங்கையில் நடைபெறுகின்ற தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம், சென்ற பல வாரங்களாக நிகழ்ந்து வருகின்றது. அரசாங்க தகவல் இலாகாவும், அமைச்சரவையும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் காலத்துக்குக் காலம் வெளியிடும் அறிக்கைகள், வானொலிப் பேச்சுகள் போல்வன, பல உண்மைகளைத் திரித்துக் கூறுபவையாய் இருக்கின்றன. ஈழநாடு, வீரகேசரி, தினகரன் போன்ற தமிழ்த் தினசரிகளும், ரைம்ஸ் ஒவ் சிலோன், டெய்லி மிரர், டெய்லி நியூஸ், ஒப்சேர்வர் போன்ற ஆங்கில தினசரிகளும், சுதந்திரன், தாரகை போன்ற வார வெளியீடுகளும், அரசாங்கம் தரும் தகவல்களுக்கு முரணான புதினங்களையும், அரசாங்கம் வெளியிடாத பல செய்திகளையும் சேகரித்துப் பிரசுரிக்கின்றன. உண்மைத் தகவல்களைத் தருகின்ற இப்பத்திரிகைகளுக்கு தமிழ்பேசும் மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். வாழ்க பத்திரிகா தர்மம்!

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா முதலிய ஐந்து இடங்களிலும் நடைபெறும் மறியல் இயக்கத்தை, வடக்கு கிழக்கு மாகாண மக்கள் மிகப் பலர் நேரிலே கண்டுள்ளார்கள். ஆதலால், பத்திரிகைகளில் வரும் செய்திகள் பெரும்பாலும் உண்மையானவை என்றும், அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்படும் செய்திகள், பெரும்பாலும் உண்மை அற்றவையாயும், மறைப்புகள் உடையனவாயும் இருக்கின்றன என்பதை அறிவார்கள். ஆனால் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் உள்ளவர்களும், அயல்நாடு அந்நிய நாடுகளில் உள்ளவர்களும், எதை நம்புவது எதை நம்பாது விடுவது எதை அரசாங்கம் மறைத்துள்ளது என்று தெரியாது மயங்குகின்றனர்.

இவ்வெளியீட்டின் நோக்கம், தமிழ்பேசும் மக்களின் இம்மறியல் இயக்கம் தொடங்குவதற்கு உரிய காரணங்களையும், பின்னர் உண்டான விளைவுகளையும், பிறர் அபிப்பிராயங்களையும், கட்சிக் கண்கொண்டு நோக்காது சுருங்கக் கூறி, மக்களுக்கு இன்றைய நிலையை அறியத் தருவதேயாகும். இவ்வெளியீட்டில் விபரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் பல, எம்மால் நேரில் கண்டவையாயும் சில பத்திரிகைகளில் வெளிவந்தவையாயும் உள்ளன.

# தமிழ் உரிமை இயக்கத்தின் வரலாறு

## சோல்பரிக் குழுவினர் வகுத்த ஒற்றை ஆட்சித்திட்டம்

இலங்கை 400 ஆண்டுகளுக்கு மேல், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய அந்நியரின் ஆதிக்கத்தில் சிக்கி அடிமை நாடாக இருந்தது. இந்நாட்டின் நிரந்தர பிரஜைகளான சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் ஆகிய பல்வேறு இனக் குடிகளும் ஒன்று சேர்ந்து செய்த கிளர்ச்சியின் பயனாக, 1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திர நாடாயிற்று. அடிமை வாழ்வு நீங்கப்பெற்று சுதந்திர வாழ்வு வந்ததையிட்டு மக்கள் யாவரும் மகிழ்ந்தனர்.

ஆனால் ஒரு சில மாதங்கள் செல்லுமுன் அடைந்த சுதந்திரம் சிங்களவருக்கு மாத்திரமேயன்றி ஏனையோருக்கு இல்லை, என்பதை தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் ஆகிய சிறுபான்மையோர் உணரத் தொடங்கினர். சோல்பரிக் குழுவினர் வகுத்துச் சென்ற ஒற்றை ஆட்சித் திட்டம், பெரும்பான்மையோராகிய சிங்களவர்களிடமே சகல அதிகாரங்களையும் குவியச்செய்து, ஏனையோருக்கு அவர்கள் அளிக்கும் சில சலுகைகளையே பெற இடமளித்தது. ஆயினும் சில தமிழ்த் தலைவர்களும் முஸ்லீம் தலைவர்களும் சிங்கள மக்களோடு ஒத்துழைத்து, சிறுபான்மை இனமக்களும் இலங்கை அடைந்துள்ள சுதந்திரத்தின் பயனைப் பெறுவதற்கு வழிகோல முடியும் என எண்ணி, அரசவையிற் பங்கு கொண்டனர். சில ஆண்டுகளில் இவர்களும் சிறுபான்மையோருக்குப் பெரும்பான்மையோர், நேரிலும் மறைமுகமாகவும் செய்து வரும் பல அநீதிகளை அறிந்து தாமாகவே விலகிக்கொண்டனர். சென்ற சில ஆண்டுகளாக தமிழர் ஒருவரும் அமைச்சர் அவையிற் சேர்க்கப்படவில்லை, சேரவுமில்லை.

## மலைநாட்டுத் தமிழர் நாடற்றவர் ஆக்கப்படல்

இலங்கையில் கிட்டத்தட்ட 60 லட்சம் சிங்களவர்களும் 21 லட்சம் தமிழர்களும் 6 லட்சம் முஸ்லீம்களும நிரந்தர பிரசைகளாக வசித்த போதிலும், 11 லட்சம் மலைநாட்டுத் தமிழரை அரசாங்கம் இலங்கைப்பிரசைகள் அல்ல எனக்கொண்டு, அவர்களை நாடற்றவர் என்னும் நிலையில் வைத்துவிட்டது. மலைநாட்டுத் தமிழர் பரம்பரை பரம்பரையாக இந்நாட்டின் தேயிலை, றப்பர், கொக்கோத் தோட்டங்களில் வேலை செய்து இலங்கையின் பொருளாதாரத்தை வளப்படுத்தியவர் ஆவர். ஆங்கிலேயர் ஆட்சியிலே, 1948-ம் ஆண்டு வரையும், குடியுரிமை வாக்குரிமை பெற்று, இங்கு வசித்து வந்தவர்கள். இவர்களின் குடியுரிமை வாக்குரிமைகளை இச் சிங்கள அரசு அபகரித்ததோடு அமையாது. இப்போது மொழி உரிமையையும் அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மலைநாட்டுத் தமிழர்களை நாடற்றவர் ஆக்கியதே, இலங்கையில் தமிழினத்தை ஒழித்துக்கட்டச் சிங்கள அரசு முன்கூட்டியே தீட்டியுள்ள திட்டத்தின் முதல் நடவடிக்கை.

## முஸ்லிம் மக்களின் மொழி உரிமை

முஸ்லீம்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வசித்தபோதிலும், அவர்கள் தாய்மொழி தமிழ்மொழியேயாகும். பற்பல சலுகைகளை சிங்கள அரசு இந்த 6 லட்சம் முஸ்லிம்களுக்குக் கொடுத்து இவர்களை மொழிமாற்றம் செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இம்முயற்சிக்குச் சாதகமாக கொழும்புப் பகுதியில் வசிக்கும் சில முஸ்லீம் தலைவர்களைத் தன் வயப்படுத்தி, இவர்களைக்கொண்டு முஸ்லீம்கள் இனி மேல் தமிழ் மொழியைக் கைவிட்டு, சிங்கள மொழி மூலமே கல்வியைக் கற்க வேண்டும் எனப் பிரசாரஞ் செய்தது. முஸ்லிம் பாடசாலைகள் யாவற்றிலும் சிங்கள

ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு சிங்களம் ஒரு முக்கிய பாஷையாகப் படிப்பிக்கப்பட்டு வருகின்றது. பல பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமான சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுகின்றனர். இதனால் முஸ்லீம் பாடசாலைகளில் தமிழ்மொழிப் பயிற்சிக்குப் போதிய நேரம் நேரகுசியில் கொடுக்க முடியாதிருக்கிறது. இன்னும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில், இன்று தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படும் முஸ்லீம் பாடசாலைகள் பல, சிங்கள மொழியையே போதனை மொழியாகக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவே முஸ்லிம்களின் மொழி உரிமையும் அபகரிக்கப்படும் நிலை தீவிரமாக உருவாகின்றது. இது இந்நாட்டில் தமிழ் பேசும் இனத்தின் பலத்தைக் குலைக்க, சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்த இன்னொரு நடவடிக்கை என்று சொல்வது மிகையாகாது.

**தனிச் சிங்கள மசோதா**

சற்றேறக்குறைய 92 லட்சம் பேர் வசிக்கும் இவ் விலங்கைத் தீவில் 60 லட்சம் பேர் சிங்களம் பேசுவோராயும், 27 லட்சம் பேர் தமிழ் பேசுவோராயும், எஞ்சிய 5 லட்சம் பேர் பிறமொழிகள் பேசுவோராயும் இருக்கின்றனர். 1955-ம் ஆண்டு வரை இலங்கை முழுவதிலும் சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடையனவாக நடைமுறையில் இருந்தன. ஆயினும் 1956-ம் ஆண்டு இக்கொள்கை அரசாங்கத்தால் கைவிடப்பட்டு, தனிச் சிங்கள மசோதா, பெரும்பான்மைத் தனிச் சிங்கள பலத்தால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 1961-ம் ஆண்டு ஜனவரி முதலாந் திகதி தொடக்கம் பூரணமாக அமுல் செய்யப்படுகின்றது. இதன் விளைவாக, அரசாங்க சேவையில், சிங்கள பாஷையில் எஸ். எஸ். சீ. தரத்தை அடைந்தவரன்றி ஏனையோர் நிரந்தரமாகச் சேர்க்கப்படமாட்டார். உரிய அமைச்சர் சம்மதமளித்தால் அன்றி ஸ்தல ஸ்தாபனங்களிலோ நீதிமன்றங்களிலோ தமிழில் கருமங்கள் ஆற்றுதல் சலுகையி

னலன்றி உரிமையினுல் அல்ல. நீதியமைச்சர் திரு சாம். பீ. சீ. பெர்னண்டோ அரசாங்கக் கொள்கையை விளக்கிக் கூறிய வானெலிப் பேச்சில், தமிழை உபயோகிக்கத் தாராளமான வசதி உண்டு என்று கூறினரேயன்றிச் சட்டப்படி உரிமை உண்டு என்று கூறவில்லை. நீதிமன்ற நிகழ்ச்சிகள் தமிழில் நடத்தலாம் என்று கூறிய இவர் வழக்குப் பத்திரங்கள் மட்டும் சிங்களத்தில் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறார். தமிழ்ப் பிரதேசங்களில் கூட சட்ட சம்பந்தமான பத்திரங்களின் மூலப்பிரதிகள் சிங்களத்திலேயே இருத்தல் வேண்டும் என்பதுதான் சட்டம். ஆனல் சில காலத்துக்கு தமிழ் உபயோகிக்கப்படுவதை தடுக்கமாட்டார்கள் சிங்கள அரசார். சுருங்கக் கூறின், வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கை முழுவதிலும் சிங்களமே ஆட்சிமொழி. தமிழ் அந்நிய மொழி - அடிமை மொழி.

## தமிழரசுக் கட்சியும் உரிமை இயக்கமும்

### தமிழரசுக் கட்சியின் தோற்றம்

சோல்பரிக் குழுவினர் 1947-ம் ஆண்டு வகுத்துவிட்ட ஒற்றை ஆட்சித் திட்டம், பல மொழி பேசும் பல இன மக்கள் வாழும் எம் இலங்கை போன்ற நாட்டிற்கு உகந்ததல்ல, பெரிய தீங்கைச் சிறுபான்மை மக்களுக்குப் பயக்கக்கூடியது எனக்கொண்டு, முதலில் இருந்தே அத்திட்டத்தைப் பல தமிழ்த் தலைவர்கள் எதிர்த்தார்கள். இவ்வெதிர்ப்பின் விளைவாக 1948-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தோற்றியது. இப்புதிய கட்சியின் நோக்கம், இலங்கையில் ஒற்றை ஆட்சியை மாற்றிக் கூட்டாட்சியை ஸ்தாபிப்பது, தமிழ் மொழிக்கு இலங்கை எங்கும் சிங்கள மொழியோடு சம அந்தஸ்தைப் பெறுவது, தமிழ்பேசும் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்டு அரசாங்க உதவியோடு சிங்களமக்கள் குடியேறுவதைத் தடுப்பது, மலைநாட்டுத் தமிழரின் இழந்த குடி

உரிமை வாக்குரிமைகளை மீண்டும் பெறச்செய்வது என் னை. தமிழரசுத் தந்தை செல்வநாயகமும், மறைந்த போன அமரர் வன்னியசிங்கமும் வேறு பலரும் இக் கட்சியின் வளர்ச்சிக்கு மூலகாரணமாய் இருந்தனர். முதலில் இக்கட்சிக்குப் போதிய ஆதரவு இல்லாவிடி னும், காலப்போக்கில் கட்சிக் கொள்கைகளையும் தமிழ் பேசும் மக்களின் அவல நிலையையும் உணர்ந்த மக்கள் இக்கட்சியைப் பெரிதும் ஆதரிக்கத் தொடங்கினர்.

தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தைப் பற்றி "தின மின" என்னும் சிங்களத் தினசரியில் சில நாட்களுக்கு முன் வெளியிடப்பட்ட கட்டுரையின் சில பாகங்களை, சுதந்திரன் வார இதழில் தோற்றியவாறு தருகின்றோம். "இன்று தமிழ்பேசும் மக்களின் ஏகத் தலைவராக விளங்கு பவர், சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களே. பெடறல் கட்சியார் அவரை இலங்கையின் காந்தி என்பர், காந்தியல்ல ஜின்னா என்பர் மற்றையோர்... ..... நிமிடத்திற்கு ஒன்றோ இரண்டோ அடி வேகத்தில் நடந்து அங்கிங்கு பார்க்காது நடுங்கி நடுங்கி ஆசனத்தில் அமர்வதற்கே இரண்டு மூன்று நிமிடங்களைச் செலவிடும் அறுபத்துமூன்று வயதுடைய தமிழ்த் தலைவர் பேசுவதும் எவருக்கும் கேட்குமோ கேட்காதோ என்ற நிலையில் தான் இருக்கும். வசனத்திற்கு வசனம் தத்தளித்துக்கொண்டே பேசுவார். அப்படியிருந்தும் பேச்சுக்களைக் குளப்பி வரும் எந்த இளம் பிரதிநிதியாவது அவரின் பேச்சுக்குத் தடை செய்வதில்லை. அது, செல்வா இன்றிருக்கும் ஒரேயொரு தமிழ்த்தலைவர் ஆனமையினால் தான். இதனாலேயே தமிழர் சம்பந்தமான விஷயங்களில் செல்வா என்ன சொல்வாரோ என்று எதிர்பார்க்கப்படுகிறது. . . . . . . தமிழ் மக்களின் ஜென்ம விரோதி சோல்பரி அரசியல் திட்டம் என்று செல்வநாயகம் சொல்லுகிறார். அத்திட்டத்தின்படி சிங்கள வர்களுக்கு எப்போதுமே பெரும்பான்மை கிடைக்குமென் றும், தமிழர்களுக்குத் தங்கள் விருப்பு வெறுப்புகளுக் கிணங்க நடக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பெடறல் அரசியல் திட்டம் தேவை என்பதும் அவர் கொள்கை,, தமிழ பேசும மககள பலராலும் தமிழரசுத

தந்தை என்று அன்புகனிய அழைக்கப்படும் செல்வநாயக தீவிர வாதிகள் பலரிடையே அகப்பட்டுக்கொண்ட ஒ மிதவாதி ஒரு சிறிய எறும்புக்கும் துன்பம் உண்டாவதை காணச் சகிக்காத மனப்பண்பை உடையவர். பொறு மைக்கும் நேர்மைக்கும் உறுதிக்கும் உறைவிடமாய் உள ளவர். அரசியல் தூரதிருஷ்டி அபாரமாக இவரிடம் உண்டு. சந்தனமரக் காட்டிலே வளர நேரிட்ட ஒரு நச்சு மரமும் தன் தன்மை இழந்து சந்தன மணம் கமழ்தல்போல, பதவி மோகம் அதிகார வேட்கை காரணமாக கட்சியில் நுழைந் தோர்கூட, தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தின் கூட்டுற வால் தியாகசீலர்களாகி விடுகிறார்கள்.

## தமிழரசுக் கட்சி நடவடிக்கைகள் பயனற்றுப்போயின

சென்ற 12 ஆண்டுகளாக அரசியல் மயக்கத்தில் இருந்த தமிழ் பேசும் மக்களைத் தட்டி எழுப்பி, யாழ்ப் பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவு னியா, மலைநாடு, மேற்குக் கரையோரப் பகுதி என இலங் கையின் பல்வேறு பகுதிகளிலும் சிதறிக் கிடந்த தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி, விடுதலை உணர்ச்சியை ஊட்டி, இழந்த உரிமைகளைப் பெறுவதற்குத் தீவிரமாக முனைந்த கட்சி தமிழ் அரசுக் கட்சி. பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியிலும் தமிழ்பேசும் மக்களின் அவல நிலையையும், சிங்கள அரசின் அநீதியான போக்கையும் இக்கட்சி அம்பலப்படுத்தியது. பெரும்பான்மைப் பலத் தால் சிறுபான்மையோருக்குத் தீங்கு பயக்குஞ் சட்டங் களை உண்டாக்கியபோதெல்லாம் எதிர்ப்புக் குரல் எழுப் பியது இக்கட்சி

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப்பெற இது ஒரு முதற்படி என்று நம்பி, முன்னாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவோடு தமிழரசுக்கட்சி ஒரு ஒப்பந்தம் செய்தது யாவருமறிந்ததே. ஆனால் சில வாரங்களில் இவ்வொப்பந்தம் ஒருதலைப் பட்சமாக திரு பண்டாரநாயக்காவால் நிராகரிக்கப்பட்டுக் கிழித்தெறியப் பட்டது. பின்பும், சிங்கள அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்திச் சிறுபான்மையினரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண

தந்தை என்று அன்புகனிய அழைக்கப்படும் செல்வநாயகட தீவிர வாதிகள் பலரிடையே அகப்பட்டுக்கொண்ட ஒ மிதவாதி ஒரு சிறிய எறும்புக்கும் துன்பம் உண்டாவதைச் காணச் சகிக்காத மனப்பண்பை உடையவர். பொறு மைக்கும் நேர்மைக்கும் உறுதிக்கும் உறைவிடமாய் உள ளவர். அரசியல் துரதிருஷ்டி அபாரமாக இவரிடம் உண்டு. சந்தனமரக் காட்டிலே வளர நேரிட்ட ஒரு நச்சு மரமும் தன் தன்மை இழந்து சந்தன மணம் கமழ்தல்போல, பதவி மோகம் அதிகார வேட்கை காரணமாக கட்சியில் நுழைந் தோர்கூட, தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தின் கூட்டுற வால் தியாகசீலர்களாகி விடுகிறார்கள்.

## தமிழரசுக் கட்சி நடவடிக்கைகள் பயனற்றுப்போயின

சென்ற 12 ஆண்டுகளாக அரசியல் மயக்கத்தில் இருந்த தமிழ் பேசும் மக்களைத் தட்டி எழுப்பி, யாழ்ப் பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவு னியா, மலைநாடு, மேற்குக் கரையோரப் பகுதி என இலங் கையின் பல்வேறு பகுதிகளிலும் சிதறிக் கிடந்த தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி, விடுதலை உணர்ச்சியை ஊட்டி, இழந்த உரிமைகளைப் பெறுவதற்குத் தீவிரமாக முனைந்த கட்சி தமிழ் அரசுக் கட்சி. பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியிலும் தமிழ்பேசும் மக்களின் அவல நிலையையும், சிங்கள அரசின் அநீதியான போக்கையும் இக்கட்சி அம்பலப்படுத்தியது. பெரும்பான்மைப் பலத் தால் சிறுபான்மையோருக்குத் தீங்கு பயக்குஞ் சட்டங் களை உண்டாக்கியபோதெல்லாம் எதிர்ப்புக் குரல் எழுப் பியது இக்கட்சி

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப்பெற இது ஒரு முதற்படி என்று நம்பி, முன்னாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவோடு தமிழரசுக்கட்சி ஒரு ஒப்பந்தம் செய்தது யாவருமறிந்ததே. ஆனால் சில வாரங்களில் இவ்வொப்பந்தம் ஒருதலைப் பட்சமாக திரு பண்டாரநாயக்காவால் நிராகரிக்கப்பட்டுக் கிழித்தெறியப் பட்டது. பின்பும், சிங்கள அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்திச் சிறுபான்மையினரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண

திரு. இராசமாணிக்கம் தமது தலைமைப் பேருரையில் கூறியவை கூர்ந்து கவனிக்கத்தக்கவை. "எம்மை எதிர்நோக்கியிருக்கும் அதிமுக்கியமான இவ்வாண்டிலே இரத்தம், வியர்வை, கண்ணீர் - இவற்றைத் தவிர வேறு எதுவும் கிடைக்குமென்று நான் உறுதிகூற முடியாது. எமது மாகாணங்களில் கூட சிங்களத்தைத் திணிக்கும் ஆட்சியாளரின் அக்கிரமத்தை எதிர்த்துச் சாத்வீக ஒத்துழையாமையையும் சட்டமறுப்பு இயக்கத்தையும் மேற்கொள்ள எமது கட்சியின் நடவடிக்கைக் குழு தீர்மானித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். எமது பிற்சந்ததியினருக்கு, இன்னும் பிறவாத பைந்தமிழ்ச் சிசுக்களுக்கு, நாம் செய்ய வேண்டிய புனிதமான கடமை இவ் வட்டுழியத்தைத் தடுத்து நிறுத்துவது. இந் நாட்டிலே சுதந்திர புருஷர்களாக, தன்மானமுள்ள மக்களாக, சிங்கள மக்களோடு சரிநிக சமானமாக வாழுவோம், அல்லது அதற்காகப்போராடி மாளுவோம். எமது தாய் நாட்டில் நாம் இரண்டாந்தரப் பிரசைகளாக வாழமாட்டோம், என்பதை எங்கள் சிங்களச், சகோதரர்களுக்குத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்."

## தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தின் அறிக்கை

தமிழரசுத் தந்தை செல்வநாயகம் இத் தமிழுரிமைப் போராட்ட நேரடி நடவடிக்கைகள் ஆரம்பித்தபோது விடுத்துள்ள ஓர் அறிக்கையிற் கூறியிருப்பதும் எல்லாத் தமிழ்பேசும் மக்களது கவனத்திற்கும் உரியது. அதன் ஒரு பகுதி பின் வருமாறு:- "எங்கள் நேரடி நடவடிக்கைகளின் விளைவுகளை எதிர்நோக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். விளைவுகள் பாரதூரமானவையாய் இருக்கலாம். அது தவிர வேறு வழியில்லை. செயலில் இறங்காமல் தட்டிக் கழிப்பது எங்கள் மக்கள் எங்கள்மீது வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்ததாகும். மக்கள் மீதும் தொண்டர்கள்மீதும் பூரண அடக்குமுறை நடவடிக்கைகளை அவிழ்த்துவிட்டு மனிதவேட்டை ஆடக்கூடிய சக்தியும் வேட்கையும் அரசாங்கத்திடம் உண்டு என்



களம் நோக்கி விரையும் கல்லூரி வாலிபர்கள்,

பதில் எமக்குச் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தமிழ்பேசும் மக்கள் எங்கள் கொள்கைகளையும் நோக்கங்களையும் நடவடிக்கைகளையும் உதாசீனம் செய்தாலொழிய **வெற்றி நிச்சயம்"**

தமிழரசுக்கட்சியின் நேரடி நடவடிக்கை தொடங்குதல் பற்றி பலவாரங்களுக்கு முன்னதாகவே அரசாங்கத்திற்குத் தெரியும். ஆயினும், தமிழ்பேசும் மக்களுடைய விருப்பு வெறுப்புகள் பற்றியோ கோரிக்கைகளின் நியாய அநியாயங்கள் பற்றியோ அரசாங்கம் ஒரு சிறிதேனும் அக்கறை காட்டவில்லை. இந்தச்சுண்டங்காய்க் கிளர்ச்சியை சுண்டுவிரலால் நசுக்கிவிடுவோம் என்னும் அகம்பாவ போதையில் மூழ்கியிருந்தது. தமிழ்பேசும் மக்களின் நியாயமான குறைகளை நீக்கிப் போதிய அவகாசம் கொடுக்கப்பட்ட போதிலும், காலத்தை கட்சியைத் திட்டுவதில் பயன்படுத்திற்றே அன்றி குறைகளை ஆராய முன்வர வில்லை.

## முதல் நாள் கச்சேரிமுன் மறியல்.

### தொண்டர்களும் பொதுமக்களும் பொலிஸ்படையும்

யாழ்ப்பாணக் கச்சேரிமுன் மறியல் இயக்கம் 20-2-61 திங்கட்கிழமை அதிகாலையில் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் தலைமையில் ஆரம்பமாயிற்று. 200 தொண்டர்கள் கட்சிப்பெயர் பொறிக்கப்பட்ட பட்டிகளை அணிந்துகொண்டு கச்சேரி வாயல்கள் எல்லாவற்றையும் தடுத்து வீற்றிருந்தார்கள். தேவார திருவாசகங்களையும் வேறு பக்திப்பாடல்களையும் கூட்டாகப்பாடிய வண்ணம் இருந்தனர். இந்த அறப்போர் அணியைக் காண்பதற்காக 3000 திற்கு மேற்பட்ட மக்கள் வீதிகளின் இரு மருங்கிலும் சூழ்ந்து நின்றனர். ஆயினும் வாகனப் போக்கு வரத்திற்கோ, சன நடமாட்டத்திற்கோ ஒரு சிறிதேனுந் தடை ஏற்படவில்லை, சத்தியாக்கிரகிகள், கட்டுப்பாட்டுடன் வீற்றிருந்ததில் வியப்பில்லை ஆனல்

பொதுசனங்களும் ஒழுக்கமாக நடந்து கொண்டது பெருமைக்குரியது. சத்தியாக்கிரகிகள் கச்சேரிவாசலை அடைதற்கு முன்பே கிட்டத்தட்ட 50 பொலீஸ் படையினர் இரும்புத் தொப்பி, குண்டாந்தடி, துப்பாக்கி சகிதமாக கச்சேரிமுன் ரோர்ந்து சுற்றித் திரிந்தனர். சுழல் துப்பாக்கியும் கண்ணீர்ப்புகை பரப்பும் சாதனமும் கூடவே இருந்தன. யாழ்ப்பாணப் பொலீஸ் அதிகாரியின் அறிக்கைப்படி 53 பொலீஸ்காரர்கள் அன்று கடமையாற்றினர். இவர்களில் 13 பேர் மாத்திரமே தமிழர்கள் என பொலீஸ் அதிகாரி கூறினர்.

**தடியடிபற்றி வீரகேசரி நிருபர் வர்ணனை**

காலை 10 **மணிவரையில்** யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் பொலீஸ் அதிகாரியும் கச்சேரி வளவிலிருந்து ஒரு ஜீப்பில் வெளியே வர முயன்ருர்கள். வாயிலில் மறியல் செய்த தொண்டர்கள் வழி விட்டுக் கொடுக்கவில்லை. பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகத்தில் இறங்கினர்கள். வீரகேசரி நிருபரின் வர்ணனை பின் வருமாறு: "குண்டாந்தடியால் அடிக்குஞ் சத்தமும், அதனல் உண்டான வேதனைக்குரலும் மாறி மாறி ஒலித்த யாழ்ப்பாணக் கச்சேரி வாயில், சில சமயங்களில் பஜனைக் கூடமாகவும் காட்சியளித்தது. வலி தாங்க மாட்டாத சமயங்களில் எல்லாம் தொண்டர்கள் சிவ நாமத்தை உச்சரித்துத் தேவார திருவாசகங்களைப் பாடினர். ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் இணைந்தவண்ணம்தேசீய கீதங்களை முழங்கிய போதெல்லாம் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தூஷித்துக் கொண்டே அகப்பட்ட அங்கங்களைப் பிடித்து இழுத்தார்கள், சில தொண்டர்கள் நிர்வாண மாக்கப்பட்டார்கள்............... அரசாங்க அதிபர் ஏறிவந்த ஜீப் வண்டியைத் தடுப்பதற்கு பருத்தித்துறை எம். பீ திரு. துரைரத்தினம் முன் சக்கரத்துக்கு அணையாக தனது காலைக் கொடுத்தும் நல்லூர் எம். பீ. திரு. டக்டர். நாகநாதன் கிடைத்த தாக்

குதல்களை எல்லாம் பொருட்படுத்தாமல் சமாளித்தும் மயிர்க்கூச்செறியும் சம்பவங்களாக இருந்தன. வட்டுக் கோட்டை எம். பீ. திரு. அமிர்தலிங்கத்தின் சட்டையைப் பொலீசார் துண்டு துண்டாகப் பிய்த்தெறிந்தனர், இத் தனைக்கும் சிகரம் வைத்தாற்போல, பொலீசாரின் மித மிஞ்சிய தாக்குதலுக்கு இலக்கானவர் நீர்கொழும்பைச் சேர்ந்த திரு. பிரான்சிஸ் - பெரேராவாகும், காலை 9 மணியி லிருந்து 12 மணிக்கிடையில் அவர் சுமார் 50 தடவைக்கு மேல் தரையில் இழுக்கப்பட்டார். இவ்வாறெல்லாம் மனித சுபாவத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நடந்தும் ................இரும்பு மனிதன் என்று வர்ணிக்கப்படும் டக் டர் நாகநாதனிடம் பொலீசாரின் குண்டாந்தடி தோற்று விட்டது. அவர் மீது ஓங்கிப் பலதடவை ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் அடிக்கவே, அதைத் தாங்கமாட்டாத குண் டாந்தடி இரண்டாக முறிந்தது, அதன் கைப்பிடிப்பக் கத்தை அந்த இரும்பு மனிதன் ஒரு ஞாபகார்த்தப் பொருளாகத் தன்னுடன் வைத்துக் கொண்டார்."

## கண்ணீர்ப் புகையும் துப்பாக்கி வேட்டும்

பொலீசார், ஒரு வித எதிர்ப்புமின்றி சாத்வீக முறையில் தரையிலே வீற்றிருந்தவர்களையும், படுத்திருந் தவர்களையும், அரிசி மூட்டைகளைத் தூக்கி எறிவதுபோல் தலையிலும் கால்களிலும் பிடித்துத் தூக்கித் தூக்கி எறிந் தார்கள், அழுக்கு நீர் ஓடுகின்ற வடிகால்களில் தொண் டர்களை வீசினர்கள். இது பயன் தராது விடவே, குண் டாந்தடியடிப் பிரயோகத்தில் மும்முரமாக ஈடுபட்டார் கள், மண்டைகள் உடைந்தன, எலும்புகள் நொருங்கின, கைகள் முறிந்தன, தோள் பட்டைகள் இடம் பெயர்ந் தன, இரத்தம் துடித்து, ஆத்திரமடைந்த சனங்கள் ஆர வாரித்தனர், சிலர் கற்களைப் பொலீசார் மீது வீசினர், பொலீசாரும் கற்களை மக்கள்மீது வீசினர், கல் மழை பொழிந்தது, பொலீசார் மும்முறை துப்பாக்கிகளால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர் ...

ரில்லை. கண்ணீர்ப் புகை பலதரம் பொலீசாரால் தூவப் பட்டது, சனங்கள் தளர்ந்தனர், தொண்டர்கள் சோர்ந் தனர், கண்ணீர்ப்புகை சூழ்ந்தது. சனங்கள் சற்றுப் பின் வாங்கியதை அறிந்து, பொலீசார் வெற்றிப் பெருமிதத் தோடு தமது குண்டாந் தடிக் கைவரிசையை மீண்டும், அறிவற்று மூர்ச்சையாய் தரையில் கிடந்த தொண்டர் மீது புதுத்தெம்போடு காட்டத் தொடங்கினர். தொண் டர்கள் பலர் உணர்ச்சியற்றுக் குற்றுயிராய்க் கிடந்த தால் அவர்களைத் தூக்கி எறிவது இப்போது சற்று எளிதாகி விட்டது. வழி ஏற்படுத்தப்பட்டது. அரசாங்க அதிபர் ஜீப்பில் வெளியே வந்து மேலே சென்றார்.

## முதல் நாள் போரிலே விழுப்புண்பெற்ற வீரர்கள்

இந்த முதல் நாள் நடைபெற்ற அறப்போரிலே நூற் றுக்கு அதிகமானோர் காயமடைந்தனர் என்று கருதப்படு கிறது. சுதந்திரன் பத்திரிகை 5 எம். பீக்களும் 52 தொண்டர்களும் காயமடைந்தனர் என, அவர்களின் பெயர், முகவரி முதலியவற்றோடு காயங்களின் விபரங் களையுந் தந்து தகவல் வெளியிட்டிருக்கிறது. பொலீஸ் அறிக்கையின்படி 2 பொலீஸ் அதிகாரிகளும் 13 பொலீஸ் காரரும் காயம் அடைந்தனர் எனத் தெரியவருகிறது. அரசாங்க ஊழியரில் 10 பேர் காயமடைந்தனர் என அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த 82 பேரைவிட பொதுசனங்களில் 25 பேருக்கு அதிகமானோர் காய மடைந்து சிகிச்சை பெற்றனர். இதைப்பற்றி அதிகார பூர்வமாக ஒருவருக்கும் தெரியாது. தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் 16 பேர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரி யிலேயே தங்கிச் சிகிச்சை பெறவேண்டி இருந்ததாக சுதந்திரன் கூறியிருக்கிறது. இவர்கள் சிலர் இன்னும் ஆஸ்பத்திரியிலேயே இருக்கின்றனர். சிலரைப் பொலீ சார் ஏறி மிதித்துத் துவைத்ததினால் ஆண் குறிகளிற் பலத்த காயங்கள். பொலீசார் கொலை செய்யவில்லை



"இதயம் மீது குண்டு பிறி உதிரஞ்சிந்தி அழியினும் அடிமையாகிப்
புறங்கொடுப்ப தெங்கள் மரபல்லவே" என்கிறார்கள்
படுத்துக் கிடக்கும் "அரசு"வும் எதிர்த்து நிற்கும் மறவனும்.

என்பது உண்மைதான் ஆனல் தொண்டர்களை மனிதத் தன்மையற்ற முறையில் வதை செய்தார்கள்.

**அரசாங்க தகவல் இலாகா தந்த நப்பறிக்கை:**

யாழ்ப்பாணப் பொலீஸ் அதிகாரி கொடுத்த தகவலைத் தழுவி அரசாங்க தகவல் இலாகா விடுத்த அறிக்கையின் சில பகுதிகளைத் தருகின்றேம். " இன்று (20-2-61) காலை 10-15 மணிக்கு அரசாங்க அதிபர் பொலீஸ் அதிகாரி சகிதமாக தனது இருப்பிடத்திலிருந்து சுப்றீம் கோட்டுக்குப் போவதற்கு பொலீஸ் ஜீப் ஒன்றில் புறப்பட்டார். தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் வழியை மறித்துத் தடுத்தனர். சுற்றியிருந்த சனக்கும்பல் கற்களைப் பொலீசார் மீது வீசினர். குறுந்தடிப் பிரயோகம் செய்யப்பட்டதின் பயனக தொண்டர்களும் சனங்களும் கலைந்தனர். அரசாங்க அதிபர் வெளியே சென்றூர். மூன்று தரம் கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப் பட்டது. 13 பொலீஸ்காரர்களும் ஒரு உதவி பொலீஸ் அதிகாரியும், பொலீஸ் அதிகாரியும் கற்கள் வீசப்பட்டதால் காயமடைந்தனர். ஜீப்பின் முன் கண்ணடி பழுதடைந்தது. காயமுற்றேர் 45 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகப் பின்னர் தகவல் கிடைத்தது. டக்ரர் நாகநாதன், திரு. அமிர்தலிங்கம், திரு. தர்மலிங்கம் ஆகிய எம். பீ. மாரும் காயமடைந்தனர். கச்சேரி நாள் முழுதும் தடைபெற்றுக் கொண்டிருந்தது, ஒருவரும் கைது செய்யப் படவில்லை, ஆனல் சிலரை வலோற்காரமாக, பாதை உண்டாக்கும் பொருட்டு அகற்றவேண்டியிருந்தது.

மேலே சுட்டிக் காட்டியவற்றிலிருந்து மறியலில் பங்குகொண்டோர் அரசாங்க அதிபரை தனது கடமையைச் செய்வதிலிருந்து தடை செய்தது மாத்திரமன்றி, பொலிசாரையும் கடமையைச் செய்யவிடாது தடுத்து, பலாத்காரச் செயலில் இறங்கி, ஜீப் வண்டிக்குக் கற்களை வீசினர்கள் என்பது தெளிவாகிறது."

**தமிழரசுக் கட்சிப் பொதுக்காரியதரிசியின் மறுப்பு:**

இந்தப் பொலீஸ் சார்பாய் வெளியிடப்பட்ட அறிக்கையிலே மறைப்புகள் பலவும், உண்மை அல்லாதவை சிலவும், இருத்தலை நிகழ்ச்சிகளை நேரே பார்த்த நாங்கள் அறிவோம். தமிழரசுக் கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. வீ. நவரத்தினம் இவ்வறிக்கையை மறுத்து விடுத்துள்ள ஓர் அறிக்கையைத் தருகின்றோம். "20ம்திகதி திங்கட்கிழமை நடைபெற்றுள்ள சம்பவங்கள் பற்றிப் பொலீசாரும் தகவற் பகுதியினரும் வெளியிட்ட அறிக்கைகள் உண்மைக்கு மாருக இருப்பது கண்டு நாம் வருந்துகின்ரோம்.

யாழ்ப்பாணக் கச்சேரியின் பல வாயில்களிலும் அமைதியாக சமாதான முறையில் அமர்ந்து மறியல் செய்த சத்தியாக்கிரகிகளை "ஆர்ப்பாட்டக்காரர்" என்று வர்ணிப்பது தவறு. தவருன கருத்தைப் பிரதிபலிப்பதற்காக ஆங்கில வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கட்டத்திலாவது சத்தியாக்கிரகிகள் கற்களை வீசினர்கள் என்றே, பலாத்காரத்தில் ஈடுபட்டார்கள் என்றே கூறுவது முற்றிலும் உண்மைக்கு மாருனது.

அரசாங்க அதிபரும் பொலீஸ் சுப்பிரின்டென்ரும் ஏறிவந்த ஜீப் வண்டி வாயிலை அடைந்தபோது, வாயிலிலிருந்து சத்தியாக்கிரகிகளை பொலீசார் உதைத்து இழுத்து வடிகால்களில் தூக்கிப் போட்டனர். சத்தியாக்கிரகிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மனிதத் தன்மை அற்றதாகவும் மிருகத்தன்மையானதாகவும் இருந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் பலர் கண்ணீர் விட்டனர்.

வாகனஞ் செல்வதற்கு வழியேற்படாததால் குறுந்தடிப் பிரயோகம் மேலும் உக்கிரமாக நடைபெற்றது.

அதன்பின் பாதையின் எதிர்ப்பக்கத்தில் பார்த்துக் கொண்டு நின்றவர்கள் பகுதியிலிருந்தும், கச்சேரியி னுள்ளே பொலிசார் இருந்த பகுதியிலிருந்தும் கற்கள் விழ ஆரம்பித்தன. சில பொலிசார் கற்களைப் பொறுக்கி பார்வையாளர்மீது வீசுவதும் தெரிந்தது. குறுந்தடிப் பிரயோகத்தால், கற்கள் விழுவதையும் பொருட்படுத்தா மல், சத்தியாக்கிரகிகள் நிலத்திலேயே படுத்தனர். சத்தி யாக்கிரகிகளைத் தூக்கி ஒரு பக்கமாக அகற்றிவிட்டு, அரசாங்க அதிபருக்கு வழி விடப்பட்டது.

சத்தியாக்கிரகிகள் என்ற வகையில் நாங்கள் முறை யீடெதுவுஞ் செய்ய விரும்பவில்லை. ஆனால் உண்மை நிலை பரம் திரித்துக் கூறப்படுவதையும், உண்மையை மறைப் பதையும் நாம் மறுக்காமல் விடமுடியாது."

## பொலீஸ் தாக்குதல் திட்டமிட்டுச் செய்த செயலா?

**ஒருவரும் கைது செய்யப்படவில்லை.**

சத்தியாக்கிரகம் தொடங்கி முதல் நாளே, மூன்று மணித்தியாலங்களுக்குள், 100 பேருக்குமேல் காயமடை யக்கூடிய இந்தப் பொலீஸ் தாக்குதல், முன்னமே திட்டமிட்டுச் செய்யப்பட்டாகது என்று கொள்வது முடி யாததாயிருக்கிறது. பொலீஸ் அதிகாரி தனது அறிக் கையில், ஒருவரும் கைது செய்யப்படவில்லை எனக்கூறி னார். ஏன்? அவருடைய அறிக்கைப்படி தொண்டர்கள் சட்டத்தை மீறினர்கள் என்றும், சனங்கள் கலவரநிலை யை உண்டாக்கினர்கள் என்றும் தெரிகிறது. இது உண்மையானால், தொண்டர்களிலும் சனங்களிலும் சில ரையாவது கைது செய்திருக்கவேண்டும், இப்படிச்செய்

யவில்லை. குண்டாந்தடிப் பிரயோகம் நடந்தது, கண்ணீர்ப்புகை உபயோகிக்கப்பட்டது, துவக்கு வேட்டு தீரவேண்டியிருந்தது. ஆனால் ஒருவராவது கைது செய்யப்படவில்லை. மீண்டும் கேட்கிறோம், ஏன்? என்று.

சட்டத்தை மீறுபவர்களையும் குற்றங்கள் செய்வோரையும் நீதிமன்றம் தண்டிப்பதா, அல்லது பொலீசாரே நீதிமன்றத்தின் அதிகாரங்களையும் உரிமைகளையும் சுவீகரித்துத் தாங்களே தண்டிப்பதா? தொண்டர்கள் சட்டங்களை எதிர்த்தார்கள், உண்மைதான். ஆனால் அரசாங்க அதிபரையோ போலீஸ் அதிகாரியையோ பலாத்காரத்தை உபயோகித்து எதிர்க்கவில்லை. கச்சேரி வாயில்களைத் தடைசெய்தார்கள், உண்மைதான், ஆனால் பொலீசார் தங்களைக் கைது செய்வதைத் தடைசெய்யவில்லை இரு கைகளையும் தூக்கிக் கைகூப்பி வணங்கி விலங்கு மாட்டக் கொடுத்திருப்பார்கள்.

ஆகவே தமிழரசுக்கட்சி ஆரம்பித்த, சத்தியாக்கிரகத்தை முளையிலே கிள்ளி எறியவேண்டுமென்ற திட்டமொன்று, முன் கூட்டியே தீட்டப்பட்டதென்பது தெளிவாகின்றது. அத்திட்டத்தின்படி சத்தியாக்கிரகிகளை அடித்து, நொருக்கி, மிதித்துத் துவைத்தால் அவர்கள் பணிந்து விடுவார்கள் எனக் கருதப்பட்டது. கொழும்பில் 1956ம் ஆண்டு தமிழரசுக்கட்சித் தொண்டர்களால் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகம், ஏவிவிடப்பட்ட குண்டர்களின் இவ்வித காடைத்தனமான நடவடிக்கையால் தொடங்கி ஒருசில மணித்தியாலங்களில் கைவிடப்பட்டதென்பதை அப்போது அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற பொலீஸ் படையினர் கண்டிருக்கிறார்கள். ஆகவே குண்டர்களும் காடையர்களும் அன்று அங்கு கையாண்ட முறையே, இன்று இங்கு பொலீசார் கையாண்டால், உடனுக்குடன் பலன் கிடைக்கும் எனத் தப்புக் கணக்குப் போட்டு விட்டார்கள்.

சுதந்திரன் தந்த தகவல்.

"திங்கள் நடந்த பொலீஸ் அட்டூழியத்துக்கு முதல் வியாழனே திட்டம் தீட்டினர்" என்ற தலையங்கத்தோடு 26-2-61ம் திகதியில் வெளிவந்த சுதந்திரன் வார வெளியீட்டின் முதற் பக்கத்தில் தந்துள்ள தகவலை அப்படியே தருகின்றோம். "யாழ்கச்சேரி முன் திங்கட்கிழமை (20 2-61) மிக அமைதியாக மறியல் செய்த தொண்டர்களைப் பொலீசார் அடித்து உதைத்து துவைத்து மிருகத்தனமாகச் சித்திரவதை செய்வதற்கான திட்டம் கொழும்பில் அதற்கு முந்திய வியாழக்கிழமையே (16-2-61ல்) தீட்டப்பட்டதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று உயர்தர அரசாங்க அதிகாரிகள், பொலீஸ், மந்திரி மைத்திரிபால சேனநாயகாவுக்கு விசேஷமாக ஆலோசனை கூறக் கொழும்பு வந்தார்கள் என்றும் திரை மறைவில் மிக அந்தரங்கமாக எல்லாம் பேசி முடிவு கட்டப் பட்டது என்றும் அறியவருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீகாந்தா உயர்தர அதிகாரி திரு. இலங்கநாயகம் யாழ் பொலீஸ் சுப்பிரின்ரென்டென்ற் ஆன்ற் ஆகியோர் கொழும்பு வந்து, மந்திரி மைத்திரிபாலாவைச் சந்தித்து சென்றதாகத் தகவல் எட்டியுள்ளது. யாழ்ப்பாண நிலைமை விஸ்தாரமாகவும் விளக்கமாகவும் மந்திரிக்குத் தெரிவிக்கப்பட்டதாம்.

தமிழரசுக் கட்சியினரின் நேரடி நடவடிக்கை இரண்டாங் கட்டமான மறியல் ஏற்பாட்டைச் சமாளிக்க யாழ்ப்பாணப் பொலீஸ் போதாது என்றும், மேலதிகமானோர் தேவை என்றும், அவர்களும் தமிழ்ப் பொலீஸ்காரராக அல்லாது சிங்களப்பொலீஸ்காரராகவே இருக்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டதாம். அது ஆகட்டும் என்று மந்திரி தெய்வத்திருவாய் மலர்ந்து அருளப் பட்டதாகத் தெரிகிறது.

## சபாஸ் பெற்ற "ஐடியா"

சிங்களப் பொலிஸ் போய் என்ன செய்வது என்ற பிரச்சனை எழுந்தபோது "என்ன செய்வதாவது.......................... எதுவும் செய்யவேண்டியதில்லை வருகிறவர்களுக்குச் சரியாகப் போட்டுப் பிடித்தோமானல் எல்லாம் சரியாகிவிடும். அப்புறம் ஒருவருமே நிற்கமாட்டார்கள். வடக்கில் தமிழரசுக் கட்சிக்குச் செல்வாக்கு இல்லை ஆனல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு மட்டும் அபிமானிகள் கூட்டமொன்று இருக்கிறது, அவ்வளவுதான்.

கட்சிக்கு அமைப்பு கிமைப்பு ஒன்றும் கிடையாது தொண்டர்கள் என்று சொல்வதற்குக்கூட அப்படி ஒன்றும் ஆட்கள் இல்லை, கூலிப்பட்டாளத்தோடு காலாட்சேபம் நடத்துகிருர்கள். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு பாட்டம் பொலிஸ் கெட்டியாக நடவடிக்கை எடுத்தாற் போதும், எல்லாரும் ஓட்டம் பிடிப்பார்கள். அதுதான் யாழ்ப்பாணம், எனக்கு நன்ருகத் தெரியும் ஐயா என்று ஒரு அதிகாரி முழக்கித்தள்ளிஞராம். கிடைத்தது சபாஸ். அப்படியே ஆகட்டும் என்ற அங்கீகாரமும் வழங்கப்பட்டதாம்.

இதை வைத்துக்கொண்டுதான் கொழும்பு டிப்போ பொலிசிலிருந்து அனுப்பப்பட்ட சிங்களப் பொலிசாரின் உதவியோடு 20ம் தேதி கச்சேரிமுன் மறியல்செய்த தொண்டர்களை வேண்டியபடி சித்திரவதை செய்தார்கள். அப்படியிருந்தும் எந்தத் தொண்டரும் பயந்து ஓடவில்லை, மாருகப் போராட்டத்தில் மேலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிருர்கள்.

அரசாங்கத் தரப்பில் எதிர்பார்த்தபடி ஒரு நாளோடு, ஒருபாட்டம் பொலிஸ் நடவடிக்கையோடு

முடியவேண்டியது. பொது மக்களின் ஆதரவோடு தொடர்ந்து நடைபெற்று, கச்சேரி நிர்வாகமே அடியோடு நடைபெருமல் ஸ்தம்பிக்கச் செய்துவிடவே, இனி என்ன செய்யலாம் என்று தெரியாமல் அரசாங்கம் விழிக்கிறது, பொலிசார் அடித்துப் பயனில்லை என்று விலகி நிற்கிருர்கள்....."

## அரசாங்க ஊழியர் மீது பொலீஸ் கைவரிசை

### அறப்போரும் அரசாங்க ஊழியரும்

இந்த அறப்போர் தொடங்கிய முதல்நாளன்று நடந்த இன்னெரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. கச்சேரிமுன் மறியல் காலை 7-30 மணிக்கு ஆரம்பமானது. அரசாங்க ஊழியர் சிலர் இந்த நேரத்திற்கு முன்பே கச்சேரிக்குட் சென்று விட்டனர். ஆனல் மிகப்பல ஊழியர் வழக்கம்போல 8-30 மணியளவில் கச்சேரிக்குமுன் வந்தனர், உட்பிரவேசிக்க முயன்றனர், சத்தியாக்கிரகிகளால் தடுக்கப்பட்டனர், இவர்கள் செய்வது இன்னதென்று அறியாது திகைத்துவெளியே சென்றனர், இப்படி வெளியே நின்றவர் தொகை கிட்டத்தட்ட 250 பேர் ஆகும் உட் சென்ருேர் ஏறக் குறைய 25 பேர் ஆகும். கச்சேரியின் உள்ளே நின்ருேர் வெளியே வரமுடியாமலும், வெளியே நின்ருேர் உள்ளே செல்லமுடியாமலும் சத்தியாக்கிரகிகள் தடுத்து மறியல் செய்தனர். பொலிசார் குண்டாந்தடிப்பிரயோகம் செய்தபோதும் கண்ணீர்ப்புகை உபயோகித்தபோதும் இந்த அரசாங்க ஊழியரில் பலர் தாக்கப்பட்டுக் காயமடைந்தனர். சிலர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் பொருட்டுச் சேர்க்கப்பட்டனர். அரசாங்க ஊழியராய் இருப்பதால தங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொலிசாரே தங்களைக் காயமுறச் செய்து தாக்கித் துரத்தியடித்தால், வேறு யார் பாதுகாப்பு அளிக்கமுடியும் என மனம் நொந்து நிர்மந்திரிக்கும் தங்கள் யூனியன்

தலைமைப் பீடத்திற்கும் தந்தி மூலம் இத்தாக்குதல்பற்றி அறிவித்தும் ஒரு பகிரங்க விசாரணை உடனே நடத்தும் படி கோரியும் அதுவரையும் தாங்கள் கடமைகளைச் செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியச் செய்து, அன்று முதல் சகலரும் கச்சேரிக்குப் போகாது விட்டனர்.

### அரசாங்க குமாஸ்தாக்கள் யூனியன். நடவடிக்கை

தந்தித் தகவல் கிடைத்ததும் கொழும்பிலுள்ள அரசினர் குமாஸ்தாக்கள் யூனியன் பொதுக்காரியதரிசி திரு ஐ. ஜே விக்கிரம என்பவர் செயற்குழுவினர் சிலரோடு யாழ்ப்பாணம் வந்து நிலைமையை ஆராய்ந்து, அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் யாழ்ப்பாணம் கச்சேரியின் எல்லாவாயில்களும் சத்தியாக்கிரகிகளால் தடை செய்யப்பட்டு இருப்பதால் ஊழியர் யாவரும் கடமை செய்யமுடியாத நிலையில் இருகிறார்கள் என்றும், இப்படி அவர்கள் வராமல் விடுவது அவர்களுடைய குற்றமல்ல என்றும், ஆதலால் அவர்கள் எவ்விதத்திலேனும் தண்டிக்கப்படக்கூடாது என்றும், பொலிசாரின் அநீதியான தாக்தல் பற்றி, நிதி மந்திரி உடனே ஒரு விசாரணை நடத்த ஒழுங்குகள் செய்ய வேண்டுமென்றும் யூனியன் சார்பில் கேட்டுக் கொண்டார்.

சிலோன் டெயிலி மிரர் என்னும் ஆங்கில தினசரியில் வந்த தகவல் மொழிபெயர்க்கப்பட்டுத் தரப்படுகின்றது. "அரசாங்கக் குமாஸ்தாக்கள் யூனியன் பிரதம மந்திரிக்கு அனுப்பி வைத்த ஒரு விண்ணப்பத்தில், யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தின் போது பொலிசார் நடந்து கொண்ட விதத்தையிட்டு விசாரணை செய்ய ஒரு பகிரங்க விசாரணைக் குழுவை உடனடியாக நியமிக்கும்படி கேட்டிருக்கிறது. பொலிசார் நடந்து கொண்ட விதம் தண்டிக்கப்பட வேண்டியதொன்று, யாராவது ஒரு குமாஸ்தா கச்சேரிக்குள் செல்ல முயன்றால், சத்தியாக்கிரகிகள் தடை செய்கிறார்கள். அதோடு பொது சனங்களும் அவருக்குச் சரீர தீங்கும் செய்வார்கள். பொலிசின் உதவியோடு கச்சேரிக்குள் சென்றாலும், அவர் குடியிருக்கும் வீட்டுக்கும் அவர் குடும்பத்தினருக்கும்

ஆபத்து. அளவெட்டியிலுள்ள அரசாங்க அதிபரின் வீடு கல்லெறி பட்டதோடு, இப்போ பொலீஸ் காவல் பெற்று வருகிறது .................. 20-2-61 ல் அரசாங்க ஊழியரைத் தாக்கியது சம்பந்தமாக கச்சேரிக்கு முன்னால் இருந்த யாழ்ப்பாணக் காரியாதிகாரி கந்தோர் வளவுக்குள் பல குமாஸ்தாக்கள் கூடி நின்றதாகவும், பொலீசார் மதில் ஏறிக் குதித்து, "நாங்கள் அரசாங்க ஊழியர்" என்று சொன்னதையும் கவனியாது, குண்டாந்தடிப் பிரயோகம் இவர்கள் பலர்மீதும் செய்யப்பட்டதாகவும், இவர்களிற் சிலர் காரியாதிகாரியின் கந்தோர் அறைக்குள் தஞ்சம் புக, அங்கு அவர்களைத் துரத்திச் சென்று குண்டாந்தடியால் நய்யப் புடைத்ததாகவும், அடிதாங்கமாட்டாது சிலர் றோட்டுக்கு ஓடிப்போக, அங்கும் துரத்திச் சென்று மிருகத்தனமாகத் தாக்கியதாகவும் சொல்லப்படுகிறது. 10 பேருக்கு இதனால் காயம்".

## கச்சேரிக் வேலைகள் 20-2-61 தொடக்கம் பூரண ஸ்தம்பிதம்

இத்தகைய கண்மூடித்தனமான பொலீஸ்த் தாக்குதல் காரணமாக, கச்சேரியில் கடமையாற்றும் சுமார் 300 குமாஸ்தாக்கள், பியோன்மார், நிர்வாகப் பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள் ஆகிய சகலரும் 20-2-61 தொடக்கம் கடமையாற்றப் போகவில்லை. அவர்கள் குறைகளையும், முறைப்பாடுகளையும் விசாரணை செய்ய அரசாங்கம் முயற்சி செய்ததாகவும் தெரியவில்லை. சனப்பிரதிநிதிகள் சபையில் சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா 14-3-61 ல் பேசிய போது அரசாங்க ஊழியர் பலரும் அவர்கள் பிள்ளைகளும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுகின்றனர் எனப் பிரலாபித்தார். ஆனால் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் ஒரு அறிக்கையில், சத்தியாக்கிரகத்திற்கும் அரசாங்க ஊழியருக்கும் ஒருவித தொடர்பும் இல்லையெனக் கூறியிருக்கிறார். அதோடு யாழ்ப்பாண அரசாங்கத்

குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி, சத்தியாக்கிரகத்தில் அரசாங்க குமாஸ்தாக்கள் ஈடுபட்டனர் என்பதை வன்மையாக மறுத்திருக்கின்றார்.

## தபால் தந்தி இலாகா ஊழியர் வேலை நிறுத்தம்

இன்னொரு சம்பவம் 2-3-61 ல் நிகழ்ந்தது. இது காரணமாக, தபால் தந்தி இலாகா வேலைகள் யாழ்ப்பாணத்தில் சீர் குலைந்தது. தபால் விநியோகம் செய்யும் திரு. கந்தையா என்னும் ஊழியர் ஒருவர், தனது உத்தியோக உடையான "யூனிபோம்" அணிந்து கொண்டு தபால் விநியோகஞ் செய்தவண்ணம் வீதியால் வந்தபோது, கடற்படையினர் அவரை மறித்துத் துப்பாக்கி முனையிலுள்ள ஊசியால் நெஞ்சில் குத்திப் படுகாயப்படுத்தியதன் விளைவாக, தபால் தந்திச் சேவகர்கள் எல்லோரும் 3-3-61 தொடக்கம் வேலை நிறுத்தம் செய்து, இந்தத் தாக்குதல் சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்தவேண்டுமெனக் கோரினர். யாழ்ப்பாணப் பெரிய கந்தோரில் வேலை ஸ்தம்பித்தது. இந்த வேலை நிறுத்தம், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வேறு பல தபால் தந்திக் கந்தோர்களுக்கும் பரவத் தொடங்கியது. அதிஷ்டவசமாக விசாரணையொன்று ஒரு மாதத்தினுள் நடைபெறுமென யாழ்ப்பாணம் வந்த போஸ்ற் மாஸ்டர் ஜெனரல் உத்தரவாதமளித்தது காரணமாக, ஒரு கிழமை நீடித்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு, மீண்டும் யாழ்ப்பாணத்தில் தபால் தந்திச் சேவை முன்போல் நடைபெறுகின்றது.

## எங்கும் ஒலித்த கண்டனக் குரல்
## திரு. பேர்னட் சொய்சாவின் அறிக்கை

பொலீசாரின் குண்டாந்தடிப் பிரயோகத்தைத் தொடர்ந்து லங்கா சமசமாஜக் கட்சி, திரு. பேர்னட்



தபால் ஊழியர் கந்தையாவைக் காரணமின்றிக் கடற்படை
தாக்கியதால் தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்.

சொய்சா, எம். பி. யை யாழ்ப்பாணத்தில் நிலவும் உண்மை நிலைமையை அறிந்து வரும் பொருட்டு அனுப்பிற்று. அவர் இங்கு வந்து பலரையும் கண்டு விசாரித்து ஒரு நீண்ட அறிக்கையைத் தமது கட்சி மேலிடத்துக்குச் சமர்ப்பித்தார். அதில் அவர் நிகழ்ச்சிகள் பலவற்றை விசாரித்தபின் "சுருங்கச் சொல்லுவதாயின் பொலிசார் சமாதான முறையில் நடந்துகொண்ட சத்தியாக்கிரகிகளைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியிருக்கின்றனர் இதைப்பற்றி உடனே ஒரு பகிரங்க விசாரணை நடைபெறல்வேண்டும்" எனச் சிபார்சு செய்திருக்கிறார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஜனாப் அசீஸ், திரு. சோமசுந்தரம், திரு. இராசலிங்கம் ஆகிய மூவரைக் கொண்ட குழு வந்து அரசாங்க அதிகாரிகளையும், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் தொண்டர்களையும், கட்சிச் சார்பற்ற பிற பிரமுகர்களையும், தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் இவ்விஷயம்பற்றிக் கலந்து பேசி ஒரு பொது அறிக்கையையும் தமது கட்சி மேலிடத்துக்குச் சமர்ப்பித்தது.

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர்கள் கருத்து

ஜனாப் அசீஸ் பின்வருமாறு பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்; "சத்தியாக்கிரகிகளான ஆண்களையும் பெண்களையும் நேரில் கண்டோம். தங்களது மொழிக்குச் செய்யப்பட்ட அநீதிகள் நீக்கப்படும்வரை அவர்கள் போராடும் மனஉறுதியுடன் இருக்கின்றனர். தமது ஆத்ம பலத்தில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கை அசைக்க முடியாததாகும். யாழ்ப்பாண மக்களின் பிரச்சனையுடன் இலங்கைவாழ் முஸ்லிம்க

ளும் தங்கள் தாய்மொழியின் உரிமையை சர்க்கார் பறித்துவிட்டனர் என்ற அதிருப்தியுடன் இருக்கின்றனர், என்பதை அரசாங்கம் உணரவேண்டும். தமிழ் மக்களின் போராட்டம் தளர்ச்சி யடையவில்லை. கடந்த 20ம் திகதி திங்கட்கிழமை சத்தியாக்கிரகிகள் மீது பொலிசார் மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். நிராயுதபாணியான சத்தியாக்கிரகிகளைத் தாக்கியதுபற்றி விசாரிக்க பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படல் வேண்டும்''.

திரு சோமசுந்தரம் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கின்றார். " சத்தியாக்கிரகம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று நிலைமையைப் பார்வையிடவும், தமிழரசுக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசவும் எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. பொலிஸ் அட்டூளியத்திற்கு ஆளானவர்களை ஆஸ்பத்திரியிலும், ஆஸ்பத்திரியின் வெளியிலும் சந்தித்துப் பேசினோம். யாழ்ப்பாண மேயர், உதவி மேயர், சமசமாஜக் கட்சிப் பிரமுகர்கள் ஆகியோரையும், அரசியற் பற்றற்ற பிரமுகர்களையும் சந்தித்து நிலைமைபற்றி விசாரிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சில குறிப்பிட்ட விஷயங்கள்" எங்களுக்குத் தெளிவாயுள்ளன. அவையாவன : (1) பொலிசார் மிருகத்தனமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். சத்தியாக்கிரகத்தை நசுக்கவேண்டுமென்று முன்கூடியே ஒருவேளை திட்டமிடப்பட்டது என்பதைத் தவிர பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு வேறு சமாதானம் இருப்பதாகத் தெரியவில்லை. (2) சத்தியாக்கிரகிகள் உண்மையான காந்தீய உணர்ச்சியுடன் நடந்துகொள்கிறார்கள். எந்தவிதமான தியாகத்திற்கும் அவர்கள் தயார் என்பதை நிரூபித்துவிட்டார்கள், திரு இராசலிங்கம் இத்தகைய கருத்துகளையே வெளியிட்டார்.

## சத்தியாக்கிரகத்தில் மாதர் பங்கு

முதல்நாள் சத்தியாக்கிரகத்தில் பெண்கள் கலந்து கொள்வதைத் தமிழரசுக்கட்சிச் செயற்குழு அனுமதிக்க வில்லை. ஆனால் பொலிசாரின் அக்கிரமமான தாக்குதலை பார்த்துக்கொண்டு நின்ற பெண்கள் பலர் கண்ணீர் உகுத்தனர். மாதர்முன்னணித் தலைவிகள் திருமதி இராசபூபதி அருணாசலம் திருமதி மங்கயற்கரசி அமிர்த லிங்கம் முதலியோர் உடனே தாமும் போரில் குதிக்கக் களத்தில் இறங்கினர். அவர்களைத் தற்காலிகமாக அன்று போர்க்களத்தினின்றும் நிறுத்தியது பொதுக் காரியதரிசி நவரத்தினத்தின் பெரிய சாதனையாகும். ஆகவே செயற்குழு பெண்களையும் அனுமதிக்க வேண்டி யதாயிற்று. பல் நூற்றுக்கணக்கான பெண்கள் 21-2-61 தொடக்கம் தினமும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். இரவும் பகலும் மறியல் செய்தனர். பொலீசாரின் மிலேச் சத்தனமான தாக்குதல்களைத் தாங்கவும், உயிரைத்தியா கஞ் செய்யவும் வேண்டிய மனஉறுதி தங்களிடம் உண்டு என்பதை உணர்ந்து கொண்டனர். ஒரு சில நாட்களில் கச்சேரி முன் மறியல் பெண் தொண்டர்களாலேயே நடை பெறத் தொடங்கியது. ஆண்களுக்கு அங்கே இடமில்லா மற் போயிற்று. ஆகவே மறியல் இயக்கத்தை விரிவடை யச் செய்து, வேறுபல அரசாங்க அலுவலகங்கள் முன் னும் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. யாழ்ப்பாண வித் தியாதி கந்தோர், காரியாதிகாரி கந்தோர், பீஸ்கால் கந் தோர், கலால் கந்தோர் முதலிய அலுவலகங்களின் வேலைகள் பூரண ஸ்தம்பித்த நிலையை அடைந்தது.

## கடற்படை வீரின் காடைத்தனம்

இதனிடையே 1-2-61 தொடக்கம் அதிகாலையில் கடற்படையினர் பலர் ஊசி முனை கொண்ட துப்பாக்கி

களுடன் யாழ்ப்பாண நகர வீதிகளில் தோற்றி, சனங்க ளின் போக்குவரத்து முதலியவற்றை மட்டுப்படுத்தும் வேலையில் ஈடுபடத்தொடங்கினர். இவர்கள் கூட்டம்கூட் டமாகப் பிரிந்து முக்கிய சந்திகளில் நின்று போவோர் வருவோர் யாவரையும் மறித்து, வாகனங்களையும்மறித்து கேள்விகள், கேட்டபின், சிலரை முன்னே போகவிட்டும் வேறு சிலரைத் திரும்பிப் போகச் செய்தும் நகர் காவல் செய்தனர். ஈழநாடு 2-3-61ந் திகதிப் பதிப்பில் பின்வரும் செய்தி தரப்பட்டிருக்கிறது. " ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக இன்று காலையில் ஆஸ்பத்திரியை நோக் கிச்சென்ற நோயாளிகளும், நோயாளிகளுக்குச் சிகிச்சை, அளிப்பதற்காக ஆஸ்பத்திரிக்குப் பலாலிவீதி வழியாகச் சென்று கொண்டிருந்த டாக்டர்களும், நீதி மன்றத்தில் வழக்குப்பேசச்சென்று கொண்டிருந்த நியாயவாதிகளும் மற்றும் பொது மக்களும் பலாலி வீதியிலுள்ள றெயில் வேக்கடவையில் துப்பாக்கி ஏந்திய கடற்படை வீரர் களால் தடுத்து நிறுத்தப் பட்டனர். திரும்பிச் செல்லும் படி கடற்படை வீரர் கூறியதை மறுத்து, கொதிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது, மக்கள் வீதியில் உட் கார்ந்து கொண்டனர். றெயில்வேக் கடவைக் கதவு சாத்த முடியாத நிலை ஏற்பட்டதால், காங்கேசன் துறைக் குச் செல்லும் றெயில்களும், காங்கேசன் துறையிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் றெயில்களும் இடையில் நிறுத் தப்பட்டன."

## கடற் படை வீரரின் தமிழ் ப்ரதி எதிர்ப்பு

டாக்டர் நாகநாதன், திரு. அமிர்தலிங்கம், திரு. தர்மலிங்கம், திரு. துரைரத்தினம் ஆகிய நான்கு எம் பீக்களும் 2-3-61ம் திகதியில் சனப்பிரதிநிதிகள் சபைத் தலைவர் திரு. பெல்பொலவுக்கு அனுப்பியுள்ள தந்தியில், தாங்கள் பாராளுமன்ற அங்கத்தவர் கடமை

களைச் செய்வதினின்றும் கடற்படையினர் சட்டவிரோத மாகத் தடை செய்தனர் எனத் தெரிவித்துள்ளனர். இன்னொரு எம். பி. திரு. வீ. ஏ. கந்தையாவும் நல்லூர் வீதியாற் சென்று கொண்டிருந்த போது கடற்படையி னர் தடுத்துத் திரும்பிப் போகச் சொன்னர்கள். திரு. கந்தையா தான் ஒரு எம். பி. என்பதைத் தெரிவித்து, தன்னைத் திரும்பிப் போகுமாறு கூறியதற்குக் காரண மென்ன என்று கேட்டதற்கு, அவர்கள் காரணமெது வும் கூற மறுத்து விட்டார்கள்.

தமிழ் ஸ்ரீ பொறிக்கப்பட்ட தகடுகளைக் கொண்ட கார்கள் பல கடற்படையினராற் தடுத்து நிறுத்தப்பட்டு தகடுகள் பிடுங்கி எறியப்பட்டன, எனப்பல கார்ச் சொந்தக்காரர்கள் முறையிட்டிருக்கின்றனர்கள். இதன் பின் யாழ்ப்பாணத்தில் ஒரு காராவது மோட்டார் சைக்கிளாவது சிங்கள ஸ்ரீ உள்ளதாய்க் காணப்பட வில்லை. எல்லோரும் சிங்கள ஸ்ரீயை, தமிழ் ஸ்ரீயாக மாற்றிக் கொண்டார்கள். மூன்று தமிழ் ஸ்ரீ பொறிக் கப்பட்ட கார்களை பொலீசார் கைப்பற்றி, இப்போது அவை பொலீஸ் நிலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. சொந்தக்காரர்கள், பொலீஸ்காரர்கள் தங்கள் கார் களைத் திருடிக்கொண்டு சென்றுவிட்டார்கள் என வழக்குத் தாக்கல் செய்திருக்கிறர்கள். முன்னள் வவுனியா எம். பி. திரு. சுந்தரலிங்கம் பிரயாணம் செய்த தமிழ் ஸ்ரீ பொறிக்கப்பட்ட ஒரு காரையும், பனைக்குச் சமீபத்தில் இவ்விதம் இராணுவத்தினர் மறித் துத் தகட்டைப் பிடிங்கியபோது, திரு. சுந்தரலிங்கம் தான் இன்னுரெனக்கூறி அவர்கள் செயலை வன்மை யாக ஆட்சேபித்ததன் பயனகை, பிடுங்கப்பட்ட தகடு திருப்பிக் கொடுக்கப்பட்டதோடு மன்னிப்புங் கோரப் பட்டதென ஒரு செய்தி வெளிவந்தது.

## பெண் பிள்ளைகளை மறித்துச் சோதனை செய்தனர்.

சிலோன் டெயிலி மிரர் என்னும் ஆங்கிலத் தின சரியில் வெளிவந்த செய்தியின் தமிழாக்கம் பின்வருமாறு: "யாழ்ப்பாணத்துக் கல்லூரிகளுக்குச் சென்று கொண்டிருந்த பெண்பிள்ளைகளைக் கடற்படை வீரர் மறித்து நிறுத்தி, அவர்கள் கொண்டு சென்ற தையல் பெட்டிகளையும், உணவுப் பெட்டிகளையும் திறந்து சோதனைசெய்தனர். இதைக்கண்ட சில பெண் பிள்ளைகள் அஞ்சி இடத்தை விட்டு ஓடத் தொடங்கியதும், கடற்படை வீரரும் பின் தொடர்ந்து ஓடிச் சென்று அவர்களை மறித்து அவர்களையும் பரிபூரண பரிசீலனைக்குள் ஆளாக்கிய பின்னரே போக விட்டனர்." இதனால் பல பெண்பிள்ளைகளும், ஆசிரியைகளும், கல்லூரிகளுக்கும், பாடசாலைகளுக்கும் போகாது விட்டனர். இவர்களைக்கண்ட ஊர்வலங்கள் பல, கடற்படையினர் காடைத்தனத்தை உணர்த்தும் சுலோக அட்டைகளோடும் சுலோகங்களோடும் வீதி வலம் வந்தனர். கடற்படையினர் வீதிகளினின்றும் அகற்றப்பட்டபின்னரே இவர்கள் மீண்டும் பாடசாலைக்குப் போகத் தொடங்கினர்.

## உருப்பிராய் இந்துக் கல்லூரி மாணவ வீரர்.

சத்தியாக்கிரக இயக்கத்திற்குத் தமது ஆதரவைக் காட்டும் நோக்கத்தோடு 1000த்திற்கு மேற்பட்ட உரும்பிராய் இந்துக்கல்லூரி மாணவர் பலாலி வீதியால் ஊர்வலமாக 5 மைல் தூரம் கால்நடையாக வந்துகொண்டிருந்தனர். கறுப்புக்கொடிகளும், சுலோக அட்டைகளும் கையில் தாங்கி வந்தபோதிலும் ஒழுங்காகவும் அமைதியாகவும் வந்தனர். காலை 10 மணி வரையில் றெயில் கடவையை வந்தடைந்ததும் கடற்படையினரால்



காட்டுப்படை வீரரின் நாசவேலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த மாணவப் படை.

தடுத்து நிறுத்தப்பட்டனர். மாணவர் இதை உதாசீனம் செய்து முன்செல்ல முயன்றபோது, அங்கு நின்ற ஆறு கடற்படை வீரர் தமது துப்பாக்கிகளை உயர்த்தி மாணவர்மீது குறிவைத்து, சுடும் விசையை முடுக்கி நீட்டிக்கொண்டு, "திரும்பிப்போ, இல்லாவிட்டால் சுடுவோம்" என ஆங்கிலத்தில் கர்ச்சித்தனர். பல மாணவர்கள் உடனே தங்கள் சட்டைகளைத் திறந்து நெஞ்சைக் காட்டி, "சுடு, அல்லது வழி விடு" எனக் கூறி ஆர்ப்பரித்தனர்.

இந்த நிலையிலே தற்செயலாக அவ்விடத்தாற் சென்ற டாக்டர் நாகநாதன், காரை விட்டிறங்கி வந்து மாணவர்களை முன் செல்ல வேண்டாமெனப் புத்திகூறித் தான் இதைக் கவனிப்பதாகச் சொல்லிக் கடற்படைத் தளபதி கதிர்காமரைக் காணச் சென்றார். எல்லா மாணவர்களும் அப்படியே தகிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது, வீதி மருங்குகளில் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். இப்படி இவர்கள் நான்கு மணித்தியாலம் சத்தியாக்கிரகம் செய்த பின், சில கடற்படை அதிகாரிகளும், பொலீஸ் அதிகாரிகளும், டாக்டர் நாகநாதன் போன்ற சில எம். பிக்களும் இடத்திற்கு வந்து நிலைமை ஆராயப்பட்டபின் மாணவர்களுக்கு முன்னே செல்ல அனுமதி கொடுக்கப்பட்டது. முன் வைத்த காலைப்பின் வைக்கமறுத்த இவ்வீர மாணவ கூட்டம் நேரே கச்சேரியை அடைந்து, அங்குஞ் சிலமணி நேரம் சத்தியாக்கிரகம் செய்த பின்னரே கலைந்து சென்றனர்.

### "உன்னைச் சுட்டுக் கொல்வேன்" கடற்படைவீரன்

கச்சேரியை நோக்கிச் சென்று கொண்டிருந்த அர

சாங்க ஊழியர் ஒருவரை மறித்துக் கடற்படை வீரன் ஒருவன் 1-2-61 காலையில், "உன்னைச் சுட்டுக் கொல்வேன்" என்று உரத்துக் கூறினன். அந்த ஊழியர் தான் ஒரு அரசாங்க குமாஸ்தா என்று கூறியபோது, அதை நிரூபிக்கும்படி கேட்கப் பட்டதாகவும், "நான் கச்சேரியில் வேலை செய்யும் ஒரு குமாஸ்தா என்பதைத் தவிர வேறு எவ்விதத்திலும் நிரூபிக்க முடியாது" என்று அவர் பதில் அளித்ததும் அவரைப் போவதற்கு அனுமதி அளித்து "வேறு எங்காவது உன்னைப் பார்த்தால் சுடுவேன் என்றும் எச்சரிக்கை செய்து அவர் அனுப்பப் பட்டதாக" பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது.

## கடற் படையினர் செய்த நாசவேலைகள்

இந்தக் கடற்படைவீரர் யாழ்ப்பாண வீதிகளில் 48 மணித்தியாலங்கள் மாத்திரம் நகர் காவல் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தாராயினும், நகரில் செய்த நாச வேலைகள் மிகப் பலவாகவும் பாரதூரமாகவும் இருந்தன. றெயில் போக்குவரத்தை நிறுத்தினர். ஆஸ்பத்திரி வேலையை ஸ்தம்பிக்கச் செய்தனர். தபால் தந்திச் சேவையைச் சீர்குலைத்தனர். மக்கள் நடமாட்டத்தைத் தடுத்தி நிறுத்தி பல இடங்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் வீதிகளிலேயே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்யக் காரணமாய் இருந்தனர். துப்பாக்கியால் சனங்களையும் பள்ளிச் சிறுவர் சிறுமியர்களையும் கொலைசெய்யமுயற்சித்தனர். மக்களுக்குத் துப்பாக்கிமுனையாற் குத்திப் படுகாயப்படுத்தி இரத்தஞ் சிந்தச் செய்தனர். இவர்கள் அடுத்தநாளே வீதிகளில் இல்லாமல் மறைந்தனர். ஆயினும் மக்களால், இவர்கள் செய்த மிருகத்தனமான செயல்களை மறக்க முடியவில்லை தமிழரசுக் கட்சியையும் மறியல் நடவடிக்கையையும் ஆதரிக்காது இருந்த பல ஆயிரக்கணக்கான முஸ்லீம்களும் தமிழர்களும், பொலீசாரின்



கடற்படை வீரரின் அட்டகாசத்தால், கட்டுமீறிய
பொதுசன உணர்ச்சி புகைவண்டிகளையும் தடுத்து நிறுத்தியது.

மிருகத்தனமான செயல்களாலும், கடற்படையினரின் காடைத்தனமான நடத்தையாலும், சத்தியாக்கிரக இயக்கத்தை இப்பொழுது முழுமனத்துடன் ஆதரிக்கத் தொடங்கினர். தமிழ் பேசும் மக்களை ஒன்று சேர்த்த அக்கிரமம் வாழ்க. அரசாங்கத்தின் அநீதி வளர்க. லூயி மன்னரின் அக்கிரமங்கள், பிரான்சுப் புரட்சியை உண்டாக்கியது. சனங்கள் வெற்றியடைந்தனர். ரஷ்ய ஷார் மன்னனின் அநீதி, புரட்சியை உண்டு பண்ணி இப்போதைய சோவியத் சமுதாயத்தைச் சிருஷ்டித்தது. ஆகவேதான் அநீதியையும், அக்கிரமத்தையும், ஒடுக்கப் பட்ட மக்கள் வாழ்த்துகிறார்கள்

## மட்டக்களப்பிலும் திருமலையிலும் மறியல்

### இராணுவம் விமானமூலம் வந்து குவிதல்


தமிழரசுக் கட்சியின் இவ்வாண்டுத் தலைவராகிய பட்டிருப்பு, எம். பி. திரு. இராசமாணிக்கத்தின் தலைமையில், மட்டக்களப்புக் கச்சேரிமுன் மறியல் 28-2-61ல் ஆரம்பமாகியது. யாழ்ப்பாணத்தில் நடந்தது போன்ற எந்த விதமான அசம்பாவிதங்கள் எதுவும் இங்கு நடைபெறவில்லை. காலை ஆறு மணியிலிருந்தே தொண்டர்கள் வந்து சேர்ந்து விட்டனர். ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் ஆதரவைக்காட்டும் நோக்கமாக வந்துகொண்டேயிருந்தனர். அரசாங்க அதிபர் திரு. தேவராசன் கச்சேரியின் உட் செல்ல முயன்றபோது சத்தியாக்கிரகிகளால் தடுத்து நிறுத்தப்பட்டார். அவர் வந்த வழியே திரும்பிப் போய் விட்டார். பொலிசார் காலை 7-30 மணி வரையில் மிகச்சிலரே வந்தனர். இவர்களும் குண்டாந்தடியோ துப்பாக்கியோ சுமந்து வரவில்லை. எல்லாம் அமைதியாகவே இருந்தது. அரசாங்க ஊழியர் பலர் உட்செல்ல

முயன்றபோது சத்தியாக்கிரகிகள் வழிவிட மறுத்ததால் அவர்களும் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டனர், கச்சேரி வேலைகள் எதுவும் நடைபெறவில்லை.

விசேஷ விமானங்கள் மூலம் 1-3-61ல் இராணுவத்தினர் மட்டக்களப்பு விமான இறங்கு துறையில் வந்து குவிந்தவண்ணங் காணப்பட்டனர். இந்த இராணுவ நடமாட்டம் சனங்களிடையே பரபரப்பை உண்டாக்கியது. திரு. இராசமாணிக்கம், திரு. இராசதுரை, திரு. மாணிக்கவாசகம், ஜனுப் அகமது ஆகிய நான்கு எம். பீக்களும் பிரதமருக்குத் தந்தி மூலம் இராணுவத்தினர் வருகையை ஆட்சேபித்து', உடனே இவர்களை அகற்ற வேண்டுமெனக் கோரினர் ஆயினும் பொலீசாராலோ, இராணுவத்தினராலோ இந்தக் கிராம மக்களுக்குத் தொந்தரவு ஏற்படவில்லை. சத்தியாக்கிரகிகளும் பொது சனங்களும் அமைதியாகவும், கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டனர்.

## புதிய அரசாங்க அதிபர்கள்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. தேவராசன் திடீரென்று மாற்றப்பட்டு திரு வியனகே என்னும் சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இதுபோலவே யாழ்ப்பாணத்திலும் ஸ்ரீ காந்தா நீண்ட கால லீவில் அனுப்பப்பட்டு திரு. நிசங்கா விஜயரட்ன என்னும் சிங்களவர் அரசாங்க அதிபராக நியமிக்கப் பட்டார். இவர்கள் இருவரும் கடமைசெய்யத்தொடங்கியபோது சத்தியாக்கிரகிகளைப் பற்றியும் யாழ்ப்பாண மட்டக்களப்பு பொதுசனங்கள் பற்றியும் கூறியிருப்பவை கவனிக்கத்தக்கன. திரு. விஜயரட்ண கூறியவை "சத்தியாக்கிரகிகள் பண்புடன் நடந்து கொள்ளும் கனவான்கள், இப்படி நான் சொன்னேன்று எங்கும் தெரியச் செய்ய வேண்டும். ஏனெனில்



குண்டுக்கு அஞ்சாத இதயம்— அந்தக்காக்கியைக் கண்டு பயந்திடுமா?
மட்டு நகரிலே மாதர்கள்.

பொது சனங்களிடையே, சிறப்பாக வடமாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலே, சத்தியாக்கிரகிகள் கட்டுப்பாடற்ற ஒரு கும்பல் என்ற அபிப்பிராயம் நிலவுகிறது.,, இவ்வித கருத்துக்களையே மட்டக்களப்புப் புதிய அதிபர் திரு. லியனகேயும் வெளியிட்டார். இவர்களிருவரும், நிருவாகத் திறமை, கஷ்டமான நிலைமைகளைச் சமாளிக்கும் தன்மை நிரம்ப இருந்தமையாலேயே தெரிந்தெடுக்கப்பட்டு இப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம். ஆனல், இவர்களும் அரசாங்கமும் சத்தியாக்கிரகிகளின் உறுதி, உள்ளத்தூய்மை, தியாகம் என்பது பற்றியும், தமிழ்பேசும் மக்களின் புது விழிப்புணர்ச்சி, ஒற்றுமை, பக்தி, கடமை என்பவை பற்றியும் பெரிய தப்புக்கணக்குப் போட்டு விட்டார்கள், என்பது பின்பு நடைபெற்ற பல நிகழ்ச்சிகளால் தெரிய வருகிறது.

## நிரந்தரக் காரியதரிசி உயரப் பாய்ச்சல்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் புதிய இரு மாகாண அதிபர்கள் நியமிக்கப்பட்டது போலவே, பாதுகாப்பு அமைச்சுக்கும் பதில் நிரந்தர காரியதரிசியாக திரு. என். கியூ. டயஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் உண்மை நிலையை யாழ்ப்பாணம் வந்து நேரில் தாமே அறிவதற்கென விமான மூலம் வந்திறங்கினர். கச்சேரிக்கு அரசாங்க அதிபர் திரு. விஜயரட்ணுவோடு வந்து உள்ளே செல்ல முயன்றபோது, வாயில்களை மறித்துச் சத்தியாக்கிரகிகள் வீற்றிருந்ததால், என்ன செய்வதென்றறியாது திகைத்து நின்ருர். அரசாங்க அதிபரும், பொலீஸ் வீரர்களும் அவருக்கு ஒரு புதிய நூதன வழியைச் சொல்லிக் கொடுத்தனர். அதாவது, சத்தியாக்கிரகிகளுக்கு மேலே உயரப் பாய்ந்து சென்ருல் எல்லாம் சரிவந்து விடும் என்பதே அந்த வழி. ஆனல் உட்கார்ந்

திருப்பவர்களுக்கு மேலே உயரப்பாய்ந்தாலும், நீளம் பாய்தல் சாத்தியமில்லை என்பதை திரு. டயஸ் சுட்டிக் காட்டினர். பொலீசார் இதற்குத் தாங்கள் கைகொடுத் துதவுவதாக உறுதியளித்தனர். சத்தியாக்கிரகிகள் நெருங்கிப் பல வரிசையாக உட்கார்ந்திருப்பதைப் பார்த் தார். உயரத்தைக் கணக்கிட்டார். நீளத்தையுங் கண் டார். உடம்பு வெல வெலத்து வியர்க்கத் தொடங்கியது. ஆயினும் வேறு வழியின்றி சம்மதித்தார். ரோட்டி லிருந்து இரண்டு பொலிஸ் வீரர்கள் அவரைத் தூக்கி அரிசி மூட்டையை வீசுவது போல, சத்தியாக்கிரகி களுக்கு மேலே கச்சேரிப் பக்கமாக வீசினர்கள். அந்தப் பக்கத்தில் நான்கு பொலீஸ் வீரர்கள் அவரை ஏந்திப் பிடிப்பதற்கு ஆயத்தமாகக் கைகளை நீட்டியவாறு நின் ருர்கள். துரதிஷ்ட வசமாக, அவர் மறுபக்கத்தில் நின்ற பொலீசாரின் கைகளில் விழுவதற்குப் பதிலாக, சத்தி யாக்கிரகிகளின் தலை மீது விழுந்தார். உடனே சுற்றி யிருந்த ஆயிரக்கணக்கான பொது சனங்கள் இவற்றை யெல்லாம் மிகவாக ரசித்து ஆரவாரித்தார்கள். சத்தி யாக்கிரகிகள், பாவம், இதை ரசிக்கமுடியாது, தலையி லும், தோளிலும், கழுத்திலும் ஏற்பட்ட நோவைத்தட விக் கொண்டிருந்தனர். இரும்பு மனிதன் டாக்டர் நாகநாதன் முதுகை திரு. டயசின் சப்பாத்துக்கள் ருசி பார்த்துக் காயமேற்படுத்தியதோடு சட்டை வேட்டி முத லியவற்றையும் கிழியச் செய்தன. இதனிடையே பொலீஸ்காரர், திரு. டயஸ் சத்தியாக்கிரகிகள் இடையே அவர்கள் அரவணைப்பில், அவர்கள் தோள்மீதும், மடி மீதும் படுத்திருப்பதைச் சகியாது, தமது கால்களோடு சத்தியாக்கிரகிகளை மிதித்துக்கொண்டு சென்று, அவரை மீட்க முயற்சி செய்தனர். இந்தக் கெடுபிடியில் சத்தி யாக்கிரகிகள் சிலருக்கு சில காயங்கள் ஏற்பட்டன. திரு. டயசின் வேட்டியும் சட்டையுங்கூட சற்றுக் கிழிந்

தன. திரு. டயஸ் கச்சேரிக்குள் சேர்க்கப்பட்டார். தமது கிழிந்த வேட்டியையும் சட்டையையும், ஒரு அரும் பெரும் சாதனையை நாட்டிவிட்டதன் சின்னங்களாகக் கருதி, கொழும்பு திரும்பியதும், பிரதமருக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும், ஏனையோருக்கும் அதிக பெருமையோடு கிழிந்த வேட்டியையுங் காட்டித் தன் சாதனையையும் சொல்லத் தவறவில்லை என அறிகிறோம்.

### திருமலைக் கச்சேரி முன் மறியல்.

திருமலையில் அறப்போர் 4-3-61 காலையில் ஆரம்பமானது. திருமலை எம். பீ. திரு. இராசவரோதயமும் மூதூர் எம். பீ. திரு. ஏகாம்பரம், கல்குடா எம். பீ. திரு. மாணிக்கவாசகர் முதலிய தமிழரசுக்கட்சித் தலைவர்கள், பல நூற்றுக்கணக்கான தொண்டர்களோடு கச்சேரிக்கு முன் மறியலைத் தொடங்கினார்கள். முதல் நாளே பொலீசார் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டனர். வீரகேசரியில் தந்த வர்ணனையைத் தருகின்றோம். "காலை 5 மணிக்கு கச்சேரியின் இரண்டு வாசல்களையும் சத்தியாக்கிரகிகள் வளைத்து விட்டனர். அப்போது அங்கு வந்த பொலீசார் கூட்டத்தினரைக் கலைந்து போகுமாறு வேண்டினர். சத்தியாக்கிரகிகள் அசையவில்லை. குறுந்தடிப் பிரயோகத்திற்கு உத்தரவு விடப்பட்டது. பலர் காயமடைந்தனர். இவர்களுள் இரத்தினம் என்னும் 20 வயது இளைஞனின் கால் முறிந்துவிட்டது தங்கவடிவேல் என்பவருக்கு அவருடைய மர்ம ஸ்தானத்தில் உதைக்கப்பட்டதால், மிகவும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். ராஜ என்பவருக்குப் படுகாயம் ஏற்பட்டது. ஜெகராசா, புரக்டர், சம்பந்தர் ஆகியோரும் பொலீசாரின் தாக்குதல்களுக்கு இலக்கானார்கள். இவர்கள் எல்லோரும் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்........................"

இந்த முதல் நாள் போரிலே, மூதூர். எம். பி. திரு. ஏகாம்பரம் உட்பட 10 பேருக்குக் காயம். திரு. ஏகாம்பரத்திற்குக் காயம் ஏற்படவில்லை என அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டதை, திரு. ஏகாம்பரமே மறுத்துத் தனக்கு மூக்கில் காயமுண்டாகி இரத்தம் சிந்தியதென அறிக்கை விட்டார். ஆனால் அவர் சிந்திய இரத்தம் தமிழர் சுதந்திரப் பயிரை வளர்க்கும் என்பதில் சற்றுஞ்சந்தேகமில்லை.

## தரைப் படையினரின் யுத்த அணிவகுப்பு

இத்தனைக்கும், யாழ்ப்பாணத்திலோ, அன்றி இலங்கையின் வேறெந்தப் பகுதியிலோ ஊரடங்குச் சட்டமோ, அவசரகாலச் சட்டமோ பிரகடனப் படுத்தப் படவில்லை ஒரு விசேஷ "கசற்" மூலம் மகாதேசாதிபதி ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். அதன்படி கடற்படை, தரைப் படை முதலியவற்றை உணவு விநியோகம் போக்குவரத்து வசதி முதலிய சில அத்தியாவசிய தேவைகள் தடைபடாது தொடர்ந்து நடைபெறுவதற்கு உதவி செய்யும்படி கட்டளை யிட்டிருந்தார். ஆனால் கடற்படை வீரர்களும், பின்வந்த தரைப்படை வீரர்களும் பொது சன பாதுகாப்புக்கான முழு உரிமைகளையும் தம்பொறுப்பில் சுவீகரித்துக் கொண்டனர். இவர்களின் நடவடிக்கைகள் சட்டத்திற்கு அப்பாற் பட்டதெனப் பல சட்ட வல்லுனர் கருதுகிறார்கள். இவர்கள் வருகை பற்றி 'ஈழநாடு' எழுதியிருந்ததைத் தருகின்றோம். "அந்நிய நாட்டுப் படையினர் மற்றொரு நாட்டின் மீது படையெடுப்பதற்கு, எப்படி ஆயுதங்கள் சகிதம் வந்திறங்குவார்களோ, அப்படி இயந்திரத் துப்பாக்கி, சுழல் துப்பாக்கிகள் சகிதம் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் சுமார் 200க்கு மேற்பட்ட இராணுவ வீரர் இன்று (2-3-61) காலையிலிருந்து காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள்.



திருமலை மூதாட்டி தலைமையில் அறப்போர் செய்யும் தாய்க் குலம்.

தமிழரசுக்கட்சித் தொண்டர்கள் சாத்விக மறியல் இயக்கத்தை ஆரம்பித்துத் தொடர்ந்து நடத்தி வரும் கச்சேரிப் பகுதி இன்று "தடைசெய்யப்பட்ட" பிரதேசமாகத் தோற்றமளித்துக் கொண்டிருக்கிறது. எந்த வீதி வழியாகவும் எவரும் கச்சேரிப்பகுதிக்குச் செல்ல முடியாதவாறு, கச்சேரியை நோக்கிச் செல்லும் வீதிகள் ஒழுங்கை மூலைகளில் கடற்படை வீரர்கள் துப்பாக்கியைக் கையில் வைத்தபடி காவல் புரிகின்றனர்."

## கல்லூரிகளே இராணுவத்தின் போர்க்காப்பாசறைகள்

இத்தரைப் படையினர் தங்குவதற்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, மத்தியகல்லூரி, ஸ்ரான்லிக்கல்லூரி, சிங்களக்கல்லூரி ஆகிய பெரிய நான்கு கல்லூரிகளும் இராணுவத்தினரால் கைப்பற்றப் பட்டன. இக்கல்லூரிகளில் படித்துவரும் 5000த்திற்கு மேற்பட்ட மாணவர்கள், படிப்பில்லாமல் வீதிகளில் அலைந்து திரிந்தனர். இக்கல்லூரிகளின் விடுதிகளில் உள்ள மாணவ மாணவிகள், எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி, மாலை 6 மணி வரையில், தங்கள் பெட்டி படுக்கைகளுடன் வீதிகளில் விடப்பட்டனர். இவர்களில் அநேகர் நூற்றுக் கணக்கான மைல் தூரங்களுக்கப்பால் உள்ள பல ஊர்களில் பெற்றோரை உடையவர்கள். இப்படி அநாதரவாக விடப்பட்ட மாணவ மாணவிகள் பலர் அன்றிரவை உணவுதானுமின்றி வீதிகளிலேயே படுத்துறங்க நேர்ந்தது. அடுத்த நாள் யாழ்ப்பாணத்தவர் சிலர் இந்த அநியாயத்தைக் கண்டு மனமிரங்கிக் கொடுத்துதவிய பணத்தோடு, றெயில்ஏறி, பஸ்ஏறி தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பினர். பாடசாலை அதிபர்கள் வாதாடினார்கள். தங்கள் கையில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை நடுத் தெருவில் விடுவது அநீதி என்று கூறினார்கள். இராணுவம் அசைந்து கொடுக்கவில்லை இது காரணமாக

பாடசாலை மாணவ வட்டாரத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. 15,000 மாணவர் அன்று தொடக்கம் சில தினங்கள், கடற்படை, தரைப்படை, பொலீஸ்படை, அரசாங்கம் முதலியவற்றிற்கு எதிராகக் கோஷங்களைக் கிளப்பிக் கொண்டும், சுலோக அட்டைகளைத் தாங்கிக் கொண்டும், ஊர்வலமாக வந்து இராணுவம் கைப்பற்றிய பாடசாலைகள் முன் மறியல் செய்தும், தமது எதிர்ப்பைக் காட்டியதில் வியப்பில்லை.

இவர்கள் இப்படி நடந்து கொண்டது தமிழரசுக் கட்சியின் தூண்டுதலால் என்றும், ஆசிரியர்களின் தூண்டுதலால் என்றும் கூறுவது உண்மைக்கு மாறானது. தமிழரசுத் தந்தை செல்வநாயகம் சில நாட்களுக்கு முன் வெளியிட்டு எல்லாப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் விநியோகஞ் செய்யப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில் மாணவர்கள் சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபடல் ஆகாது என்றும், ஆசிரியர்களின் தலையாய கடமை மாணவர்களைப் பயிற்றுவதே என்றும் கூறிப் பாடசாலைகள் ஒழுங்காக நடைபெற வேண்டுமெனக் கேட்டுள்ளார். இதன்பின் பொதுவாக சனி, ஞாயிறு தினங்களிலே தான் ஆசிரியர் ஊர்வலங்களும் மாணவர் ஊர்வலங்களும் நடைபெற்று வருகின்றன. மாணவ மாணவிகள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வதை நிறுத்திக் கொண்டனர்.

## சத்தியாக்கிரகிகளை இராணுவம் முற்றுகையிடல்

பொலீசாரும் இராணுவமும் சேர்ந்து 2-3-61இல் சத்தியாக்கிரகிகளைச் சுற்றிக் காவல் செய்து, சத்தியாக்கிரகிகள் ஒருவராவது வெளியே செல்ல முடியாமலும், வெளியிலுள்ளோர் ஒருவராவது உள்ளே வரமுடியாமலும் பலமாகக் காவல் புரிந்தனர். வெளியிலுள்ளோர்

எவராவது சத்தியாக்கிரகிகளுக்கு உண்ண உணவோ குடிக்கத் தண்ணீரோ கொடுக்க முடியாதவாறு தடை செய்தார்கள். அதோடு சுற்றி நின்ற சனங்களைத் தாக்கிக் குண்டாந்தடிப் பிரயோகஞ் செய்ததால் 5 பேர் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். வேறு 13 பேருக்குச் சாதாரண காயங்கள் ஏற்பட்டன. இப்படி 48 மணித்தியாலங்களாகச் சத்தியாக்கிரகிகளைப் பட்டினிபோட்ட பின்பே. முற்றுகை தளர்த்தப் பட்டது. இதையிட்டுத் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் ஒரு பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறியது பின்வருமாறு "நேற்று (2-3-61) வியாழக்கிழமையிலிருந்து இன்று காலை இது வரையும், இராணுவமும் கடற்படையும் சட்டத்திற்கு விரோதமாக நடந்து வருகின்றன. ஆயுதப்படைகளின் இவ்வித நடத்தை உண்மையில் புதன்கிழமையிலிருந்தே ஆரம்பித்து விட்டது. மக்கள் தாராளமாக நடமாட முடியாதபடி தடுக்க இராணுவத்துக்குச் சட்டப்படி அதிகாரம் கிடையாது. மனிதத்தன்மை அற்ற முறையில் நடக்கும் அளவுக்கும் அவர்கள் நடத்தை மிஞ்சி விட்டது. எங்கள் சத்தியாக்கிரகிகளுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் கூடக் கிடைக்க முடியாதபடி அவர்கள் தடுத்தனர்."

## அக்கிரமத் தாக்குதலை அகிம்சையால் வெல்லுதல்.

பலதடவைகளில் பொலீசாரும் இராணுவத்தினரும் ஒரு காரணமுமில்லாமல், நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளையும், பொதுசனங்களையும், குண்டாந்தடி துப்பாக்கி முதலியவற்றால் அடித்துத் துரத்தி இம்சித்தனர். ஆங்கில, தமிழ் தினசரிப் பத்திரிகைகள் தந்த தகவலின்படி, ஞாயிற்றுக்கிழமை (5-3-61) இரவு 11மணி வரையில் இவ்வித தாக்குதல் ஒன்று நடைபெற்றது. அன்று அந்நேரத்தில் 5000த்திற்கு மேற்பட்ட சனங்கள் சத்தியாக்கிரகிகளையும் அறப்போர்க் களத்தையும் தரி

சித்தற்கென திரண்டிருந்தனர். அந்நேரம் அங்கு அரசாங்க அதிபர் திரு. விஜயரட்ணவும் பொலீஸ் அதிகாரி திரு. ஆண்ட்டும் வந்தனர். பொலீஸ் அதிகாரி தனது உத்தியோக உடையில் இல்லை. சாதாரண உடையே அணிந்திருந்தார். யாதொரு காரணமுமில்லாமல், சனங்களை அடித்துத் துரத்தும்படி கட்டளை இட்டார். குண்டாந்தடிப் பிரயோகம் ஈவிரக்கமில்லாமல் செய்யப்பட்டது, துரத்தித் துரத்திச் சனங்களை அடித்தனர். இதில் 5 பேருக்கு காயங்கள் உண்டாகிச் சிகிச்சை பெற வேண்டியிருந்தது. அடிவாங்கும் போதெல்லாம் சனங்கள் "முருகா, முருகா" என்று சொல்லிக் கொண்டிருந்தனரேயன்றி போலீசாரைத் திருப்பித் தாக்க முயற்சிக்கவில்லை. தொண்டர்கள் அல்லாத பொது சனங்களும், இம்சையைக் கைவிட்டு, அகிம்சையைக் கடைப்பிடித்தது, இயக்கத்துக்கு மாபெரும் வெற்றி.

இன்னொரு நாள் பகல் நேரத்தில், கச்சேரி வாயில்களை 500க்கு மேற்பட்ட பெண் தொண்டர்கள் மறியல் செய்து கொண்டிருந்தனர். அரசாங்க அதிபர் திரு. விஜயரட்ண இராணுவ அதிகாரி கேணல் உடுகம என்பவரோடு கச்சேரியின் உள்ளிருந்து பிரதான வாயிலுக்கு வந்து வெளியே செல்ல முயற்சித்தார், தொண்டர்கள் தடுத்தனர். சிறிது தயங்கிய பின், "நான் எப்படியும் இந்தத் தடுப்புக் காவலை முறியடிக்க வேண்டும், ஆகவே இந்தப் பெண்கள் மீது கால் வைத்து நடந்து செல்லப் போகிறேன்." என்று கூறிக்கொண்டு செயலில் இறங்கினர். பெண் தொண்டர்கள் அஞ்சினர்களில்லை. ஆனல் நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள். இரண்டொரு அடி முன் வைத்த அரசாங்க அதிபரை, கேணல் உடுகம தடுத்துக் கையாற் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே சென்றார். அரசாங்க அதிபரின் செயல் முயற்சி, வடிகட்டிய காடைத்தனம் என்று நாம் சொல்ல விரும்ப



களம் நோக்கிக் கைகட்டி அணி நடையில் மாணவிகள்.

வில்லை. அவசரம் பேசும் நகைச்சுவை நடிப்பு என்று கொள்ளவே விரும்புகின்றோம். வீணர்களின் இத்த கைய வம்புச் செயல்களையும் தாங்கிக் கொள்ளும் இத யம் படைத்த எம் தாய்க்குலத்திற்கு அஞ்சலி.

## சனப் பிரதிநிதிகள் சபையில் இப் பிரச்சினை

### நிதி மந்திரியின் நீதியற்ற பேச்சு

இச் சத்தியாக்கிரக இயக்க நடை முறைகளைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து நேரே பார்த்துச் சென்ற பல முக்கிய பிரமுகர்கள், பொலீசா ரின் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்தனர். பத் திரிகைகள் படங்களுடன் உண்மைத் தகவல்களைத் தின மும் வெளியிட்டு வந்தன. 1-3-61 இல் கூடிய சனப்பிரதி நிதிகள் சபைக் கூட்டத்திலே, திரு. தகநாயக்கா இப் பிரச்சினையைக் கிளப்பினர். வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் அரசாங்கம் ஸ்தம்பித்து விட்டது என்றுகூறி, இதையிட்டு அரசாங்கம் என்ன விளக்கம் கூறப்போ கிறது என்று கேட்டார். கொம்யூனிஸ்ட் எம். பீ. திரு பீற்றர் கெனமன், போலீசாரின் மிருகத்தனமான செயல் களைக் கண்டித்துப் பேசினர். நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க இவற்றிற்குச் சமாதானங் கூறும் முகமாகப் பேசியதில், பொலீசார் நடந்து கொண்ட விதம் சரியானதே என்றும், சத்தியாக்கிரகிகள் என்று சொல்லப்படுபவர்களே அசம்பாவிதங்கள் நிகழ்தற்குக் காரணமாய் இருந்தார்கள் என்றும் கூறினர். அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீ காந்தா தமது முக்கிய உத்தியோக கடமை ஒன்றைச் செய்வதினின்றும் அவரைச் சத்தியாக் கிரகிகள் தடுத்தனர். ஆகவே அவர்களை வலோற்கார மாக அப்புறப்படுத்த வேண்டிய பொறுப்புப் பொலீசா ரைச் சார்ந்து விட்டது. இதைச் செய்யும்போது, சில

ருக்குக் கொஞ்சம் காயங்கள் ஏற்பட்டது தவிர்க்க முடியாதது என்ருர். உடனே எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒருவர் பொலீசார் சனங்கள் மீது கற்களை வீசிக்கலைக்க முயற்சித்ததும் ஒரு தகுந்த நடவடிக்கையா என வினவியபோது "பொலீசார் கற்களைச் சனங்கள்மீது வீசியது தப்புத்தான்" என ஒப்புக் கொண்டார்.

## சில ஆண்டுகளில் இலங்கையில் சர்வம் சிங்களமயம்

நிதி மந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சிங்கள அரசின் கொள்கையையும் போக்கையும் தெளிவுபடுத்திக் கூறியவை சில சிறுபான்மை மக்களுக்குத் திகிலை ஊட்டக் கூடியவையாய் அமைந்திருந்தன, இன்னும் 15 அல்லது 25 அல்லது 50 ஆண்டுகளில் சிங்களமே இலங்கை முழுவதும் அரசாங்க மொழியாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் அரசாங்கம் அவசரப்பட்டு இதைச் செய்ய விரும்பவில்லை. இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிற மொழிகளுக்கும் சில சலுகைகள் கொடுத்து, பின்னர் மெல்ல மெல்ல அவையெல்லாம் அறவே நீக்கப்பட்டு, சிங்களம் மாத்திரமே உபயோகத்தில் இருக்கும் ஒரேயொரு தனி மொழியாகத் திகழும் இந்தக் கனவை நனவாக்கும் சூழ்நிலை தீவிரமாக உருவாகுவதற்காக அரசாங்கம் அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறது. இவ்வித கருத்துக்களை அரசியற் பரிபாஷையில் நிதிமந்திரி சூட்சகமாகத் திருவாய் மலர்ந்தருளினர். ஆகவே, தமிழ்பேசும் மக்களுக்கு மொழி சம்பந்தமாக சில சலுகைகள் சில காலத்துக்கு வழங்கவும், சிங்களம் உபயோகிப்பதில் ஏதாவது கஷ்டங்கள் ஏற்பட்டால், அவற்றைச் சிலகாலத்திற்கு இலகுவாக்கவும், அரசாங்கம் ஒப்புமே தவிர, தமிழ்பேசும் மக்களின் மொழி உரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதைநிதிமந்திரி சுருங்கச்சொல்லி விளங்கவைத்தார்.

சலுகைகள் பயனற்றவை நிரந்தரமானவை அல்ல. ஒரு மந்திரி போய் இன்னொரு மந்திரி வந்தாலோ, ஒரு அரசாங்கம் வீழ்ந்து இன்னொரு அரசாங்கம் வந்தாலோ இந்தச் சலுகைகள் கதி அதோ கதிதான், உதாரணமாக நீதி மந்திரி திரு. சாம். பீ. சீ. பெர்னன்டோ போய், திரு. கே. எம். பீ. ராஜரட்ன நீதிமந்திரியாய் வந்தால், மொழிச் சலுகைகள் என்ன கதியை அடைய நேரிடும் என்பது எமக்குத் தெரியும். இது போலவே, எஸ். எல். எப். பீ. அரசாங்கம் போய், எம். ஈ. பீ. அரசாங்கம் வந்தால், சலுகைகள் எல்லாம் உடனே மறைந்து விடும். மேலும், இச்சலுகைகள் ஓரளவு சட்ட ரூபத்தில் இருந்தாலும், அவற்றை நிர்வகிப்பதில், குட்டி நிர்வாகிகள் தலையிட்டால், அவற்றைப் பயனற்றவை ஆக்கி விடலாம். உதாரணமாக, இப்போதும் தமிழ்ப் பிரதேசங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு அனுப்பப்படும் பணங்கள், சுற்று நிருபங்கள், கடிதங்கள் தமிழ் மொழியிலும் இருத்தல் வேண்டும் என்பது, சிங்கள அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட ஒரு சலுகை. இந்தப் பிச்சையையாவது அரசாங்க நிர்வாகிகள் தமிழ் பேசும் மக்களுக்கு அளிப்பதில்லை. பாரங்கள், சுற்று நிருபங்கள், கடிதங்கள் என்பன தமிழர்களுக்கு தனிச் சிங்களத்தில், அல்லது சிங்களமும் ஆங்கிலமும் மாத்திரம் உள்ள விதத்தில் அனுப்பப் படுகின்றன. தமிழில் அனுப்பப்படுவதில்லை.

### எந்தச் சட்டப்படி இராணுவம் அனுப்பப்பட்டது.

நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சனப் பிரதிநிதிகள் சபையில் இராணுவம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டதென்றும், இம் மாகாணங்களில் அரசாங்க அலுவல்கள் தடைபடாது தொடர்ந்து நடைபெறுவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதென்றும் கூறினர். டாக்டர். என். எம்

பெரேரா கடற்படை தரைப் படையினரை முற்ருய் நம் பக் கூடாதென்றும், அடக்கு முறைகளைக் கையாண்டு இதைப்போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்றும் எச்சரித்து, அமைச்சரவையில் அவசர கால சட்டத்தை அமுல் நடத்த ஆசைப்படும் பித்துக்குளிகள் சிலர் இருக்கிருர்கள் என்றும் கூறினர். எந்தச் சட்டத்தின்படி இராணுவம் அனுப்பப் பட்டது என வினவினர். பாதுகாப்புச் சட்டத்தின் 23ம் பிரிவின்படி அனுப்பப் பட்டதென நிதி மந்திரி கூறியபோது, டாக்டர். என். எம். பெரேரா, 23ம் பிரிவின்படி அத்தியாவசிய சேவைகள் நிர்வகிப்பதற்குத் தான் சட்டம் இடமளிக்கிறது, ஆனல், இராணுவத்தினரின் நடவடிக்கைகள் இந்த அதிகாரத்தை மீறி விட்டதாகவே தோற்றுகிறது, எனச் சுட்டிக் காட்டினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், யாழ்ப்பாணம் இராணுவம் போனபின், தடை செய்யப்பட்ட பகுதி தடை செய்யப்படாத பகுதி என இரு கூருகப் பிரிக்கப்பட்டு இருப்பதாகத் தான் கருதுவதாகவும், பலர் தங்கள் வீடுகளுக்குள்ளேயே காவலில் வைக்கப் பட்டுள்ளனர் என்றும் கூறினர். பால்க்காரனே, பாண் காரனே, காய்கறிக்காரனே இப்பகுதிகளுக்குப் போக முடியாமலும், வீட்டுக்காரர்கள் இப்பொருட்களை வெளியே வந்து வாங்க முடியாமலும் தடுக்கப்பட்டு இருக்கிருர்கள். ஆதலால் இவர்கள் உணவுக்குத் திண்டாடுகிருர்கள். மேலும், தபால் சேவகர் ஒருவர், இராணுவத்தினரின் துப்பாக்கி முனையால் தாக்கப்பட்டிருக்கிருர் என்றும், பள்ளிக்கூட மாணவர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்றும், சத்தியாக்கிரகிகளுக்கு உணவளித்தவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும், டாக்டர்களும், மருத்துவத் தாதிமார்களும் தடுக்கப் பட்டதனல், ஆஸ்பத்திரி வேலைகள் ஸ்தம்பித்தன என்றும் டாக்டர்.

பெரோா எடுத்துக் காட்டினர்.

## தமிழர் பிரச்சினைபற்றி வட்டமேசை மகாநாடு.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பேசியபோது, இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பது அவசியம் என்றும், இதை அரசியல் பிரச்சினையாகக் கருதாது தேசிய பிரச்சினையாகக் கருதி, எல்லாக் கட்சிகளும் சேர்ந்த ஒரு வட்டமேசை மகாநாடு கூட்டி அதில் உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனவும் ஆலோசனை கூறினர். ஆனல் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தோர் இந்த வட்டமேசை கூட்டும் ஆலோசனையை ஏற்க மறுத்து விட்டனர். இந்த வட்டமேசை மகாநாடு வேண்டும் என்ற எண்ணம் பல வருடங்களாக அரசியல் வட்டாரங்களில் அடிபட்டு வருகின்றது. ஆயினும் இவ்வித மகாநாட்டைக் கூட்ட ஒரு அரசாங்கமும் முன் வரவில்லை. திரு. டட்லி சேனநாயக்கா சில மாதங்களுக்கு முன் சிறிது காலம் பிரதமராய் இருந்தும் கூட இம் மகாநாட்டைக் கூட்ட முயற்சிக்கவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. தமிழரசுக் கட்சியும் இவ்வித வட்டமேசை மகாநாட்டை ஆர்வத்தோடு வரவேற்கவில்லை. ஏனெனில் மொழிப் பிரச்சினைக்கு மாத்திரமே இம் மகாநாட்டில் இடம் கொடுக்கப்பட்டு, சில சலுகைகளைப் பெற உதவுமேயன்றி, தமிழ் பேசும் மக்களின் இதர இழந்த உரிமைகளைப் பெற இம்மகாநாட்டில் வழியில்லாது போய்விடும் என்ற அச்சத்தினல், இவ்வித வட்டமேசை மகாநாடு சிங்கள அரசும் அவர்களின் ஆதரவாளர்களும் உருவாக்கும் ஒரு சதித்திட்டமே என்று கருதுகின்றனர்.


சனப் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற விவாதத்தின் போது பலரும் பலவித அபிப்பிராயங்களைக்

கூறினர்கள், ஆனால் அமைச்சரவையும் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களும், மீண்டும், மீண்டும் பொலீசார் செய்தது சரி என்றும் தமிழரசுக்கட்சித் தொண்டர்களே விஷமத்தனம் செய்தனர் என்றும் கூறினர்.

## பொலீஸ் அக்கிரமம் பற்றி ஆங்கில தினசரியின் கூற்று.

"ரைம்ஸ் ஒவ் சிலோன்" என்னும் ஆங்கிலத் தினசரி தீட்டிய தலையங்கத்தின் தமிழாக்கம் பின்வருமாறு "நசல் பிரபு லண்டன் நகரில் 4000 பேரோடு பாதுகாப்பு அமைச்சின் காரியாலயத்தின் முன் நான்கு மணித்தியாலங்கள் இருந்து சத்தியாக்கிரகம் செய்தும், பொலீசார் தனக்கெதிராகவோ, தன்னுடன் இருந்த மற்றையோருக்கெதிராகவோ ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையெனப் பிரலாபித்தார். இந்தப் பிரபு திங்கட்கிழமை (20-2-61) யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சித் தொண்டர்களோடு சத்தியாக்கிரகம் செய்திருந்தால், இவ்விதம் பொலீசாரில் குறைசொல்ல இடமிருந்திராது, நசல் பிரபுவின் சத்தியாக்கிரகமும் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகமும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டன ஆயினும், நசல் பிரபு ஒழுக்கப் பண்பு அமைந்த லண்டன் பொலீசாரின் கண்காணிப்பில் இருந்தார், தமிழரசுக் கட்சிச் சத்தியாக்கிரகிகள் இலங்கைப் பொலீசாரின் பிடியில் சிக்கியிருந்தனர். இது தான் வித்தியாசம் ... " யாழ்ப்பாணத்திற்கு இராணுவத்தை அனுப்பியது தவறு என்று கூறுவது மிகையாகாது, இராணுவ நடமாட்டத்தினால் தான் ஆட்சி செய்யலாம் என்று அரசாங்கமோ நீதிமந்திரியோ கருதினால், நாம் அதை ஒப்பமாட்டோம்.

சத்தியாக்கிரகிகளை இராணுவம் எப்படிச் சமாளிப்



கொடி பிடித்து அணி அணியாய்க் களத்தை நோக்கி விரைந்து செல்லும் வாழைச் சேனைக் கன்னியர் கூட்டமும், அறப்போர்க் களத்தே அமைதி நிலவ அமர்ந்திருக்கும் துறை நிலாவணைக் காளையர் கூட்டமும்.

பது என்பது பற்றி படைகளுக்கு என்ன விதமான கட்டளைகள் இடப்பட்டன என்பது தெளிவாய்த் தெரியவில்லை. ஆனல் சத்தியாக்கிரகிகள் மிகவும் அமைதியான முறையிலே மறியல் செய்கிருர்கள் என்பதில் சந்தேகம் சற்றும் இல்லை. அங்கே இராணுவத்தின் நடமாட்டம் சூழ்நிலையைச் சூடேற்றி அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்கு வழிகோலும் என்பது அரசாங்கத்திற்கும் தெரியாமல் இராது. இராணுவத்தினர் இல்லாமலே பொலீஸ் படையினர் தாராளமான அளவு கெடுதியைச் செய்திருக்கையில், இராணுவப் படைகளையும் பொலீஸ் படைக்கு "உதவி" செய்யத் தேவைப்பட்டது, ஏனென எமக்குத் தெரியவில்லை. நிதிமந்திரி உளுத்துப் போன கொள்கையாகிய "ஆட்சி செய் அல்லது விட்டு ஓடு" என்பதைச் சொல்வது நகைப்புக்கிடமானது. இதற்கு முன் இருந்த ஒரு அமைச்சரவை ஆட்சி செய்யவும் முடியாது, விட்டு ஓடவும் விரும்பாது பதவியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருந்தது இந்த அமைச்சருக்குத் தெரியாதா? சென்ற சபை முதல்வர் (திரு. ஏ. பீ. ஜயசூரியா, சுகாதார அமைச்சர்) யாழ்ப்பாணக் கச்சேரியின் வேலைகள் யாவும் இப்போ ஸ்தம்பிதம் என்பதையே மறுத்தார் இது உண்மையானல் இராணுவம் ஏன் அனுப்பப் பட்டது.?"

## வடக்கிலும் கிழக்கிலும் அரசு செயலற்று விட்டது.

செனேற் சபையில் ஒரு கேள்விக்கு விடையளிக்கையில் பிரதம மந்திரி "வடக்கிலும் கிழக்கிலும் அரசு செயலற்றுப் போயிற்று" என்று கூறி, அகவே தான் துருப்புகள் அங்கு அனுப்பப் பட்டன என விளக்கிக் கூறினர். பிரதமர் லண்டன் போகுமுன் வெளியிட்ட ஒரு நீண்ட வாநெலிப் பேச்சில் தமிழர்களுக்குச் சகல விதமான மொழிச் சலுகைகளும் அளித்திருக்கவும் இன்

னும் அதிருப்தி காட்டுவதும் சரியல்ல. மொழி விஷயம் பற்றி ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் லண்டனிலிருந்து திரும்பியதும் தமிழர்களோடு கலந்து பேசத் தயார், ஆனல் இப்பேச்சு வார்த்தைகள் தொடங்கு முன் சத்தியாக்கிரகம் நிறுத்தப்படல் வேண்டும், சிங்களம் மாத்திரம் சட்டத்தில் ஒரு சொல்லைத்தானும் மாற்ற முடியாதென்பதை உணர வேண்டும், தமிழ் மொழி உபயோகத்தில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால், அவற்றைமாத்திரம் ஆலோசனை செய்யலாம்.

இந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுமாயின் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கலாம். இல்லையேல் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்து இன்றைய ஸ்தம்பித்த நிலையை நீக்க முன் வரும். இப்போ தமிழரசுக் கட்சியால் சத்தியாக்கிரகம் என்று சொல்லி நடத்தப்படுவது பலாத்காரத்தைக் கொண்டது. அரசாங்கத்திற்கு எதிராக உள்ள சக்திகளின் தூண்டுதலால் இது நடைபெறுகிறது. இந்த விஷமத்தனமான இயக்கத்துக்கு தமிழர்களின் ஆதரவு இல்லை என்று திடமாகச் சொல்லலாம். சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடும் சில தமிழர்களுக்கு ஆதரவளிப்பது தேசத் துரோகமாகும். இவ்வித கருத்துக்களைப் பிரதமர் தமது வானொலிப் பேச்சில் வெளியிட்டார். தமிழர்கள் இந்தப் பேச்சால் திருப்தியடைந்து விடவில்லை. தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து சத்தியாக்கிரக இயக்கத்தை தீவிரமாக ஆதரிக்கத் தொடங்கினர்.

# அறப்போருக்கு முஸ்லீம் பெருமக்கள் பேராதரவு.

**கல்வி மந்திரியின் வேண்டுகோள்**
**புறக்கணிக்கப் பட்டது.**

இலங்கையில் வாழும் முஸ்லீம் மக்களின் தாய்ப் பாஷை தமிழ், அவர்கள் வீட்டில் பேசும் பாஷை தமிழ், அவர்கள் கல்வி கற்றதும், அவர்கள் மூதாதையர் கல்வி கற்றதும், அவர்கள் குழந்தைகள் கல்வி கற்பதும் தமிழ் மொழி மூலமேயாகும். அவர்கள் சமய நூல்கள் மிகப் பல தமிழ் மொழியிலேயே காணப்படுகின்றன. ஆனால் வசிக்கும் சூழல் காரணமாக சிங்கள மாகாணங்களில் வாழ்ந்து வரும் முஸ்லீம்கள், தாய்ப்பாஷை தமிழாயிருப்பினும், சிங்கள மொழியையும் நன்கு பேசும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர். தமிழ்ப் பிரதேசங்களாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் முஸ்லீம்கள் தமிழ் மொழிப்பற்று உடையோராய், சிங்கள மொழி அறியாதோராய் இருக்கின்றனர். எனவே, சென்ற சில ஆண்டுகளாய், சிங்கள அரசாங்கத்தால் கைக் கொள்ளப்படும் சிங்களத் திணிப்பு நடவடிக்கைகள், அவர்களையும் பாரதூரமாகப் பாதிப்பதை உணரத் தொடங்கினர். ஆகவே, தமிழ் உரிமைப் போரில் அவர்களும் முழு மனத்தோடு சேர்ந்தனர். இதைக் கண்டு கொழும்புப் பகுதியில் வசிக்கும் முஸ்லீம் தலைவர்கள் சிலர் தடுக்க முயன்றனர். கல்வி மந்திரி **ஜனாப் பதுறுதீன் மம்முது**, இலங்கையிலுள்ள சகல முஸ்லீம்களுக்கும், சிறப்பாக வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லீம்களுக்கு வானொலி மூலம் செய்தி விடுத்தார். அதில் சிங்கள அரசு முஸ்லீம்களுக்கு இதுவரை செய்துள்ள பல நன்மைகளையும் சலுகைகளையும் ஞாபகப்படுத்தி, அரசாங்கத்தை ஆதரிப்பதுதான் அவர்கள் கடமை என்றும் கூறி, ஒரு சில

முஸ்லீம்கள் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆதரிக்கமுன் வருவது கண்டிக்கப்பட வேண்டியதென்று திருவாய் மலர்ந்தருளினர். சேர். ரசீக் பரீதும் இத்தகைய அறிக்கை ஒன்றை விடுத்தார். யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற உறுப்பினர் ஹாஜி. வி. எம். எம். அபுசாலி சில நாட்களின் முன் ஒரு சர்வ கட்சி மகாநாட்டில் பேசும்போது, "நாம் மதத்தால் இஸ்லாமியர் ஆனாலும் இனத்தால் தமிழரே யாகும். எமது மொழி தமிழ் மொழி. அதனைக் காக்க உயிரைக் கொடுக்கவும் தயங்க மாட்டோம். கொழும்பி லுள்ள முஸ்லீம்கள் சிலர் மொழியுரிமைப் போராட் டத்தைப் பற்றி விதண்டாவாதம் பேசி எம்மைப் பிரிக்க முயல்வது எமக்கு வெட்கமாயிருக்கிறது" என்று கூறி னர். 2000திற்கு மேற்பட்ட முஸ்லீம்கள் யாழ்ப்பாணக் கச்சேரி மறியலில் கலந்து வருகின்றனர். சத்தியாக்கிர கிகளுக்கு உணவுப் பொருட்களை அள்ளி வழங்குகின் றனர். இவர்கள் தொண்டு மதிப்பிடற் கரியது.

### தாரகை தீட்டிய தலையங்கம்.

இலங்கை முஸ்லீம்களின் கருத்துக்களைப் பிரதி பலிக்கும் வார வெளியீடாகிய "தாரகை" என்னும் பத் திரிகை 3-3-61இல் தீட்டிய தலையங்கத்தின் ஒரு பகு தியைத் தருகின்றோம். "...................... கடந்த 20ந்திகதி தமிழ்ப் பகுதிகளில் சத்தியாக்கிரகிகளை, அதுவும் பாராளுமன்ற மக்கள் பெருந்தலைவர்களை இலங்கைப் பொலீசார் பாணத்தடிகள் முறியும் மட்டும் அடித்திருக் கிறார்கள். இது ஒரு சுதந்திர நாட்டில் ஒரு சுதந்திரப் பிரஜைக்கு அளிக்கும் தண்டனையா என்றுநாம் இலங்கை அரசாங்கத்தைக் கடாவுகின்றோம். நாகரீக உலகு கண்டு நகைக்கத்தக்க மிருகப் பிராயமான செய்கையே இது. இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் சிங்களவர் களின் அப்பன் வீட்டுச் சொத்து என்று இன்றைய



மட்டுநகர் அறப்போர்க் களத்தே கல்முனை முன்னுள் எம். பி. ஜனுப். எ. எம். மேர்சாவுடன் கல்முனை, நிந்தவூர், பட்டிருப்பு எம். பீக்களும், அக்கரைப்பற்று அப்துல்காதர் முதலியோரும் தகிக்கும் வெயிலில் அமர்ந்து சத்தியாக்கிரகஞ் செய்கின்றனர்.

பெரும்பான்மை சிங்களவரைக் கொண்ட அரசாங்கம் கருதுகிறதா? தமிழனுக்கும் அந்த அரசாங்கத்தில் பாதியளவு பங்குண்டு என்பதை அந்த அரசாங்கத்தை நடாத்தும் மரமண்டைகள் மறந்து போயினவா? சிறுபான்மையினரும் பெரும்பான்மையினருடன் சேர்ந்து நிற்காவிட்டால் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்திருக்குமா? சுதந்திரம் கிடைக்குமுன் பிரிட்டிஷ்ஸாரிடம் இந்திய முஸ்லீம்கள் கோரியது போன்று தமிழரும் பிரிவினையைக் கோரியிருந்தால் தமிழ்ப் பிரதேசம் சிங்களப் பிரதேசம் எனப் பிரித்தே கொடுத்து விட்டுப் போயிருப்பார்கள் அந்தப் பிரித்தாளும் கொள்கையை உடைய பிரிட்டிஷ்ஸார், அப்படிச் செய்யாதது தமிழர் செய்த பெரும் பிழை! அப்படித்தானே!!

ஒரு குடும்பமாக இருந்து வாழ்வோம் என்ற நல்லெண்ணத்தால் தமிழர் சிங்களவருடன் ஒத்துழைத்தது இன்று அவர்களுக்கே கேடாய் முடிந்திருக்கிறது. இறுதி வெற்றி நியாயத்துக்குண்டு என்ற மணிமந்திரத்தை மறக்காது மறத் தமிழர்கள் தங்கள் சத்தியப் பணியைத் தொடர்ந்து புரிந்து வருவார்களாக."

## கிழக்கு மாகாண முஸ்லீம்கள் நல்கும் ஆதரவு

யாழ்ப்பாணத்தில் மட்டும் முஸ்லீம்கள் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டார்கள் என்றால் மட்டக்களப்பு, திருகோணமலையிலும் மறியல் இயக்கத்திற்கு பேராதரவு தந்தார்கள். கல்வி மந்திரி ஜனாப் பதுறுதீன் மம்முது, சேர். ரசீக் பரீது முதலியோர் விடுத்த வேண்டுகோளை உதாசீனஞ் செய்து, சத்தியாக்கிரகத்தைத் தீவிரமாக ஆதரித்தார்கள். சேர். ரசீக் பரீதின் கடந்த கால அரசியல் தகிடுதத்தங்களையும் சந்தர்ப்பவாதச் செயல்களையும் முஸ்லீம் மக்கள் நன்கறிவார்கள் என்

றும், அவர்கள் அவரால் ஏமாற்றப்பட்ட காலம் மலை யேறி விட்டதென்றும், சத்தியாக்கிரகத்தில் முஸ்லீம் மக்கள் தமிழர்களோடு தோளோடுதோள் நின்று போராடுவார்கள் என்றும் கூறினர். கல்முனை முன்னுள் எம். பீ. ஜனுப். ஏ. எம். மேர்சா வெளியிட்ட அறிக்கையொன்றில் வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லீம்களுக்குப் புத்தி கூற முனையும் முஸ்லீம் தலைவர்கள் எனப்படுவோர், ஒரு முறை மட்டக்களப்புக்கு வந்து இயக்கத்தைப் பார்வையிட வேண்டுமென்றும், இது போன்ற மக்களின் சுதந்திர இயக்கங்களை நசுக்குவதில் எந்தச் சக்தியும் இது வரை வென்றதாகச் சரித்திரம் கிடையாதென்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்விதமே வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லீம் தலைவர்கள் பலர் ஜனுப். பதுறுதீன் மம்முது, சேர். ரசீக் பரீது ஆகிய தலைவர்கள் கூற்றை மறுத்துக் கூறியிருக்கின்றனர்.

மட்டக்களப்பிலும் திரிகோணமலையிலும் கச்சேரி முன் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் ஆயிரம் ஆயிரம் முஸ்லீம் ஆண்களும் பெண்களும் தினமும் கலந்து கொண்டனர். பொத்துவில் எம். பீ. ஜனுப். எம். ஏ. ஜனுப். அப்துல் மஜீத், நிந்தாவூர் எம். பீ. ஜனுப். எம். ஐ. எம். அப்துல் மஜீத், கல்முனை எம். பீ. ஜனுப் அகமத், மட்டக்களப்பு இரண்டாவது எம். பீ. ஜனுப். மாக்கான் மரிக்கார், ஆகிய ஐந்து முஸ்லீம் எம். பீக்களும் சத்தியாக்கிரக இயக்கம் வலுவடைவதற்கும் விஸ்தரிக்கப் படுவதற்கும் ஆகியவற்றை முழு மனதுடன் செய்து வருகின்றனர். முன்னுள் எம். பீக்களான ஜனுப். ஏ. எம். மேர்சா, ஜனுப். முகம்மத் அலி, ஜனுப் சின்னலெப்பை ஆகிய தலைவர்களும் சத்தியாக்கிரகத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## அகில இலங்கை முஸ்லீம் லீக்கின் தீர்மானம்.

தமிழரசுக் கட்சி ஆரம்பித்து நடத்திவரும் சத்தியாக்



மட்டு நகரிலே சிங்கள முஸ்லீம் தாய்மார்களின் அறப்போர்.



மட்டு நகரிலே சிங்கள முஸ்லீம் தாய்மார்களின் அறப்போர்.

கிரகம் பற்றி அகில இலங்கை முஸ்லீம் லீக் பின்வரும் தீர்மானங்களை வெளியிட்டிருக்கிறது, "வடக்குக்கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வரும் சத்தியாக்கிரகத்தின் காரணமாகவும், இப்பகுதியிலுள்ள தமிழ்பேசும் மக்களின் கோரிக்கைகளை நசுக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாகவும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை முன்னிட்டு, அகில இலங்கை முஸ்லீம் லீக் வருத்தமும் கவலையும் அடைந்துள்ளது. மொழிப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு சுமுகமான முடிவு காணப்படாதவரை நாட்டில் எவ்வித பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட முடியாதென்று லீக் கருதுகிறது.

"நாட்டின் எல்லா மக்களிடையும் சமுகங்களிடையும் ஒற்றுமை நிலவி சமாதானமும் நல்லெண்ணமும் நிலவும் பொருட்டு அரசாங்கம் இராணுவ பலத்தைக் கைவிட்டு மொழிப்பிரச்சினையில் சுமுக முடிவு காணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி முஸ்லீம் லீக் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளுகிறது."

முன்னாள் நிதி அமைச்சரும் பொத்துவில் முன்னாள் எம். பீயுமான ஜனாப் எம். எம். முஸ்தபா விடுத்துள்ள அறிக்கையில், இலங்கை முஸ்லீம்களின் தாய்மொழி தமிழ் என்பதில் ஐயமில்லை என்றும், சிங்கள அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் தமிழருக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்படும் பேராபத்தை மக்கள் எல்லோரும் உணர்ந்து விட்டனர் என்றும், பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், மகாநாடுகள் தோல்வியடைந்த பின்னர், இறுதி நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சத்தியாக்கிரகத்தில் தமிழ்பேசும் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டுக்கலந்துள்ளார்கள் என்பதில் தான் ஆனந்த மடைவதாகவும் கூறி, இயக்கத்தை மெச்சினர்.

முஸ்லிம் பெருமக்களின் தலைவர்கள் இன்னும் பலர் சத்தியாக்கிரகத்தில் தீவிர பங்கு எடுத்துக் கொண்டனர். முஸ்லீம்கள் வசிக்கும் முக்கிய கிராமங்களில் எல்லாம் உள்ள பட்டின சபைகள், கிராமச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் முதலிய பல ஸ் த ல ஸ்தாபனங்களில் எல்லாம் மறியல் இயக்கத்திற்கு அனுதாபத் தீர்மானங்களை நிறைவேற்றியதோடு அமையாது, ஆயிரக்கணக்கான தொண்டர்களைத் திரட்டிக் கொண்டு வந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுத்துவதிலும், பண முடிப்புகள் உதவுவதிலும், உணவு அளித்தலிலும் தமிழர்களையும் மிஞ்சிவிட்டனர் முஸ்லீம்கள். இன்று ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை போன்று தமிழ்பேசும் மக்களிடையே இதற்கு முன் ஒருபோதும் ஒற்றுமை ஏற்பட்டது கிடையாது.

## கட்சிகள் மறந்தார், தமிழர் ஒற்றுமை பூண்டார்.

### தமிழர்கள் ஆதரிக்கும் கட்சிகள்.

இலங்கையில் தமிழ் மக்கள் பல்வேறு அரசியற் கட்சிகளிலும் இருக்கிறார்கள். தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ற் கட்சி ஆகிய நான்கு கட்சிகளிலும் கணிசமான அளவு தொகையினர் இருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸும் இன அடிப்படையில் நிறுவப்பட்டு, தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இயங்குகின்றன. சமசமாஜக் கட்சியும் கொம்யூனிஸ்றகட்சியும் பரந்த அடிப்படையில் அமைக்கப்பட்டு, இன மொழி நன்மைகளை மாத்திரம் கருதாது, சமூக பொருளாதார முன்னேற்றத்தை இலட்சியமாகக் கொண்ட ஒரு சோசலிச அரசியல் அமைப்பை நிறுவ




கட்சி பேதங்களை மறந்து தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்ட காட்சியை
நகரபிதா திரு டி. எஸ். துரைராசா அவர்கள் தலைமையில்
யாழ் - நகராண்மைக் கழக உறுப்பினர்கள் மறியல் செய்வதன் மூலம் அறியலாம்.

முயற்சிப்பன. தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பல சென்ற 13 ஆண்டுகளாக சிங்கள அரசாங்கத்தால் அபகரிக்கப் பட்டுள்ளன என்பதை இடதுசாரிக் கட்சிகளாகிய சமசமாஜக் கட்சியும் கொம்யூனிஸ்ற் கட்சியும் ஒப்புக் கொள்ளுகின்றன. இந்த அபகரிப்பு, பெரும்பான்மையாகிய சிங்கள இனம் சிறுபான்மையாகிய தமிழ் பேசும் இனத்தின் அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றையும் முற்றுக ஒழித்துக்கட்டுவதற்காகவே, திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. இடதுசாரிகள் இதை எதிர்க்கிருர்கள் அவ்வளவே. இடதுசாரிக் கட்சிகளின் மேலிடத்திலே தமிழர் குரல் தெளிவாய்க் கேட்பதில்லை. தமிழ்க்காங்கிரஸ், சில வருடங்களுக்கு முன் தமிழர்களின் தலையாய கட்சியாய் இருந்தது. இப்போது செல்வாக்கை இழந்து விட்டது.

## தமிழர் கட்சிகளை மறந்து இயக்கத்தில் ஈடுபட்டனர்.

சென்ற பொதுத் தேர்தலிலே, தமிழ்ப் பிரதேசமாகிய வடக்குக்கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சி 15 ஸ்தானங்களையும், தமிழ்க் காங்கிரஸ் ஒரு ஸ்தானத்தையும் பெற்றன. இடதுசாரிக் கட்சிகள் ஒரு ஸ்தானத்தையாவது பெறவில்லை. ஐவர் சுயேட்சையாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஆகவே, தமிழ் பேசும் மக்கள் சார்பில் பேசக்கூடிய ஒரேயொரு கட்சி தமிழரசுக் கட்சி தான் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். இக்கட்சியின் உயிர்நாடி போன்றவர் **தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம்** தமிழரசுக் கட்சியினரால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்திற்கு 20-2-61 வரை போதிய ஆதரவைத் தமிழ் பேசும் மக்கள் கொடுத்துதவினர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனல் ஆரம்ப தினத்தில் நடைபெற்ற பொலீசின் மிருகத்தனமான அட்டூழியம் தமிழ் பேசும் மக்கள் எல்லோரையும் தங்கள் தங்கள்

கட்சிகளை மறக்கச் செய்து, சத்தியாக்கிரகத்தில் மன உறுதியோடு குதிக்கச் செய்தது. தமிழரசுக் கட்சியின் சில கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளாத மக்கள் பலர் கூட, தமிழ் மொழியின் விடுதலைக்காக, தமிழ் பேசும் மக்களின் தன்மான வாழ்வுக்காக, அறப்போரில் அலைஅலையாகச்சேர்ந்து திரண்டனர்.

## சுயேச்சை எம். பிக்கள் ஆதரவு

தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. **எம். சிவசிதம்பரம்** சத்தியாக்கிரக இயக்கத்தில் முதலிலிருந்தே அதிக ஆர்வங்காட்டிப் பங்கு பற்றிக் கொண்டார். இவர் இப்பொழுது மறியல் இயக்கத்தின் ஒரு முக்கிய நிர்வாகி எனக் கூறுதல் மிகையாகாது. யாழ்ப்பாண நகராண்மைச் சபை மேயர் திரு. **துரைராசாவும்** தமிழ்க் காங்கிரசின் இன்னொரு முக்கியஸ்தர். இவர் இந்த இயக்கத்துக்குச் செய்து வரும் தொண்டு அளப்பில! இரவு பகலாகக் கொதிக்கும் வெய்யிலில் கச்சேரிமுன் மறியல் செய்யும் ஆயிரக்கணக்கான தொண்டர்களின் துன்பங்களை நகராண்மைச் சபையின் கருணையான பல செயல்கள் சற்றுக் குறைத்து விட்டன. யாழ்ப்பாண எம். பீ. திரு **துரையப்பாவும்**, வவுனியா எம். பீ. திரு. **ரீ. சிவசிதம்பரமும்**, சுயேச்சை எம் பீக்களாக இருந்தும் சத்தியாக்கிரக இயக்கத்திற்குப் பேராதரவு நல்கி, தாங்களும் பல சமயங்களில் மறியல் செய்திருக்கிறார்கள். கிழக்கு மாகாணச் சுயேச்சை எம் பீக்களான பொத்துவில் எம். பீ. **ஜனுப் மஜீதும்**, நிந்தவூர் எம். பீ. **ஜனுப் மஜீதும்**, மட்டக்களப்பு இரண்டாவது எம். பீயும், யூ. என். பீயைச் சேர்ந்தவருமான **ஜனுப் மாக்கான் மரிக்காரும்** தமது பூரண ஒத்துழைப்பை உதவி வருகின்றனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 22 எம். பீக்கள் சத்தியாக்கிரகத்தில் தீவிரமாக ஈடுபட்

டுள்ளனர். எனவே, தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவு சத்தியாக்கிரகத்திற்கு உண்டு என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

## நீதி உள்ளம் படைத்த சிங்களப் பெருமக்கள்

தமிழரசுக் கட்சி ஆரம்பித்த சத்தியாக்கிரகத்தை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார் முதலிய பகுதிகளில் உள்ள சிங்களப் பெருமக்கள் பலரும் ஆதரித்தனர். "சிங்களவராகிய எமக்குச் சிங்களம் உயிர். அவ்விதமே தமிழருக்குத் தமிழ் உயிர். அரசாங்கமே, நீதி வழங்கு என்பது போன்ற சிங்களத்திற் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கிய சிங்கள மக்கள், ஆண்களும் பெண்களும், ஊர்வலங்களில் நூற்றுக்கணக்காக வந்து கச்சேரி மறியலில் கலந்து கொள்கின்றனர். சிங்கள மக்கள் பலர் இயக்க நிதிக்குப் பணமுடிப்புகளையும் உதவி, தொண்டர்களுக்கு உணவுமளித்துத் தமது ஆதரவைக் காட்டுகின்றனர். பல்லாயிரக் கணக்கான சிங்கள மக்கள் தமிழ்ப் பிரதேசங்களிற் குடும்பமாக வாழ்ந்தும், தொழில் நடாத்தியும் நிரந்தரமாக வசிக்கின்றார்கள். இவர்கள் பாதுகாப்புக்கும் நின்மதிக்கும் ஒருவித பங்கமும் ஏற்படாது என்பதை அறிவார்கள்.

மறியல் இயக்கத்தைப் பார்க்க வந்த அரசாங்கக் கட்சி எம். பியும் கம்பகாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் ஆகிய திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா சில தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து எல்லா நடைமுறைகளையும் கூர்ந்து அவதானித்த பின், கடைசித் தமிழன் வரையும் ஒரே முகமாக தமிழ் பேசும் மக்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மறியல் சாத்வீக முறையிலே நடைபெறுகிறது. நான் ஒரு தமிழனை

இருந்தால் இதே விதமாக எனது மொழியைக் காப் பாற்றப் போராடுவேன்"., எனக் கூறியது மிகைபடக் கூறியதாகாது. யூ. என். பீக் கட்சியைச் சேர்ந்த நீர் கொழும்புத் தொகுதி எம். பி. திரு. ஜூன்ரன் பெர்ணன்டோ என்பவரும் தமது கீழ்மாகாண விஜயத்தின்பின் இது போன்ற கருத்தையே வெளியிட்டார். அரசாங்க நிய மன எம். பீயான திரு. தொண்டமான் யாழ்ப்பாணத்திற்கு வந்து நிலைமையை அவதானித்த பின் இத்தகைய சாத் விக இயக்கத்தை ஆயுத பலத்தால் அடக்க முயல்வது பகற்கனவாகும் என்றும் தமிழ் பேசும் மக்களின் பிரச் சனைகள் எல்லாவற்றிற்கும் தீர்வுகாண உடனே நட வடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், காலம் தாழ்த் தினல் தேசத்திற்கே பெரிய அபத்தம் விளையுமென்றும் எச்சரித்துக் கூறினர். ஆயினும் அமைச்சரவையும் பிர தம மந்திரியும் இந்த அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுப்பதாய்த் தெரியவில்லை. சத்தியாக்கிரகிகளை அர்ப்பாட்டக் காரர்கள் என்றும் விஷமிகள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் திட்டுவதிலேயே காலத் தைக் கடத்துகின்றனர்.

## சிங்கள அரசின் பொய்யும் புரட்டும்

**இணைப்பாட்சி நாட்டைப் பிரிப்பது அன்று,**
**இணைப்பதே.**

சென்ற சில ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் முக்கிய கொள்கையாகிய இணைப்பாட்சி அல்லது கூட் டாட்சி பற்றி சிங்கள அரசும், யூ. என். பீ. முதலிய சிங்களக் கட்சிகளும் ஒரு பெரிய பொய்யைப் பிரசாரஞ் செய்து வருகின்றன. தமிழரசுக்கட்சி கோரும் இணைப் பாட்சி என்பது நாட்டைத்துண்டு போடுவது; அல்லது,

பிரிப்பது என்பதே இந்தப் பொய் ஆகும். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறினல் அது மெய்யாக மாறிவிடும் என்றும், ஒரு பொய் எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சனங்கள் அதை நம்புவார்கள் என்றும், **கிற்லரின்** பிரசார மந்திரி டக்டர் **கொபெல்ஸ்** சில சமயங்களிற் கூறுவார். தமிழரசுக்கட்சி, மக்கள் பிரதிநிதி சபையிலும், செனற் சபையிலும், நாட்டைத் துண்டு போடுவது அல்ல, இணைப்பாட்சி எனப் பலமுறை கூறியிருக்கிறது. ஆனல் மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்ற பான்மையாய் மீண்டும் மீண்டும் அமைச்சர்களும், அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களும், பல சிங்களத் தலைவர்களும் இந்தப் பொய்யையே விஸ்வ ரூபத்தில் பிரசாரஞ் செய்து வருகின்றனர்.

நகராண்மைச் சபைகள், பட்டின சபைகள், கிராமச் சங்கங்கள் போன்ற ஸ்தல ஸ்தாபன சபைகள் இலங்கையில் பல பாகங்களிலும் பல ரூபத்தில் பல்வேறு அதிகாரங்கள் உடையனவாய் இயங்குகின்றன. இது போலவே, மொழி அடிப்படையில் 95 வீதம் தமிழ்பேசும் மக்கள் வசிக்கும் வடமாகாணத்தையும், 85 வீதம் தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் கீழ் மாகாணத்தையும், ஒரு தமிழ்ப் பிரதிநிதியுமாக வகுத்து, இதற்கு ஒரு மக்கள் பிரதிநிதிகள் சபையை நிறுவி, பாதுகாப்பு, வெளிவிவகாரம், பணக்கட்டுப்பாடு, போக்குவரத்து முதலிய முக்கிய விஷயங்கள் ஒழிந்த ஏனைய அதிகாரங்களை இச் சபையிலேயே விடவேண்டும் என்றும், பின்னர் இவ்விரண்டு சபைகளின் பிரதிநிதிகள் உள்ள பொதுச் சபை இலங்கையின் முழு விவகாரங்களையும் செயலாற்றி நடத்த வேண்டுமென்றும், தமிழ் நாட்டில் வசிக்கும் சிங்கள மக்களுக்கும், சிங்கள நாட்டில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் உரிய உரிமைகளும் பாதுகாப்பும், அளிக்க

உறுதி கொடுக்கப்படல் வேண்டும் என்றும், இலங்கையிற் சில ஆண்டுகளாக நிலவிவரும் பிரிவினை மனப்பான்மை மறைந்து, ஒற்றுமை மனப்பான்மை வளர்ந்து, இலங்கை மக்கள் யாவரும் "இலங்கை எம் தேசம்" என்று தலை நிமிர்ந்து சொல்லக்கூடிய ஆட்சி முறையை அமைப்பதுவே இணைப்பாட்சியின் கருத்து. இதில் பிரிவினை என்ற பேச்சுக்கே இடமில்லை. இணைப்பாட்சி என்பது இணைந்து ஆட்சி செய்வது. இப்பொழுது நடைமுறையில் இருக்கும் ஆட்சி தனியாட்சி சிங்கள ஆட்சி. இவ்வித இணைப்பாட்சி முறையில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் தேசங்கள் இந்தியா, சுவிற்சிலாந்து, கனடா, யூ. எஸ். ஏ., யூ. எஸ். எஸ். ஆர். போல்வன.

## நாட்டுப் பிரிவினையைத் தமிழரசுக்கட்சி எப்பொழுதுமே எதிர்த்தது.

ஆகவே, பிரிட்டிஷ் இந்தியா சில வருடங்களுக்கு முன், பாரதம், பாக்கிஸ்த்தான் என இரு தேசங்களாகப் பிரிந்தது போல் அல்ல இணைப்பாட்சி. சென்னை, வங்காளம், மத்திய பிரதேசம், ஒரிசா முதலிய பிராந்தியங்கள் எல்லாம் சேர்ந்து இந்தியா என்னும் தேசம் இருப்பது போன்று, தமிழ்நாடும் சிங்கள நாடும் சேர்ந்து இலங்கைத் தேசம் இருக்கும். சென்ற பத்து ஆண்டுகளாகத் தேசப் பிரிவினையை மூர்க்கமாக எதிர்த்து வந்த கட்சி தமிழரசுக் கட்சி. சிங்கள, தமிழ் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க விரும்பிய கட்சி, இலங்கை ஒரே தேசமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட கட்சி தமிழரசுக்கட்சி. ஆனல், இந்த ஒற்றுமையைத் தமிழ் பேசும் இனத்தின் அழிவினூற்தான் பெற முடியும் என்பதையே எதிர்த்தது. தமிழ் மொழியை அந்நிய மொழியாக, அடிமை மொழியாக ஆக்கப்படும் அநீதியையே

எதிர்த்தது. கூர்ந்த மதியும், தூர நோக்கமும், பழுத்த அரசியல் அனுபவமும், திடசித்தமும் உள்ள திரு. சுந்தரலிங்கம் சிங்கள அரச சபையில் சில வருடங்கள் மந்திரியாயிருந்து, பின்னர் சிங்களத் தலைவர்கள் சிலரின் நம்பிக்கைத் துரோகச் செயல்களினால் மனக்கசப்பு அடைந்து, இப்போது இணைப்பாட்சிகூட உதவாது, தனித்தமிழ் நாடே வேண்டுமென, முன்னையில் இந்திய ஜனப் முகம்மத் அலி ஜின்னு கோரியது போல், பிரிவினை கோரிக் குரல் எழுப்புகின்றார். இவருடைய கருத்தைச் சார்வோர் தொகை சென்ற சில வாரங்களாக அதிகரிப்பதில் வியப்பில்லை. அநீதிகள் பெருகப் பெருக, மக்கள் எண்ணங்களும் மாறுதல் இயற்கையே. இணைப்பாட்சி சிங்களப் பெருமக்களின் சம்மதந்தோடன்றிப் பெறமுடியாது. தனியாட்சிக்கு இவ்வித சம்மதம் தேவையில்லை. முன்னுளிலே இந்திய காங்கிரஸ் ஆட்சிப்பீடம், ஜனுப் ஜின்னுவின் இணைப்பாட்சிக் கோரிக்கைகளுக்கு இணங்காததலால், பாக்கிஸ்த்தான் என்னும் தனியாட்சி நாடு புதிதாகத் தோன்றியது.

## சிங்களக் குடியேற்றத்தைத் தமிழரசுக்கட்சி எதிர்க்கவில்லை.

சிங்களத் தலைவர்கள் பரப்புகின்ற இன்னொரு பொய்க்கதை என்னவெனில், தமிழர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்களவர் குடியேறுவதையும், காணி வாங்கி வீடு கட்டுவதையும், தொழில் நடாத்துவதையும் எதிர்க்கிறார்கள் என்பது. பல தருணங்களிலும், தமிழரசுக்கட்சித் தலைவர்கள் இது உண்மை இல்லாதது எனச் சொல்லியிருக்கிறார்கள். எந்தச் சிங்களவராயினும் வர்த்தகம், தொழில், கமம் செய்வதையோ, காணி வாங்கிக் குடியாயிருப்பதையோ தமிழர்கள் எதிர்க்கவில்லை. இப்போதும் யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் முதலிய இடங்களில் சிங்களமக்கள் வாழ்ந்து வாழ்க்கை நடாத்தி வருகிறார்கள். தமிழ் பேசும் மக்கள் இதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். ஆனால், அரசாங்கத்தின் பண உதவியோடு, தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் பிராந்தியங்களில், தமிழ் பேசும் மக்களின் பலத்தைக் குறைப்பதற்காக, அரசாங்கம் திட்டமிட்டுச் சிங்களவரைக் குடியேற்றுவதையே தமிழரசுக்கட்சி எதிர்க்கிறது. உதாரணமாக, வவுனியாப் பகுதியிலே 10 ஆண்டுகளுக்கு முன் 80 வீதம் தமிழரும் 20 வீதம் சிங்களவரும் வசித்தனர். பல குடியேற்றத் திட்டங்கள் அரசாங்கத்தின் பண உதவியோடு நிறுவியதன் பயனாக, இப்போது 60 வீதம் தமிழரும் 40 வீதம் சிங்களவரும் வசிக்கிறார்கள். இன்னும் 5 ஆண்டுகளில், இக்குடியேற்றத் திட்டமுறையில் மாற்றங்கள் ஏற்படாவிடின், இங்கு 40 வீதம் தமிழரும் 60 வீதம் சிங்களவரும் வசிக்க ஏதுவாகும். 10 அல்லது 15 ஆண்டுகளில் மன்னார், கிளிநொச்சி, சாவகச்சேரி முதலிய தமிழ்ப் பகுதிகளிலும், சிங்களக் குடியேற்றத் திட்டத்தின் விளைவாக, சிங்களவர்களே பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படக்கூடும். இவ்வித அநீதியான நிலைமை உருவானதையே தமிழ்பேசும் மக்கள் எதிர்க்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில், இவ்வித சிங்களக் குடியேற்றத்தின் விளைவாக, சிங்களவர்களே பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப் படக்கூடும். இவ்வித அநீதியான நிலைமை உருவானதையே தமிழ் பேசும் மக்கள் எதிர்க்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில், இவ்வித சிங்களக் குடியேற்றம், இன்னும் பாரதூரமான விளைவுகளை உண்டாக்கியிருப்பதை நாம் அறிவோம். இதைத் தடுக்க இன்றைய தனியாட்சி முறையில், தமிழ்பேசும் மக்கள் சக்தி யற்றிருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் மூன்றிலொரு பங்கு தொகையினர். எனவே, 151 ஸ்தானங்கள் கொண்ட பாராளுமன்றத்தில், 50 ஸ்தானங்கள் ஆவது எமக்குக் கிடைக்கவேண்டும். ஆனால் 25 ஸ்தானங்களே இப்போ கிடைத்துள்ளன. சிங்களக் குடியேற்றத்தின் போக்கு உடனே மாற்றப் படாவிடில், இன்னும் சில ஆண்டுகளில் தமிழ் பேசும் மக்களுக்கு 10 ஸ்தானங்களுக்கு மேல் கிடைத்தல் சாத்தியமாகாது. இலங்கையில் நிலவுவது விசித்திரமான ஜனநாயகம்.

## மொழிப்பிரச்சனை ஒரு முடிந்த முடிபா?

தமிழரசுக் கட்சியோ தமிழ் பேசும் மக்களோ சிங்களம் அரசாங்க மொழியாய் இருப்பதை எதிர்க்கவில்லை. ஆனால் சிங்களம் மாத்திரம் அரசாங்க மொழியாய் இருப்பதையே எதிர்க்கின்றனர் தமிழையும் ஒரு அரசாங்க மொழியாய் சட்ட மூலம் பிரகடனஞ் செய்தல் வேண்டும், என்பதையே கோருகின்றனர். இந்தக் கோரிக்கை, நியாயமற்றது என்பதற்கு ஒரு தகுந்த காரணமாவது இதுவரை ஒருவராலும் சொல்லப்படவில்லை. இது சனங்களின் தீர்ப்பு என்று மாத்திரம் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சிங்களம் மாத்திரம் சட்டத்திற்குச் சம்மதம் அளிக்கவில்லை. எனவே தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமை பற்றிய சட்டத்தை, தமிழர்களின் சம்மதமின்றி, சிங்களவர்களே தீர்மானித்து விட்டனர். இது ஜனநாயகம் அன்று. பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்குச் செய்த பெரிய துரோகச் செயலாகும்.

தனிச்சிங்கள மசோதாவைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பின், முன்னாள் பிரதமர் காலஞ் சென்ற

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, லண்டன் சென்றபோது, இலங்கையில் மொழிப் பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டதென்றும், சனங்கள் தனிச் சிங்கள மசோதாவை ஏற்றுக் கொண்டார்கள் என்றும் ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளித்தபோது கூறினர். இப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சில நாட்களின் முன் லண்டனுக்கு சென்றபோது, ஒரு பேட்டியில் இலங்கையில் இனப் பிரச்சனை கிடையாது, ஆனல் மொழிப் பிரச்சனை உண்டு என்று கூறினர். உண்மை என்னவெனில், இலங்கையில் மொழிப் பிரச்சனையும் தீர்க்கப்படவில்லை. சிங்கள அரசு இப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு விட்டனவாக நினைத்துத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள்.

## திரு. சுந்தரலிங்கத்தின் கருத்து

நான்கு வருடங்களுக்கு முன் திரு. சுந்தரலிங்கம் "ரைம்ஸ் ஒவ் சிலோன்" பத்திரிகைக்கு "புத்த ஜயந்தியும் மொழிப்பிரச்சனையும்" என்ற தலைப்பில் வெளியிட்ட ஒரு கடிதத்தின் சில பகுதிகளின் தமிழாக்கம் பின்வருமாறு. "2500 ஆண்டுகளுக்கு முன் புத்த பகவான் மனித குலத்தின் துன்பத்தையும் விசாரத்தையும் துடைப்பதற்கு புனிதமான வழியைக் காட்டிச் சென்றார். ஆனல் இன்று சிங்கள அரசு, தமிழ் பேசும் மக்கள் துன்பப் பாதையில் செல்ல வழி காட்டுகிறது. சிங்களம் மாத்திரம் தான் அரசாங்க மொழி. இந்தத் தீர்ப்பு, இதை எக்காரணங் கொண்டும் மாற்ற முடியாது. இனி வரும் பொதுத் தேர்தலின் பின் வரும் அரசாங்கங்கள் கூட இதை மாற்றமுடியாது எனச்சிங்கள அரசைச் சார்ந்தோர் கூறுகின்றனர்.

பாராளுமன்றத்திலும் பேச்சு மேடைகளிலும், பத்

திரிகை வாயிலாகவும் நான் இதுவரை கூறிவந்ததைத் திரும்பவும் கூறுகிறேன். தமிழ் பேசும் மக்களைச் சிங்களம் பேசும் மக்கள் எவ்வகையிலாவது அடிமைப்படுத்த அல்லது பணிய வைக்க முயலுவார்களானால், அதை அவர்கள் இறுதி வரையும் எதிர்ப்பார்கள். இந்த எதிர்ப்பில், முதற் படியாக அவர்கள் புத்த பகவானுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடிப்பார்கள். காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தை உபயோகித்தபோது அது குண்டாந்தடி அடிகளிலும், துப்பாக்கிக் குண்டுப்பாய்ச்சலிலும், இரத்தம் சிந்தலிலும் கொண்டு சென்றது என்பது உண்மையே.............. எங்களிற் சிலர் திரு. டீ. எஸ். சேனநாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவலை, டட்லி சேனநாயக்கா, ஜே. ஆர். ஜயவர்த்தன முதலியோரை 1947ம் ஆண்டில் நம்பி நடந்திராவிட்டால், இலங்கையின் சுதந்திரம் வேறு வித உருவத்தில் அமைந்திருக்கும். அதோடு சிங்களம் மாத்திரம் சட்டம் வந்தே இராது. சிங்கள இலங்கை, தமிழ் இலங்கை என தேசங்கள் தோற்றியிருக்கும்.

இன்றைய நிலையில் தமிழ்ப் பேசும் மக்களால் தமிழ் இலங்கை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க நேர்ந்தால், அதற்குச் சிங்கள அரசே பொறுப்பாகும்.

## செனற்றர் நடேசன் வெளியிட்ட கருத்து

சில ஆண்டுகளுக்குமுன் செனற்றர் சோ. நடேசன் கியூ. சீ. பத்திரிகை வாயிலாக வெளியிட்டதன் தமிழாக்கத்தைத் தருகின்றோம். "பாராளுமன்றத்தில் மொழிச் சட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது, உண்மையாயினும், அது ஒரு ஜனநாயக நட

வடிக்கை என்று கொள்வது சரியல்ல. பல இன மக்கள் வாழும் நாட்டில், சிறு பான்மை இனத்தின் நலன்களைப் பாதிக்கும் நடவடிக்கைகள், பெரும்பான்மை இனத்தின் வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால், அது அந் நாட்டு மக்களின் முழுச் சித்தத்தையும் பிரதிபலிப்பது என்று கொள்ள முடியாது. இந்த ஜனநாயக தத்துவத்தின் ஒரு அடிப்படை அம்சத்தை, உலகில் எங்காவது இக்காலத்தில் மறுத்ததில்லை இலங்கையில் தவிர. இலங்கைப் பிரதமர் கொடுமை என்னும் சொல் உபயோகத்தை விரும்பா விட்டாலும், உண்மையைக் கூற விரும்பும் எவரும், இப்பொழுது இலங்கையில் நிகழ்வது பெரும்பான்மை இனக்கொடுமை, என்பதை ஒப்புக் கொள்வார்கள். இந்தப் பெரும்பான்மை இனம் தமிழர்களையும் அவர்கள் கலாச்சாரத்தையும் அழித்துக் கட்டுதல் என்னும் உண்மையான நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு, ஜனநாயகம் பற்றிய சில கருத்துத் தெளிவற்ற சொற்களையும் சொற் தொடர்களையும் உபயோகித்து, தங்கள் உண்மை நோக்கத்தை மறைக்கப் பார்க்கிறது. தமிழ் பேசும் மக்களை, அவர்கள் பிறந்து வளர்ந்த சொந்த நாட்டிலே, அரசியல் பொருளாதாரத் துறைகளிலே பின் தங்கச் செய்து, இரண்டாந்தரப் பிரசைகளாக வாழச் செய்கிறது. ஆனால், உலக சரித்திரம், ஏதாவது படிப்பினையை எமக்குத் தந்திருப்பின், அது ஒரு சிறுபான்மையினரின் உரிமைகளை, நீண்ட காலம் பெரும்பான்மை இனம் மறுக்க முடியாது என்பதே."

## அரசியல் அனாதைகளாக மலைநாட்டுத் தமிழர்கள்.

சிலவாரங்களுக்குமுன் லண்டன் சென்ற இலங்கைப் பிரதமர், தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கற் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். பாராட்ட வேண்




ஈழத்தின் மேலைத்தமிழர் அறப்போரில் கலந்து மறியல் செய்கிருர்கள்,




ஈழத்தின் மேலைத்தமிழர் அறப்போரில் கலந்து
மறியல் செய்கிருர்கள்.

டியது தான். ஆனால், கண்ணடி வீட்டில் வசிப்பவர் கல்லெறியக் கூடாதென்பதை மறந்து, தென் ஆபிரிக்காவைக் கண்டித்த இலங்கைப் பிரதமரை, தென் ஆபிரிக்காப் பிரதமர், இலங்கையில் திட்டமிட்ட இன ஒழிப்புக் கொள்கை தீவிரமாய்ச் செயல் பட்டு வரும்போது, எம்மைக்கண்டிக்க இலங்கைக்கு என்ன உரிமை இருக்கிறது, எனக் கேட்டார். இதை பிரதமர் ஸ்ரீமாவோ ஏதோ பேசி மழுப்பினலும், இது நியாயமான கேள்வி என்பதை இலங்கை மக்கள், சிறப்பாகத் தமிழ்பேசும் மக்கள் அறிவார்கள். தென் ஆபிரிக்காக் கறுப்பர்களுக்கு சில அரசியல் உரிமைகளாவது உண்டு. சற்று மட்டுப்படுத்தப்பட்டாலும், அவர்களுக்குக் குடியுரிமை மொழியுரிமை வாக்குரிமை உண்டு. ஆனல் இலங்கையில், 11 லட்சம் மலைநாட்டுத் தமிழருக்கு, சுதந்திர இலங்கை தோற்றிய பின், ஒரு வித அரசியல் உரிமையுமில்லை அவர்கள் நாடற்றவர்களாக, அரசியல் அனுதைகளாக ஆக்கப்பட்டனர். உலகத்திலே, நாடற்றவர் என்னும் ஒரு பிரிவினர் எந்தத் தேசத்திலும் இல்லை, இலங்கையைத்தவிர. மலைநாட்டுத் தமிழர், தலைமுறை தலைமுறையாக, இலங்கையில் தேயிலை, றப்பர்த் தோட்டங்களிலே பிறந்து வளர்ந்து வேலை செய்பவர்கள். இவர்களில் ஆயிரக்கணக்கானேருக்கு இந்தியா என்ெருரு தேசம் இருப்பதாகவே தெரியாது. கடலைக் கண்ணுல் பாராதவர் மிகப்பலர், ஆயினும், இவர்களை இலங்கை அரசு இந்தியர்கள், இலங்கைப் பிரசைகள் அல்ல என்று சொல்லுகின்றது. இந்திய அரசோ, இவர்கள் இந்தியப் பிரசைகள் அல்லர் எனத் திட்டவட்டமாகக் கூறி விட்டது. ஆகவே, இந்த 11 லட்சம் மலைநாட்டுத் தமிழர்கள், திரிசங்கு நிலையில், குடியுரிமை வாக்குரிமைகளை இழந்து, நாடற்றவர்களாய் இலங்கையில் இருக்கிறார்கள். ஆங்கிலேயர் காலத்திலே, இலங்கைக்குச் சுதந்திரம் கிட்டு முன், இந்த மலைநாட்டுத் தமிழர்கள், இலங்கையின்

ஏனைய பிரசைகளுக்குரிய சகல அரசியல் உரிமைகளையு முடையோராய் இருந்தனர். சுதந்திரமடைந்த இலங் கையின் சிங்கள அரசு வகுத்த தமிழ் இன ஒழிப்புத் திட்டத்தின் முதல் நடவடிக்கையாகவே, "இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம்" "இந்திய பாகிஸ்த்தானிய பிரஜா உரிமைச் சட்டம்" முதலியன சிங்களப் பெரும் பான்மைப் பலத்தால் நிறைவேற்றப்பட்டன. இச்சட் டங்களை மனிதாபிமானத்தோடு நிர்வகித்தால், விளைவு கள் அதிக பாரதூரமானவையாய் இருக்கமாட்டா ஆனல், இச்சட்டங்கள் மிருகத்தனமாய், மிலேச்சத்தன மாய் உபயோகிக்கப்பட்டன. சுப்றீம்கோட் தீர்ப்புகள் பல, இதைத் தெளிவாகக் காட்டியுள்ளன. தமிழரசுக் கட்சி முதலிலிருந்தே இச்சட்டங்களை எதிர்த்தது. மலை நாட்டுத் தமிழர்களுக்கு இழந்த அரசியல் உரிமைகளைத் திரும்பப் பெற்றுக் கொடுக்க இயன்ற வரையில் முயன் றது. கட்சிக்கொள்கை வெளியீட்டில் இதையும் ஒரு அம்சமாக அமைத்துக் கொண்டது. மலைநாட்டுத் தமி ழர் பலர் சத்தியாக்கிரகத்திற்கு அதிக ஆதரவு காட்டி வருகிறார்கள்.

மன்னர், வவுனியா ஆகிய இடங்களிலும் மார்ச்மாதப் பிற்பகுதியில் மறியல் இயக்கம் ஆரம்பமாயிற்று. இந்த இடங்களிலும் யாதொரு அசம்பாவிதங்களும் நிகழாமல் அமைதியாக அகிம்சை வழி நின்று கச்சேரி மறியல் நடைபெறுவதால், கச்சேரி வேலைகள் யாவும் ஸ்தம்பித் துப் போயின.

# பட்டினி போட்டுப் பணியவைக்கும் திட்டம்

**யாழ் - அரசாங்க அதிபர்**

**திரு. விஜயரட்ணவின் தந்திரங்கள்.**

யாழ்ப்பாணக் கச்சேரி வளவினுள் கச்சேரிக் கட்டடங்களோடு சேர்ந்து அரசாங்க அதிபரின் உத்தியோக வாசஸ்தலம் இருக்கிறது. புதிய அரசாங்க அதிபர் திரு. நிசங்கா விஜயரட்ண 2-3-61றில் கடமை ஏற்றதும், இங்கு வசித்து வரலாயினர். இந்த நாட்களில் தான் யாழ்ப்பாணத்தில் இராணுவம் சகல யுத்த ஆயுதங்களோடு வந்து சேர்ந்தது. சத்தியாக்கிரக நடைமுறைகளைக் கவனித்த அரசாங்க அதிபர் திரு. விஜயரட்ண, வந்த புதிதில், சத்தியாக்கிரகிகளும் சனங்களும், சமாதான முறையில் நடந்து கொள்ளும் கனவான்கள் என இவர்களை வர்ணித்தார். தனக்கு அரசாங்க நிர்வாகத்தில் அக்கறை உண்டேயொழிய அரசியலில் தலையிட ஆசையில்லை என்று கூறினர். பொது சனங்களுக்கு உதவும் நோக்கமாக, உணவு விநியோகம் போக்குவரத்து முதலிய அத்தியாவசிய சேவைகள் தடையின்றித் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஆகவேண்டியதைச் செய்வதே தன் கடமையும் நோக்கமும் எனக் கூறினர். தமிழரசுக் கட்சியினரும், தாங்கள் கச்சேரி முன் மறியல் செய்வது, கச்சேரி வேலைகள் செயற்படாமல் செய்வதேயன்றி, அரசாங்க அதிபரிடமோ, பொலீஸ் அதிகாரிகளிடமோ உள்ள துவேஷத்தினுல் அல்ல என்றும், தாங்கள் அரசாங்கத்தை எதிர்க்கிறேமேயன்றி, தனிப்பட்ட எந்த உத்தியோகஸ்தரையும் எதிர்க்கவில்லை என்றும் கூறினர். இந்த அடிப்படையில், அரசாங்க அதிபர் திரு. விஜயரட்ணவுக்கும் தமிழரசுக் கட்சிப் பிரமுகர் டாக்டர். நாகநாதன் அவர்களுக்குமிடையில் " கன

வான்கள் ஒப்பந்தம்" ஒன்று செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பயனுக, அரசாங்க அதிபர் வாசஸ்தல வாயில் முன் சத்தியாக்கிரகிகளால் நடாத்தப்பட்ட மறியல் தளர்த்தப்பட்டது. அரசாங்க அதிபர் திரு. விஜயரட்ண இந்த வாயிலால் அரசாங்க அலுவல்கள் செய்வதையோ அல்லது செய்வதற்கு வருபவர்களையோ அனுமதிப்பதில்லை என வாக்குறுதி கூறினர். டாக்டர், நாகநாதன் இந்த வாக்குறுதியை நம்பி, அரசாங்க அதிபர் குடும்பத்தவர்கள், நண்பர்கள், வேலையாட்கள், வாசஸ்தல வாயிலால் போக்குவரவு செய்தலைத் தடை செய்வதில்லை என ஒப்புதல் கொடுத்தார்.

## அதிபரின் வாசஸ்தலம் குண்டர்களின் சூழ்ச்சிக்களம்

இந்த "கனவான்கள் ஒப்பந்தம்" என்னும் திரைமறைவிலே அரசாங்க அதிபரின் குடும்பம் பெருகிற்று, நண்பர்கள் மிகப்பலராகி அவர் வாசஸ்தலத்திலேயே வசிக்கத் தொடங்கினர், வேலையாட்களின் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போயிற்று, சுருங்கக்கூறின் அரசாங்க அதிபர் வாசஸ்தலத்தில், தனிப்பட்ட முறையில் ஆயுதந் தாங்கிய சிங்களப்படை ஒன்று திரட்டப்பட்டு விட்டது. இப்படை, பொலீஸ்ப்படை இராணுவப்படை முதலியவற்றேடு இணைந்து பல சூழ்ச்சிகளை மறியல் இயக்கத்தை முறியடிப்பதற்காகத், திட்டமிட்டுச் செய்ய முனைந்தது கச்சேரியின் உள்ளிருந்து குண்டர்களின் இகழ்ச்சிப் பேச்சுக்கள், ஆபாசப் பாடல்கள், அநாகரீக நடனங்கள், கச்சேரி முன் மறியல் செய்து கொண்டிருந்த பெண் தொண்டர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. நிர்வாண நிலையிலும் சில குண்டர்கள் ஆடிப்பாடியதை நாம் நேரில் கண்டோம். தியாகத்தில் குதித்துள்ள தாய்க்குலம் இதையெல்லாம் கவனித்ததாகவே தோற்ற

வில்லை. "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்பதைப் போன்ற பக்திப் பாடல்களைக் கனிவோடும் மெய்ப்பாட்டோடும் பாடுவதிலேயே புலனைச் செலுத்தியிருந்தனர். இக்குண்டர்கள் விலங்கின் நிலையிற் செய்த ஆபாச செயல்களைப் பொருட்படுத்தவே இல்லை. எதையும் தாங்கும் இதயங்கொண்டவர்கள் அல்லவா அவர்கள். சத்தியாக்கிரகத்தைக் குலைப்பதற்கு இத்தந்திரம் பலிக்காது விடவே, கற்கள் வீசும் தந்திரம் கையாளப்பட்டது. ஒரு கல் கச்சேரியின் உள்ளிருந்து வந்து தொண்டர்கள் மீது அல்லது சனங்கள் மீது விழும். சில மணித்தியாலங்கள் சென்றபின், இன்னொருகல் அதேயிடத்திலிருந்து வந்து விழும், இவ்விதமான திட்டமிட்ட கல்வீச்சு, சனங்களிடையே சற்றுப் பரபரப்பை உண்டு பண்ணிற்றேயொழிய, அச்சத்தையோ திகிலையோ உண்டுபண்ணத் தவறிவிட்டது. இதன் பின்னர், சனங்கள் கூட்டமாக நடமாடும் இடங்களில் கச்சேரி உள்ளிருந்து ஒரு கைக்குண்டு வந்து விழுந்து வெடிக்கும். இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் இன்னொரு குண்டுவீச்சு. பின் மற்றொன்று. ஆனால் இக்குண்டுகள் அபாயகரமானவை அல்ல, சத்தமும் நெருப்பும் புகையுமேயன்றி யாருக்காவது தீங்கு செய்யக்கூடிய பொருட்களை இக்குண்டுகள் கொண்டிருக்கவில்லை. எனவே, சனங்கள் முதலில் சற்றுத் திகிலை அடைந்தனரேனும், பின்னர் கல்வீச்சும் குண்டு வீச்சும் சாதாரண சம்பவங்களாகக் கருதத் தொடங்கி விட்டனர். சத்தியாக்கிரகிகளின் உறுதியைக் குலைக்க இத்தந்திரங்களும் தோற்றுவிட்டன. இவ்வித தகவல்களைச் சேகரித்து பத்திரிகைகள் வெளியிட்டார்களே தவிர தொண்டர்கள் யாருக்காவது எப்போதாவது முறையிடு செய்யவில்லை. சனப்பிரதிநிதிகள் சபையில் தலைவர் திரு. சீ பீ. டி. சில்வா இக்காரணத்தினால் தான் சத்தி

யாக்கிரகிகள் மீது கற்கள் வீசப்பட்டதாக அரசாங்கத்திற்கு ஒரு முறைப்பாடும் வரவில்லை என நடந்ததை மறைத்துக் கூறினர். அடி, உதை, கல்வீச்சு, குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு முதலிய யாவற்றையும் பொறுமையோடு ஏற்றுக்கொள்வதேயன்றி முறையீடு செய்தல் சத்தியாக்கிரகக் கொள்கைகளுக்கு முரணானதாகும்.

யாழ்ப்பாண மேயர் திரு. துரைராஜா அரசாங்க அதிபரின் வாசஸ்தலம் இப்போது குண்டர்களின் உறைவிடமாயும், கைக்குண்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாயும் மாறிவிட்டது, என்று கூறியது மிகையாகாது. பல தருணங்களிலும், இந்தக் குண்டர்களின் இழி செயல்கள் பற்றி அரசாங்க அதிபரிடம் தகவல்கள் பொது சனங்களால் தெரிவிக்கப்பட்டன. ஆயினும் அவர் இதில் கவனஞ் செலுத்தியதாகத் தெரியவில்லை.

## பங்கீட்டு அரிசி விநியோக நிறுத்தம்.

சாதாரண காலங்களில், பங்கீட்டரிசி பெறுவதற்கு கூட்டுறவுச் சமாஜங்கள் யாழ்ப்பாணக் கச்சேரிக்குப் போய் கூப்பன் துண்டுகளைக் கொடுத்து பணத்தைக் கட்டி, அனுமதிச் சீட்டுகளைப் பெறல் வேண்டும். பின்னர் உணவுப் பொருள் விநியோக நிலையத்திற்குப் போய் அரிசி முதலியவற்றை அங்கிருந்து பெற்றுச் செல்லவேண்டும். ஆனால் சாதாரண காலங்களில், உதாரணமாக வெள்ளப் பெருக்கு அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் போன்ற சமயங்களில், கச்சேரிக்குப் போதலைத் தவிர்த்து, உணவுப் பொருள் விநியோக நிலையங்களிலேயே எல்லா அலுவல்களையும் செய்ய ஒழுங்குகள் செய்யப்படும். இதற்கு முன் இப்படிச் சில சந்தர்ப்பங்களில், கச்சேரிக்கு வெளியே உணவுப்பொருள் விநியோகம் நடைபெற்றிருக்கிறது. இதன் படி அந்நாள்

அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீ காந்தா, சத்தியாக்கிரகம் தொடங்கி கச்சேரி வேலைகள் தடைபட்டதும், பொது சனங்களுக்குக் கஷ்டம் ஏற்படாமல் இருத்தற்காகவும், பங்கீட்டு அரிசி தொடர்ந்து கொடுக்கப்படல் வேண்டும் என்னும் மனிதாபிமானத்தாலும் 20-2-61 தொடக்கம் இரு வாரங்களுக்கு அரிசி முதலியவற்றை, சமாஜங்கள் கச்சேரிக்கு வராது விநியோக நிலையங்களிலேயே பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தார். ஆனல் புதிய அரசாங்க அதிபர் திரு. நிசங்க விஜயரட்ண இந்த முறையை நிராகரித்து, கச்சேரியின் உள் வந்துதான் சமாஜங்கள் அனுமதிச் சீட்டுகளைப் பெறவேண்டும் என்று எல்லா யாழ் - மாவட்டச் சமாஜங்களுக்கும் அறிவித்தார். உடனே கூட்டுறவுச் சமாஜங்கள் நிலைமையைக் கூடி ஆராய்ந்து, முந்திய வாரத்தில் அரிசிப் பங்கீடு செய்யப்பட்டது போல தொடர்ந்தும் பங்கீடு செய்ய அரசாங்கம் ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும், சத்தியாக்கிரகிகளால் இரவு பகலாக மறியல் செய்யப்படும் கச்சேரி வாயில்களைக் கடந்து உள்ளே சென்று அலுவல்கள் செய்வது முடியாதென்றும் அறிவித்தார்கள். அரசாங்க அதிபர் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளாது, கச்சேரிக்குள் வருவதற்கு ஒரு தடையும் இல்லை என்றும், வேண்டுமானல் தான் பொலீஸ் உதவியையோ இராணுவத்தின் உதவியையோ தரத் தயாராய் இருப்பதாகவும், கச்சேரிக்குள் வந்தால் அன்றி பங்கீட்டரிசி விநியோகிக்க முடியாதென்றும் திட்ட வட்டமாக கூறி விட்டார்.

### மறியலை உடைக்கப் புதிய முயற்சி.

கூட்டுறவுச் சமாஜங்கள் கச்சேரிக்குள் போய் அனுமதிச் சீட்டுகளைப் பெற மறுத்து விட்டதால், அரசாங்க அதிபர் விதானைமார் மூலம் கூட்டுறவுச் சங்கக் கடை

களுக்கும், தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் தன்னிடம் நேரே வந்து கூப்பன் துண்டுகளையும் பணத்தையும் கொடுத்து அனுமதிச் சீட்டுகளைப் பெறவேண்டுமென அறிவித்தார். இதுவும் பயன் தரவில்லை. ஒரு ஸ்தாபனமாவது வர்த்தகராவது கச்சேரிக்குள் போய் அரசாங்க அதிபரைச் சந்திக்கவில்லை. "கச்சேரிக்குள் சென்று அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளாமலே பங்கீட்டரிசி விநியோகிப்பதற்கான வழி இருக்க, தமிழ் மக்களின் உரிமை ஒற்றுமையைக் குலைக்கவும் அவர்களைப் பிரிக்கவும் பங்கீட்டரிசி விநியோகத்தை தமிழ் மக்களின் உரிமை இயக்கத்துக்கு எதிராக உபயோகிக்கவும் அரசாங்க அதிபரின் சுற்றறிக்கை முயற்சி செய்கிறது." என்று கண்டனத் தீர்மானம் ஒன்று கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட வர்த்தகர்கள் கூடிய ஒரு கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணச் சுகாதார இலாகா ஊழியர்கள், றெயில் ஊழியர்கள், பஸ் ஊழியர்கள், சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் முதலியோரின் வெவ்வேறு தொழிற் சங்கங்கள் பங்கீட்டரிசி கிடைக்காததை வன்மையாக ஆட்சேபித்து, உடனடியாகக் கிடைக்கச்செய்யாவிடில் வேலை நிறுத்தம் செய்யப்படும் எனப் பயமுறுத்தினர்கள். ஆகவே அரிசி மூட்டைகள் யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரிக்கும், றெயில் நிலையத்துக்கும், பஸ் காரியாலயத்துக்கும், காங்கேசன்துறைக்கும் வான்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. ஆனல் பொது சனங்களுக்குப் பங்கீட்டு அரிசி வழங்காமல், வேலை நிறுத்தம் என்னும் பூச்சாண்டி காட்டி, இந்த ஊழியர் மாத்திரம் அரிசியை பெற்றுக் கொள்ள முயல்வதை ஆட்சேபித்துப் பொது சனங்கள் அந்தந்தக் காரியாலயங்களில் அரிசி மூடைகள் வைக்கப் பட்டிருக்கும் இடங்களுக்கு முன் இருந்து இரவு பகலாகச் சத்தியாக்கிரகம்

செய்யத் தொடங்கினர்கள். இதனல் மனமாற்றம் அடைந்த ஊழியர்கள் தங்கள் தங்கள் பங்கீட்டரிசியைப் பெற்றுக்கொள்ள முன்வரவில்லை. எனவே, காரியால யக் கட்டிடங்களில் ஒரு மூலையில் கேட்பாரற்று முடங் கிக் கிடக்கும் அரிசி மூடைகள், ஒருவருக்கும் பயனற் றுக் காட்சியளிக்கின்றன.

## கூட்டுறவுச் சமாஜக் காரியதரிசி கண்டனம்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சங்க சமாஜங் களின் மகாநாட்டுச் திரு. இராஜசேகரம் பின்வரும் அறிக் கையை 26-3-61இல் விடுத்துள்ளார். "கச்சேரிக்கு வெளியே கூட்டுறவு சமாஜங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குவது முறையற்றதெனக் கூறி அவற்றை அளிக்க மறுத்த அரசாங்கம், இப்போது சட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் காற்றிலே பறக்க விட்டிருப்பது விந்தை யாக இருக்கிறது. இவ்வாறு அனுமதிச் சீட்டு வழங்க மறுத்த அரசாங்கம் உத்தரவாதம் பெருத விற்பனை யாளருக்கும் பிறருக்கும் இலாகாத் தலைவர்களுக்கும் தொழிற்சாலை அதிபர்களுக்கும் அவர்களின் வீடு தேடி அரிசி வழங்கி வருகிறது.

கச்சேரிக்கு வெளியே சமாஜங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்க மறுத்தபின், அரசாங்க அதிகாரிகள் வெளியே "வான்" களிற் சென்று உத்தரவாதம் பெருத விற்பனையாளருக்கு அரிசியைக் கொடுத்து அவற்றைக் கூப்பனுக்கு விற்குமாறு கேட்பது எமக்கு ஒன்றுமாய் விளங்கவில்லை.

அரசினரின் இத்தகைய செயல் சமாஜங்களின் பிரதிநிதிகளை கச்சேரிக்குச் செல்லவேண்டுமென நியாய மற்ற முறையில் வற்புறுத்துவதையே எடுத்துக் காட்டு

கின்றது. வெளியே சென்று உத்தரவாதமற்ற விற்பனையாளர்களுக்கு அரிசி கொடுப்பவர்கள், கூட்டுறவு சமாஜங்களுக்கும் அரிசியைக் கொடுத்திருக்கலாம். இப்படிச் செய்திருப்பார்களானல் சென்ற இரு வாரங்களாகப் பொதுமக்கள் அடைந்து வரும் கஷ்டங்களை எவ்வளவோ நீக்கியிருப்பார்கள்.

கூட்டுறவுச் சமாஜங்கள், பதில் அரசாங்க அதிபர், அவர்களுக்குக் கொடுத்த அனுமதிச் சீட்டுகளைப் பெற மறுத்து விட்டார்கள் என்ற கருத்தை அரசாங்க அதிகாரிகளின் தவருன செய்திகள் பரப்பியுள்ளன. இந்தச் சமாஜங்கள் அரசியற் கலப்பற்றவை. கூட்டுறவு ஸ்தாபனங்கள். இவை எல்லா வேலைகளிலும் மக்களுக்குச் சேவை செய்யத் தவறியதில்லை. வெள்ளப் பெருக்கில் இந்த சமாஜங்கள் அரசாங்க அதிபரோடு ஒத்துழைத்து பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனே சேவை செய்திருக்கின்றது. வேலை நிறுத்தங்கள் நடைபெற்றபோது சமாஜக் காரியாலயத்துக்கு அரசாங்க அதிபர் வழங்கிய அனுமதிச் சீட்டுகளைப் பெற்று அரசாங்கத்துக்கு உதவியளித்துள்ளது. சத்தியாக்கிரகம் நடைபெற்ற முதல் இரண்டு வாரங்களிலும் முன்னர் இருந்த அரசாங்க அதிபர் இந்த முறையையே பின்பற்றி உணவுப் பகுதியைச் சேர்ந்த அதிகாரியிடம் கூப்பன்களையும் மற்றும் தேவையான பத்திரங்களையும் பணத்தையும் சேகரிக்கும்படி அறிவித்து உணவு வழங்க அனுமதி கொடுக்க உத்தரவிட்டார். இந்த ஏற்பாடுகளையெல்லாம் பதில் அரசாங்க அதிபர் அரசாங்க உத்தரவின்பேரில் நிறுத்திவிட்டு, கூட்டுறவுச் சங்க சமாஜங்களைக் கச்சேரிக்கு வரும்படி உத்தரவு பிறப்பித்தார். உட் செல்ல முடியாத நிலையில், நாலு வாரமாகப் பூட்டப் பட்டிருந்த கச்சேரிப் பிரதான வாசல் வழியாக பொலீஸ் உதவியோடு வருமாறு அவர் கட்டளை

யிட்டார். அடுத்த வாரம் அவரின் வாசஸ்தலத்திற்குச் செல்லும் வழியால் வருமாறு கேட்டிருந்தார். சில தெளிவான காரணங்களுக்காகவும், ஏற்பட்டிருக்கும் நிலைமை காரணமாகவும் இவ்வழியால் போக முடியா திருந்தது. எனவே, உணவு விநியோகப் பகுதியா ரோடு சமாஜங்கள் ஒத்துழைக்கவில்லை என்ற எண் ணத்தை அரசாங்கத்தார் பரப்புவது தவறானது.

ஆகவே அரசாங்கம், தமிழரின் அரசியல் சம்பந் தப்பட்ட இயக்கத்துக்கு வஞ்சம் தீர்க்கும் முகமாகவே இவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதே தவிர, நிர்வாக சம்பந்தமானதல்ல என்பது போல் இது தெரி கிறது. அரசாங்கம் தனது அரசியல் கொள்கைகளுக்கு கூட்டுறவு சமாஜங்களைக் கருவியாக்கிக் கொள்ளக் கூடாது. அப்படிச் செய்து விடவும் முடியாது.

மட்டக்களப்பு திருமலைக் கச்சேரிகளின் முன் மறி யல் நடைபெற்ற போதிலும், பங்கீட்டரிசி வழங்க அங் கெல்லாம் வேறு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கச்சேரிக்கு வெளியே தான் இவ்விடங்களிலும் அனு மதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. மன்னார், வவு னியாவிலும் இவ்விதமே. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் கச்சேரிக்கு வந்து தான் அனுமதிச் சீட்டுப் பெற வேண் டுமென மீண்டும் மீண்டும் வற்புறுத்துவது அரசாங் கத்தின் நோக்கத் தூய்மையைச் சந்தேகிக்க வைத்து விட்டது. சென்ற நான்கு வாரங்களாக, சற்றேறக் குறைய இரண்டு லட்சம் யாழ்ப்பாண மாவட்ட மக்க ளுக்குப் பங்கீட்டரிசி வழங்க ஒழுங்குகள் செய்ய அர சாங்கம் தவறி விட்டது. உலகத்தில் எங்காவது நடை பெறாத கொடுமை இது. அத்தியாவசிய சேவைகளா கிய உணவு விநியோகம் போக்குவரத்து முதலியன தடைபடாது தொடர்ந்து நடைபெறுவதற்காகவே, இரா

னுவம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுகிறது என மகாதேசாதிபதியும், பிரதம மந்திரியும், நிதி மந்திரியும் கூறியிருக்கிறார்கள். ஆயினும் இராணுவம் இங்கு வந்து ஆறு வாரங்களாகியும், உணவு விநியோகம் நடைபெறவில்லை. பூரணமாகத் தடைபட்டு விட்டது. அரசு செயலற்றுப் போய்விட்டதைப் போல, படையும் செயலற்றுப் போய் விட்டது.

# பிறநாட்டுப் பிரமுகர்கள், பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

## அட்லி பிரபுவின் அறிவுரைகள்.

அரசாங்கத்தினால் இயற்றப்பட்ட சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது குடிகளின் கடமை, சத்தியாக்கிரகம் என்னும் திரைமறைவில் அரசாங்கத்தை எதிர்த்தல் துரோகம் என நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சில நாட்களின் முன் திருவாய் மலர்ந்தருளினார். ஆனால் இங்கிலாந்தின் முன்னாள் பிரதம மந்திரியான அட்லி பிரபு இதற்கு மாறான கருத்துக்களை அண்மையில் இலங்கை வந்து சென்ற போது கூறியிருக்கின்றார். அரசாங்கம் இயற்றும் சட்டங்கள் சில, ஒரு பகுதி மக்களுக்கு தீமை பயக்குமென அவர்கள் கருதினால், அச்சட்டங்களை எதிர்க்கும் உரிமை ஜனநாயக நாடுகளில் மக்களுக்கு உண்டு எனக் கூறிச் சென்றார். இவர் மேலும் கூறியதாவது, "ஒரு நாடு அடிமைத் தளையிற் சிக்குண்டு இருக்கும் போது அந்த நாட்டவர்கள் தம்மை அடக்கி ஆள்பவருக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டம் நடத்துகிறார்கள். அப்போது தமது நாட்டிலுள்ள சிறுபான்மையினரையும் தம்மோடு அணைத்துக் கொண்டு "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஐக்கியம்"

என்றெல்லாம் பேசுகிறார்கள். சுதந்திரம் பெற்ற பின்னர் அதையெல்லாம் மறந்து விடுகிறார்கள். சிறுபான்மையினரைத் தாமே அடக்கி ஒடுக்குகின்றார்கள். இப்படித்தான் இன்று எங்கும் நடக்கிறது, இது கூடாது. சிறுபான்மை மக்களின் நலன்களைப் பாதுகாக்க பெரும்பான்மை மக்களின் சகிப்புத்தன்மை, பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் மிகவும் அவசியமானது. அது மட்டும் போதாது. சிறுபான்மை மக்களுக்கு பாராளுமன்றத்தில் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அதற்கான சட்டம் தேவை" இவ்வித ஜனநாயக அடிப்படைக் கருத்துக்களை அட்லி பிரபு வெளியிட்டாராயினும், இலங்கையின் இப்போதைய சிங்கள அரசு இதனால் பயனடையக் கூடிய நிலையில் இல்லை.

இந்தியாவின் பழுத்த அரசியல் மேதையும், முன்னாள் மகா தேசாதிபதியுமான ராஜாஜி, இலங்கையில் சத்தியாக்கிரகிகள் கடைப்பிடிக்கும் அகிம்சைக் கொள்கையைப் பாராட்டி ஒரு வாழ்த்துச் செய்தி தந்தி மூலம் அனுப்பியுள்ளார் என்றும் சொல்லப் படுகிறது.

**லண்டனில் உள்ள தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்**

இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 5-3-61 ஞாயிற்றுக்கிழமை காலையில் லண்டன் விமான நிலையத்தில் இறங்கிய போது, இலங்கை, இந்திய, சிங்கப்பூர் முதலிய இடங்களைத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் ஆண்களும் பெண்களும் நூற்றுக்கணக்கானோர், கையில் கறுப்புக் கொடிகளும் சுலோக அட்டைகளும் தாங்கி தமிழுரிமைக் கோஷங்களைக் கிளப்பி ஆர்ப்பாட்டஞ் செய்தனர். பிரதமரும் அவர் பரிவாரங்களும் இதைக் கண்டும் காணாதது போலத் தங்கள் ஹொட்டலுக்குச் சென்று விட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஹொட்டலுக்குப் பின் தொடர்ந்து சென்று

அவரைக் கண்டு தங்கள் குறைகளைச் சொல்ல விரும்புவதாகத் தெரிவித்தபோது, அவர்களைச் சந்திக்கவோ பேசவோ பிரதமர் மறுத்து விட்டார். இத் தூதுகோஷ்டியினர் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது, "நாங்கள் பிரதமரைச் சந்தித்து, தமிழ்பேசும் இனத்தின் கஷ்டங்களைத் தெரிவிக்கலாமென்ற நோக்கத்துடன் சென்றிருந்தோம். பிரதமர் எங்களை ஒருபோதும் பார்க்க முடியாதென்று மறுத்து விட்டார். இதிலிருந்து நாங்கள் ஒன்றை அறிய முடிகிறது. இனிமேல் தமிழ்த் தலைவர்கள் தமிழ் பேசும் மக்கள் பேச்சு வார்த்தைகள், வட்டமேசை மகாநாடுகள், பாராளுமன்றப் பேச்சுகள், இவற்றில் எல்லாம் நம்பிக்கை வைக்கக் கூடாது. நேரடி நடவடிக்கைமூலம் தான் தமிழினத்தின் உரிமைகளைப் பெற வேண்டும்.

தற்போது நடக்கும் உரிமைப் போராட்டத்தை தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து நடத்த வேண்டும். லண்டனிலிருக்கும் தமிழர்களாகிய நாங்கள், போராட்டம் உச்சநிலை அடையும் போது எங்கள் உதவியும் அவசியம் தேவையென்றால் உடனே நேரில் வந்து சேருவோம், என்பதைத் தமிழ்த் தலைவர்களுக்கு அறிவிக்கின்றோம். அதுவரைக்கும், நாங்களும் எங்களால் கூடியளவு இப்பிரச்சினையை உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர முயற்சிப்போம்" சுதந்திரன் லண்டன் நிருபர் இத்துறையில் அதிக சிரத்தை எடுத்திருக்கிறார். லண்டனில் ஸ்ரீமாவோவுக்கு கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடைபெற்ற செய்தி லண்டன் பத்திரிகைகள் பலவற்றில் முழு நீளப் படங்களோடு பிரசுரிக்கப்பட்டிருந்தது. பி. பி. சி. வானொலியிலும், டெலிவிஷனிலும் இடம் பெற்றது. இவ்வித கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் சென்னையிலும் நடைபெற்றதாக இந்திய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

## மெட்ராஸ் இந்து தீட்டிய தலையங்கம்.

"தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் மனக்கசப்பு ஏற்படுத்தியும் சத்தியாக்கிரகிகளின் மானம் மரியாதையைத் தூசாய் மதித்து அவமானப் படுத்தியும் நடந்து கொள்வது அல்ல அரசாங்கத்தின் பொறுப்பு இலங்கையிலிருந்து வரும் செய்திகளிலிருந்து சத்தியாக்கிரகிகள்மீது தேவையற்ற பலாற்காரம் உபயோகிக்கப் பட்டு இருப்பதாக நாம் அறிகிறோம். ஏற்கனவே சிக்கல் அடைந்து விட்ட நிலைமையை மிகவும் சிக்கல் ஆக்காதவாறு அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டும். பிரதமர் லண்டனில் இருக்கும் பொழுது அரசாங்கத்திற்குத் தலைமை வகிப்பவரின் கடமை மிகப் பெரிது. 1958ம் ஆண்டு மே மாதத்தில் நடந்த சோக சம்பவங்கள் எதுவும் மீண்டும் நிகழக் கூடியதாக சொல்லாலோ செயலாலோ அரசாங்கத் தலைவர்கள் நடந்து கொள்ளக் கூடாது. இந்தக் கலகத்தை ஒடுக்குவதில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கையின் பயனாக சுட்டுக் கொல்லப் பட்டவரின் உத்தியோக பூர்வமான தொகை 158; இதிலும் அதிகமானோர் கொல்லப் பட்டார்கள் என்று அதிகார பூர்வமற்ற வட்டாரங்கள் கூறியிருக்கின்றன. சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருக்கும் பொழுது எதுவித பேச்சு வார்த்தைகளும் நடத்த முடியாதென திருமதி. பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார். ஆனல் இலங்கைத் தேசிய வாழ்வில் தமிழை அதன் உரித்தான அந்தஸ்தில் மீண்டும் அமர்த்துவதற்கு தமிழரசுக்கட்சி எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்த காலத்தில் பிரதமரும் அவருக்குப் புத்திமதி கூறுபவர்களும், என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினராய் இருந்தாலும், இலங்கைச் சனத்தொகையில் கணிப்புக்குரியவர்கள் 93 லட்சம் மக்களுள்

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் 27 . 5 லட்சம். இத் தொகையில் மலைநாட்டுத் தமிழர்களும் உள்ளடங்கியவர்களே. இம்மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமைக் கோரிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் இன்னும் நீண்ட காலத்துக்கு மறுத்துவிட முடியாது. சிங்களவர்களைப்போல் இலங்கைச் சுதந்திரத்திற்காக தமிழ் பேசும் மக்களும் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். இந்த மக்களின் உரிமைகளை இலங்கை அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் உதாசீனஞ் செய்து விடுவதற்கில்லை..............
சிங்கள தீவிரவாதிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. ஒரே மொழி, ஒரே மதம் ஒரே இனம் என்ற கோஷங்கள் வானைத் துளைத்தன. விளைவு என்ன? தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி கோருவது தவிர்க்க முடியாததாகி விட்டது. தமிழ் பேசும் மக்கள் தாம் பெரும்பான்மையாய் வாழும் இம் மாகாணங்களில் தம் மொழியையும் கலாச்சாரத்தையும் தொடர்ந்து பேணி வளர்க்க விரும்புகிறார்கள்........
தமிழரசுக் கட்சிக்கு இவ்விரு மாகாணங்களிலும் பெருத்த செல்வாக்கு உண்டு. முஸ்லீம் மக்கள் இவ்வுரிமைப் போரில் பெரும் பங்கு கொண்டிருக்கிறார்கள். மலைநாட்டுத் தொழிலாளர்களும் இயக்கத்திற்கு இயன்ற உதவி அளிக்கத் துடித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் கிடைக்கின்றன. சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தை இரவோடு இரவாக நடைமுறைக்குக் கொண்டுவர இயற்றப்பட்ட விதிகளும் பிரமாணங்களும் தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டிருக்கின்றன. இந்த உணர்ச்சிப் பிரவாகத்தின் பலத்தைப் புறக்கணித்து விடலாம், என்று இலங்கை அரசாங்கம் ஒருபோதும் நினைக்க முடியாது. அப்படி எண்ண எத்தனிப்பதே பேதமையின் சிகரமாய் அமையும். கிளறப்பட்ட புலன்களைப் பலாத்காரத்தினால் அடக்கி விட முடியாது"



அலை அலையாய்க் களம் நோக்கி விரைந்தேகும் கல்லூரி மாணவிகள்.

## தமிழ்நாடு தந்த தலைவர் மா. பொ. சி. யின் முழக்கம்.

"இலங்கையில் உள்நாட்டு அரசியலில் தலையிடும் உரிமை இந்தியருக்கோ இந்திய தமிழருக்கோ இல்லை. ஆயினும் எந்த ஒருநாட்டிலும் மதவழியோ மொழி சம்பந்தப்பட்ட இனவழியோ சிறுபான்மையாக உள்ள மக்கள் அநியாயமான அடக்கு முறைக்கு உள்ளவர்களானல், சர்வதேச நியதிப்படி அதனை எதிர்த்துக் குரல்கொடுக்க உலகமக்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அந்த உரிமைப்படி இலங்கைத் தமிழர் மீது அந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் சிங்கள ஆட்சி அடக்கு முறைகளைக் கையாளுமானல், அதனைக் கண்டிப்பது இந்திய மக்களின் கடமையாகும். தமிழர் வாழும் பகுதிகளில் அமைதியும் நீதியும் கலந்த அறப்போர் நடக்கின்றது. அதை ஒடுக்க ஆகாய விமானத்தின் மூலம் இராணுவத்தை அனுப்பியது ஜனநாயக வாதிகள் சகித்துக்கொள்ள முடியாத கொடுமை ஆகும். காங்கோவில் லுமும்பா கொலை செய்யப்பட்டது, குறித்து அனுதாபம் தெரிவிக்கும் இந்திய ஆட்சி, நேபாளத்தில் ஜனநாயக ஆட்சி மறைந்ததற்குக் கண்டனந் தெரிவிக்கும் இந்தியப் பிரதமர், இலங்கையில் தமிழ் இனத்துக்கு எதிராக நடக்கும் அடக்கு முறையையும் கண்டிக்க முன் வர வேண்டும். கண்டிக்கும்படி அவரைத் தூண்டுவது, இந்த ராஜ்ஜியத்தின் முதன் மந்திரியான காமராஜரின் கடமையாகும். காலந் தாழ்த்தாது நேருவும் காமராஜரும் தங்கள் கடமையைச் செய்ய முன் வர வேண்டும். தவறினல், இலங்கைச் சிங்கள ஆதிக்கத்தின் அடக்கு முறையைக் கண்டிக்கவும், இந்திய ஆட்சியின் பாரபட்சமான போக்கைை எதிர்க்கவும், தமிழ் மக்களை ஒரே அணிக்குள் திரட்டப்படுவதற்கு ஆன முயற்சியை நான் மேற் கொள்வேன். இங்கு உள்ள எல்லாக் கட்சிகளும் இந்த விஷயத்தில் ஒன்றுபடும் என்றே நம்புகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பார்த்து மான முள்ள எந்தத் தமிழனும் சும்மா இருக்க மாட்டான். நாலு கோடி தமிழர்களும் இடையேயுள்ள கடலை அடைத்து விடுவார்கள். அவசியம் ஏற்பட்டால் சர்வ கட்சி அணி கூட்ட நானே முன்னின்று ஏற்பாடு செய் வேன்."

சென்னை மரீனு கடற்கரையில் தமிழ் நாடு சட்ட சபையிலுள்ள பிரதான எதிர்க்கட்சியினரான திரா விட முன்னேற்றக் கழகத்தினர் ஆதரவில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் தமிழ்மொழி உரிமைக்காகப் போராடும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவு அளிப்ப தென்றும், சர்க்காரின் அடக்கு முறைகளையும் மனிதா பிமானமற்ற நடவடிக்கைகளையும் கண்டிப்பதென்றும், இலங்கைத் தமிழரின் மொழிப் பிரச்சினைக்கு நிரந்தர மானதொரு தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறு இந் திய சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. அறிஞர் சி. என். அண்ணாத்துரை இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

## இங்கிலாந்துப் பத்திரிகைகளின் கருத்துகள்.

லண்டன் ரைம்ஸ் என்னும் பத்திரிகை இலங்கைச் சத்தியாக்கிரகம் பற்றி எழுதிய தலையங்கத்தில் பின்வரு மாறு கூறியிருக்கின்றது. இலங்கைப் பிரதமர் சமீபத் திலே வானொலி மூலம் விடுத்த அறிக்கையை நோக்கு மிடத்து, இலங்கை அரசாங்கம் இவ்வியக்கத்தைச் சரி வர அளவிட்டுள்ளதாகத் தோற்றவில்லை. தமிழ் மாகா ணங்களின் நிர்வாகத்தில் சிங்களத்தைத் திணிக்கும் நடவடிக்கைக்கு தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்த எதிர்ப்பு இப்போ சகல தமிழ் பேசும் மக்களின் ஏகோ பித்த எதிர்ப்பாக வலுவடைந்து விட்டது. உண்மை யில் தமிழ் உபயோகத்திற்கு உரிய விதிகள் நியாய

மானவையாய் இருக்கவில்லை. இவ்வித கருத்துக்களைக் கொண்ட நீண்ட தலையங்கம் தீட்டப்பட்டிருக்கிறது.

"மன்செஸ்ரர் காடியன்" என்னும் பத்திரிகையும் ஒரு நீண்ட தலையங்கம் எழுதி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து, அந்த இரண்டு மாகாணங்களிலும் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்து வெற்றி கண்டுவிட்டார்கள். தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கலிலும் பார்க்கச் சிங்கள அரசினர் மொழிக் கொள்கை மோசமானது என்று அவர்கள் கருதுகிறார்கள், ஆகவே லண்டனிலிருந்து இலங்கை திரும்பியதும் இலங்கைப் பிரதமர் இந்தச் சிக்கலான பிரச்சினையை நியாயமான முறையில் தீர்க்கவேண்டும் என அறிவுரை கூறியிருக்கிறது.

"கிளாஸ்கோ ஹெறல்ட்" என்னும் பத்திரிகை பிரிந்து போகும் இலங்கை என்ற தலையங்கத்தில் இலங்கையில் நடைபெறுகின்ற தமிழ்பேசும் மக்களின் சத்தியாக்கிரக இயக்கத்தைப் பற்றிய விபரங்களை ஆராய்ந்து, இருமொழி பேசும் மக்கள் வசிக்கின்ற கனடா போன்ற தேசத்தில் மொழிச்சிக்கல் எவ்விதம் நீக்கப்பட்டு இருமொழிகள் அரசாங்க மொழிகளாய் இருக்கின்றன என்பதைப் பார்த்தாவது இலங்கைப் பிரதமர் மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென கூறியிருக்கின்றது. இதுபோலவே "பிரன்சல் ரைம்ஸ்" என்னும் பத்திரிகையும் சத்தியாக்கிரக இயக்கத்தைக் குறிப்பிட்டு இது மோசமான நிலை என்றும் எந்த நேரத்திலும் எரிமலையைப் போலக் குமுறக்கூடுமென்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவசர கால நிலைமை பிரகடனஞ் செய்தற்குக் காரணங்கள் இல்லை என்றும், "பலாத்காரம் யாராவது உபயோ

கித்திருந்தால், அது அரசாங்க சார்பிலன்றி, சத்தியாக் கிரகிகள் சிறுதாயினும் பலாத்காரத்தை உபயோகிக் கவில்லை" என்றும் கூறியிருக்கிறது.

**சென்னை மருத்துவ மனையிலிருந்து**

**மா. பொ. சி. எழுதிய செய்தி.**

"இலங்கைத் தமிழர் நடத்தும் அறப்போர், அன்று முப்புரத்தை அழித்த தீபோல மூண்டுவிட்டது. "கண்டதில்லை கேட்டதில்லை சண்டை இந்த மாதிரி" என்று பாடலாம் போல் தோற்றுகிறது. போர்க்களத்தில் மறியலில் ஈடுபடத் துணியும் தொண்டர்களின் எண்ணிக்கை பத்து, நூறு, ஆயிரம் அல்ல ஏக காலத்தில் - ஒரே களத்தில் 3000 பேர் மறியலில் ஈடுபடுகின்றனர் .இரவு பகலாக அறப்போர் நடக்கின்றது. மாணவர்களையன்றி ஆசிரியப் பெருமக்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர். "கண்ணகி வீரமரபினர் நாங்கள், களமென்றால் கலங்கமாட்டோம்" என்று கூறுவது போல, அணங்குகளும் ஆயிரமாயிரமாக அறப்போரில் பங்கு கொள்ளுகின்றனர். ஒரே வாசகத்தில் சொன்னால், உத்தமர் காந்தியடிகள் நடத்திய இந்திய விடுதலைப் போரில் கூட, இவ்வளவு அமைதியும் நீதியும் நிலவக் கூடிய வகையில் போர் நிகழ்ந்ததில்லை" இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூட, தமிழர் வாழும் பிரதேசங்களில் அரசாங்கம் இயங்கவில்லை என்று வாய் விட்டுக் கூறியுள்ளார்.

இனவெறி பிடித்த சிங்கள இராணுவத்தை விமானங்களின் மூலம் இறக்கிய பின்னரும் அறப்போரின் வேகம் தணியவில்லை இனஉணர்ச்சித் தணல்கொழுந்து விட்டு, அறப்போர் நடப்பது இலங்கையிலுள்ள ஒன்றிரண்டு தாலுகாக்களிலோ, பத்து – நூறு கிராமங்க

விலோ, அல்ல ஒன்ருேடொன்று தொடர்புடைய இரு மாகாணங்களில்.

இன்னும் போராட்டம் நீடிக்குமானல், மலைநாட்டி லுள்ள இந்தியத் தமிழர்களும் களத்தில் குதிப்பதைக் கடவுளாலும் தடுக்க முடியாது. போராட்டப் பிரச்சினை, 30 லட்சம் தமிழ் மக்கள் வாழ்வதா, சாவதா என்பதைப் பற்றியதாகும்……………… இஸ்லாமியத் தமிழர்கள் குரான் ஓதி கடவுளை வணங்கி களம் புகுந்து விட்டனர். வேதியத் தமிழர் வேதம் ஓதி அறப்போரில் ஈடுபட்டு விட்டனர். ஆப்புதனை அசைத்துவிட்ட குரங்கு போல ஒன்று பட்ட தமிழர் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறது சிங்கள ஆட்சி. தன்னுடைய குடிமக்களைத் தானே பட்டினிபோடும் ஒரு ஆட்சியை உலக வரலாற்றில் நாம் கண்டதில்லை. சிங்கள ஆதிக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு உணவுப் பொருள்கள் செல்வதைத் தடுத்து, அங்கெல்லாம் பட்டினிப் பேயை ஆதிக்கம் செலுத்தத் தூபம் இடுகின்றது. இலங்கைத் தமிழர்கள் அத்தனைபேரும் கிறீஸ்தவர்களாய் இருந்தால், இக்நேரம் ஐரோப்பிய வல்லரசுக்களெல்லாம் ஆவேசம் கொண்டிருக்கும். ஆனல் இனத்தால் தமிழராகி மதத்தால் பல்வேறு சிறு சிறு பகுதியினராகி விட்ட இலங்கைத் தமிழர்களைப்பற்றி, பஞ்சசீல கர்த்தாக்கள் பரிவு காட்டவில்லை.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கை நலன் கருதி போராடுகிருர்கள். சிங்கள மக்களையோ, அவர்களைச் சார்ந்துள்ள பௌத்த மதத்தையோ, அம்மக்கள் பேசும் சிங்கள மொழியையோ வெறுக்கவில்லை. மாருக மகாமார மதிக்கின்றனர். இலங்கைத் தமிழ் மக்கள் கோருவதெல்லாம் "வாழு - வாழவிடு" என்பது தான்………………"

**அயல்நாடு அன்னியநாட்டு ஆதரவுக்கு நன்றி.**

சென்னையிலிருந்து வெளிவரும் "தினத்தந்தி", "செங்கோல்", "முரசொலி", "மன்றம்", "திராவிடன்", "தென்றல்" முதலிய பல பத்திரிகைகள் இலங்கையில் நடைபெறும் அறப்போர் பற்றிய உண்மைப் புதினங்களை வெளியிடுவதோடு, தலையங்கங்களும் எழுதி இந்திய மக்களுக்கு நிலையை விளக்கி வருகின்றன. அமெரிக்கப் பத்திரிகைகளும் சில, இங்கிலாந்திலுள்ள பத்திரிகைகள் செய்வதுபோல், நிலையைச் சீர்தூக்கி விளக்கி புதினங்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகின்றன. மொரிஷஸ் தீவிலிருந்து கூட அங்கு வசிக்கும் தமிழர்கள் சார்பில் எமது அறப்போர் அணிக்கு வாழ்த்துச் செய்திகள் தந்தி மூலம் அனுப்பப் பட்டுள்ளன. இந்தப் பேராதரவுக்கு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

இந்தச் சத்தியாக்கிரக இயக்கம் இப்போ உலக கவனத்தை ஈர்த்திருக்கிற தென்பதற்குச் சந்தேகமே இல்லை. அனுதாபமும் ஆதரவும் நிரம்ப எமக்கு உண்டென்பது உண்மை. எமது கட்சியில் நியாயம் இருக்கிறது. பலாத்காரம் சிறிதும் இல்லை. எனவே உலகம் எம்மை அனுதாபத்தோடு நோக்குகிறது.

## பிரதமர் லண்டனிலிருந்து நாடு திரும்பினர்.

**இலங்கையில் இன ஒதுக்கல் கொள்கை.**

இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பொது நல அமைப்பு நாடுகளின் பிரதமர்கள் மகாநாட்டுக்கு, *4-3-61*றில் லண்டனுக்குப் புறப்பட்டுப் போய், 20 நாட்கள் அங்கு நின்று *24-3-61*றில் நாடு திரும்பினர். இவ

ரோடு நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் சென்றிருந்தார். லண்டனில் எமது பிரதமரின் முக்கிய பணி, தென் ஆபிரிக்கா கடைப்பிடிக்கும் இன ஒதுக்கல் கொள்கையைக் காரசாரமாகக் கண்டித்து, ஏனைய ஆசிய - ஆபிரிக்க நாடுகளுடன் இவ் விஷயத்தில் ஒத்துழைத்ததேயாகும். ஆயினும்; தமிழ் பேசும் மக்கள் இவரது இந்த உயர்ந்த பணியை பாராட்ட முடியாமற் செய்து விட்டது. இலங்கை அரசின் உள் நாட்டுக் கொள்கை இலங்கையிலே இன ஒதுக்கல் - இன அழிப்பு மிகத் தீவிரமாக அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்டு வரும்போது, இந்த அரசாங்கத்துக்கு தென் ஆபிரிக்காவைக் கண்டிக்க உரிமை ஏது எனக் கேட்கின்றனர். இலங்கையிலே இனப் பிரச்சினையே இல்லை என்றும், அற்ப சொற்ப பாஷைப் பிரச்சினையே சில தமிழ் விஷமிகளால் கிளப்பிவிடப்பட்டிருக்கிறது என்றும் சொல்லி, பிரதமரும் நிதிமந்திரியும் லண்டனில் உள்ள மக்களை ஏமாற்றி விடலாம் என நினைத்து மழுப்ப முயன்றார்கள். ஆயினும் பொல்லாத பத்திரிகைக்காரர்கள் பந்தி பந்தியாக இலங்கைச் சத்தியாக்கிரகம் பற்றிய தகவல்களையும் அதற்குரிய காரணங்களையும் உலகம் முழுவதும் அறியும்படி கொட்டை எழுத்துக்களில் விளாசித்தள்ளிக் கொண்டிருந்தார்கள். இதனால் நிலைமையை மறைக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அதோடு லண்டனில் இருக்கும் தமிழர்கள் இலங்கைப் பிரதமருக்கு லண்டன் விமான நிலையத்திலும் தங்கியிருந்த ஹொட்டலிலும் பிரமாதமான கறுப்புக்கொடி வரவேற்பு அளித்ததால், புதினங்களுக்கும் புகைப்படங்களுக்கும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் லண்டன் பத்திரிகைக்காரர்கள் தமது கைவரிசையைத் திறம்படக் காட்டி, இலங்கையில் நிலவும் இன அழிப்புத் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் அம்பலப் படுத்தி விட்டனர். இதனால் கொதிப்படைந்த நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார

நாயக்கா ஒரு கூட்டத்தில் பேசும்போது பின்வரும் கருத்துக்களைத் திருவாய் மலர்ந்தருளினர். "நாங்கள் தமிழருக்கு ஒன்றும் கொடுக்க மாட்டோம். தமிழைப் பிரதேச பாஷையாக்கும் உத்தேசமும் எமக்கு இல்லை. அதை அப்படி ஆக்கினல் அது ஓரளவு பிரதேச சுயாட்சி சமஷ்டி கொடுத்த மாதிரி ஆகிவிடும். தற்போது சில நீதிமன்றங்களில் வழக்குகளைத் தமிழில் நடத்த மட்டும் அனுமதித்திருக்கிறோம். இது தற்காலிக ஏற்பாடு. காலப்போக்கில் எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குகள் சிங்களத்திலேயே நடைபெறும். சிங்களந்தான் இலங்கையின் ஒரே மொழியாக இருக்கும் இது உறுதி."

லண்டனிலுள்ள தமிழர் ஒருவர் பிரிட்டிஷ் பிரதமர் திரு. மக்மிலனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பின்வரும் பகுதி காணப்படுகிறது. "பிரிட்டிஷ் பொதுநலக் குடியரசில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு நாட்டிலேனும் இன பேதம் காட்டப்படுமானல், அது பிரிட்டிஷ் பொது நலக் குடியரசுக்கு இழுக்காகும் என்பதை ஒரு பொது அறிக்கைமூலம் வெளியிடச் சாம்ராச்சியப் பிரதமர்கள் தீர்மானித்திருப்பதைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். பொதுநலக் குடியரசில் ஒரேயொரு நாட்டின் இனபேதக் கொள்கைதான் தங்கள் கவனத்திற்கு வந்திருப்பது துரதிஷ்டம். இலங்கையிலும் இத்தகைய இனபேதம் காட்டப்படும் அக்கிரமம் நடக்கிறதே அதுபற்றியும் ஏதாவது செய்ய வேண்டும்" இவ்வாறு. அவர் எழுதியிருக்கிறார். லண்டனிலுள்ள தமிழர் இலங்கையில் நடைபெறும் அறப்போர் சம்பந்தமான பல தகவல்களைத் துண்டு பிரசுரங்களாக ஆங்கிலத்தில் அச்சிட்டு சாம்ராச்சியப் பிரதமர்களுக்கும் பொதுமக்களுக்கும் லண்டன் பத்திரிகைகளுக்கும் விநியோகித்துள்ளனர். அவற்றில் சில "இலங்கையில் இனவாரிப் பிரச்சினை" (The Racial Problem in Ceylon) "இலங்கை வாழ் தமிழ்

பேசும் மக்களும் அரசியல் நிலைமையும்" (The Tamil Speaking people and the political situation in Ceylon) ஆகவே லண்டனிலுள்ள தமிழர்கள் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் அவல நிலையை உலக மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, இங்கு இன்று நிலவும் உண்மை நிலையை எடுத்துக் கூறி அயராது செய்து வரும் அரும் பெரும் பணிக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

லண்டனிலிருந்து இலங்கை திரும்பியதும், பிரதமர் இங்கு நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தாமே வந்து பார்வையிட்டு அனுதாபத்தோடு ஆவன செய்வார் எனத் தமிழ் பேசும் மக்கள் எதிர் பார்த்தார்கள். அவர் அப்படிச் செய்யத் தவறி விட்டார். அறப்போர் தொடங்கி ஐந்து வாரங்கள் சென்றும் அமைச்சரவை உத்தியோக பூர்வமாக உண்மை நிலையை அறிவதற்கு தமது கட்சியிலிருந்து ஒருவரையும் அனுப்பி வைக்கவில்லை. ஆனால், அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த கம்பகாத் தொகுதிப் பிரதிநிதி திரு. எஸ். டீ. பண்டாரநாயக்கா நியமன அங்கத்தவர் திரு. தொண்டமானும் வந்தார்கள். இரு தினங்கள் நின்று இயக்க நடவடிக்கைகளைப் பார்த்தார்கள். தாங்கள் கண்டதையும் கேட்டதையும் மந்திரி சபைக்கு எடுத்துச் சொன்னார்கள். சத்தியாக்கிரகிகளும் பொது சனங்களும் அமைதியாகவும் சமாதானமாகவும் பலாத்காரம் சிறிதும் உபயோகிக்காமல், தமிழ் மொழிப் பாதுகாப்புக்காக மறியலில் ஈடுபட்டு வருகிறார்கள் என எடுத்துரைத்தார்கள். ஆனால் மந்திரிசபை இவர்களுக்கு நன்றி பாராட்டுவதற்குப் பதிலாக, இவர்கள் தங்கள் அனுமதியின்றிப் போய் வந்து கருத்து வெளிப் படுத்தியதற்காக இவர்களைக் கண்டித்து கட்சியிலிருந்து நீக்கஞ் செய்யப் போவதாகப் பயமுறுத்தி யிருக்கிறார்கள். லங்கா சமசமாஜக்

கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்கள் கட்சிச் சார்பில் நோக்குநர் சிலரை அனுப்பி உண்மை நிலையை ஆராய முயன்றன, அரசாங்க அதிபரும், பொலீஸ் அதிகாரியும், நிரந்தர காரியதரிசியும் நாளுக்கு நாள் சமர்ப்பிக்கும் பொய்யும் புரட்டும் கலந்த அறிக்கைகளை வைத்துக் கொண்டு இந்த முக்கிய பிரச்சினையைக் கவனிக்கின்றனர் அமைச்சர்கள்

## நாடு திரும்பியதும் பிரதமர் விடுத்த அறிக்கை.

"பொதுநல அமைப்புப் பிரதமர்கள் மகாநாட்டிலிருந்து சென்ற புதன்கிழமை மீண்டபின் வட, கிழக்கு மாகாணங்களில் இப்போதுள்ள நிலைமைபற்றி எனது அமைச்சர்களுடன் மிகவும் அக்கறையுடன் ஆலோசனைகள் நடாத்தினேன். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க அதிகாரிகளுடனும் சத்தியாக்கிரக இயக்கத்தின் தன்மையைப் பற்றியும் அதன் வியாபகத்தைப் பற்றியும் கலந்து பேசினேன்.

நான் பிரதமர்கள் மகாநாட்டுக்குச் செல்வதன் முன்னர், ஒரு வானொலிப் பிரசங்கத்தில், எனது அரசாங்கம் உத்தியோக மொழிச் சட்டத்தின் கீழ் தமிழ் சமூகத்தினர் மொழியுரிமைகளைப் பாதுகாக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை விளக்கிக் கூறினேன். மேலும், மொழிச் சட்டங்களை அமுல் நடத்துவதன் பயனை தமிழ் பேசும் மக்களுக்கு ஏதாவது இன்னல்கள் ஏற்படுமேல் அவ்வின்னல்களைப் பற்றி ஆராய்வதற்கு நான் தயாராய் இருக்கிறேன், என்றும் குறிப்பிட்டேன். அத்துடன், தமிழர்களின் முக்கிய தலைவர்களால் அரசாங்கத்துக் கெதிரான நேரடி நடவடிக்கை என்று வர்ணிக்கப்பட்டுள்ள சத்தியாக்கிரகம் என்று சொல்லப்படும் இந்த இயக்கம் கைவிடப் பட்டாலன்றி, எனது

அரசாங்கம் இன்றைய நிலையைப் பரிகரிக்க எவ்வித பேச்சு வார்த்தைகளையும் மேற்கொள்ள முடியாதென்றும் நான் மிகவும் தெளிவாக எடுத்துரைத்தேன்.

இந்த வானொலிச் செய்தியை நான் விடுத்து இப்பொழுது மூன்று வாரங்களாகின்றன. எனினும் எனது வேண்டுகோளால் எவ்வித பயனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. உண்மையில் எனது வேண்டுகோளுக்கு எதிராக சத்தியாக்கிரக இயக்கம் என்று அழைக்கப்படும் இந்த இயக்கம் மேலும் அதிக தீவிரமாக விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றது. எனக்குத் தெரிந்துள்ள சில இகர விஷயங்கள் தமிழ் பேசும் மக்கள் மனதில் அவர்களது மொழியையும் வாழையடி வாழையாக வந்த அவர்கள் பண்பாட்டையும் நமது அரசாங்கம் பறித்துவிட்டதென்ற தப்பபிப்பிராயத்தைத் திட்டமிட்டு வளர்த்து ஒரு தனி அரசாங்கத்தை தோற்றுவிக்கும் நோக்கத்துடன் வட, கிழக்குப் பிரதேசங்களில் நிர்வாகத்தை முற்றாகச் சீர்குலைத்துவிட வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒரு சில அரசியல் ஸ்தாபனங்கள் முயல்கின்றன என்ற பெருங் கவலையை உண்டாக்கியுள்ளன.

ஒரு ஜனநாயக ஆட்சி முறையின் கீழ், மனத்தாங்கல் அடைந்த சிறுபான்மைச் சமூகத்தினர், பாராளுமன்றத்தில் தமது குறைபாடுகளைத் தெளிவாக எடுத்து விளக்குவர் என்றே எதிர் பார்க்கப் படுவார்கள். இச் சத்தியாக்கிரக இயக்கத்தை நடாத்தும் தமிழ் பேசும் பாராளுமன்ற பிரதிநிதிகள் சிலர் பாராளுமன்றத்திடம் மூன்று மாத லீவு கோரிப் பெற்றிருத்தல் நம்ப முடியாத ஒன்ருக இருக்கிறது. ஒரு சமரசத்தை ஏற்படுத்துவதற்காக சத்தியாக்கிரகத்தை நிறுத்துங்கள் என்ற எனது வேண்டுகோளுக்கு இசைந்து ஒத்துழைப்பதற்குப் பதிலாக, இவ்வியக்கத்தின் தலைவர்கள் எனது

வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டுத் நமது இயக்கத்தைத் தீவிரப் படுத்தத் தயாராகி விட்டார்கள் என்பதை இது நன்கு காட்டுகிறது.

எனது அமைச்சர்கள் நான் இங்கு இல்லாத நாட்களில் பாராட்டத்தக்க அடக்கத்துடன் நடந்திருக்கிறார்கள். இந்த நாட்டின் சட்டத்திற்கமைய நிறுவப்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான நேரடி நடவடிக்கையே, நமது இயக்கம் என்று சத்தியாக்கிரகிகள் பகிரங்கமாகக் கூறிய பின்னரும் கூட நாட்டின் பல பாகங்களிலும் வதியும் சிங்கள மக்கள் குறிப்பிடத்தக்க பொறுமையைக் காட்டியிருக்கிறார்கள்.

சனநாயக முறையில் இயங்கும் ஒரு சுதந்திர நாட்டில் இவ்வகையான ஒரு சத்தியாக்கிரக இயக்கத்திற்கு இடமேயில்லை என்று பண்டித நேரு கூடக் கூறியிருக்கிறார். தமிழ் மக்களைப் பட்டினி போட்டு சத்தியாக்கிரக இயக்கத்தை முறியடிக்க அரசாங்கம் முயல்கிறதென்று இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. நேர்மையானவர்களும் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களுமென்று தம்மைக் காட்டிக்கொள்ளும் அரசியல் தலைவர்கள், பொய்ப் பிரசாரத்தைக் கொண்டு மக்களைத் தப்பான வழியிலிட்டுச் செல்கிறார்கள் என்பது மிகவும் கவலை அளிக்கும் ஒரு விஷயமாகும். சத்தியாக்கிரக இயக்கத் தலைவர்களின் கட்டளைப்படி அல்லாமல் வழக்கமான வழிவகைகளின் மூலம் உணவுப் பொருட்களை விநியோகஞ் செய்ய அரசாங்கம் எப்பொழுதும் சித்தமாகவும் தயாராகவும் இருக்கிறதென்பதை அது தெளிவு படுத்தியுள்ளது. மக்கள் தங்கள் பங்கீட்டரிசியைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்துவதன் மூலம் சத்தியாக்கிரகிகளே மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்கி

றார்கள். இவ்வித நடவடிக்கைகளின் முழுப் பொறுப்பையும் சத்தியாக்கிரக இயக்கத்தை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஆதரிக்கும் ஒவ்வொருவரும் அவர், சமஷ்டிவாதியாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி ஏற்றாக வேண்டும்.

அத்தியாவசிய சேவைகள் தடையின்றி நடைபெறுவதையும், வழக்கமான முறைகளில் அரசாங்க நிர்வாகம் நடைபெறுவதையும், மக்கள் தங்கள் உணவைக் கஷ்டமின்றி பெற்றுக் கொள்வதையும் கவனித்துக் கொள்வது எனது அரசாங்கத்தின் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்ற அரசாங்கம் சிறிதும் தயங்காது. இதுவரை காட்டப்பட்ட சகிப்புத்தன்மை பலவீனத்தால் ஏற்பட்டதொன்றென்று கருதப்படக் கூடாது. இவ்வியக்கத்தைத் தாமதமின்றி கைவிடுமாறு மீண்டும் வேண்டிக் கொள்ளுகின்றேன். இயக்கத் தலைவர்களின் குறைகளுக்குச் செவிமடுத்துத் தக்கமுறையில் அவற்றைப் பரிசீலனை செய்தபின் எவ்வித திருத்தங்களைச் செய்ய எனது அரசாங்கம் சித்தமாகவும் தயாராகவும் இருக்கிறதென்ற எனது உறுதி மொழியை நான் கூற விரும்புகிறேன். தனது கைவசமுள்ள வேறு வழிவகைகளைக் கொண்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்படுமிடத்து, அவ்வித நடவடிக்கையினால் ஏற்படக் கூடிய விளைவுகளுக்கான முழுப்பொறுப்பையும் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆதரிப்பவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்."

### பிரதமர் அறிக்கைக்கு தமிழரசுத் தந்தை பதில்.

சத்தியாக்கிரகத்தைக் குறிப்பிட்டு பிரதம மந்திரி வானொலிப் பேச்சொன்று நிகழ்த்தியிருக்கிறார். அந்தப்

பேச்சு, ஜனநாயகத் தலைவர் ஒருவர் தனது மக்களுக்கு நிகழ்த்திய பேச்சு என்பதைவிட எதேச்சாதிகார சர்வாதிகாரி யொருவர் தனது அடிமை மக்களுக்கு நிகழ்த்திய பேச்சாக இருக்கிறதென்பதே பொருத்தமாகும். உண்மையில், பிரதமர் நிகழ்த்திய வானொலிப் பேச்சு முறையும், பேச்சின் பொருளும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் உண்மையான நிலையை - அந்தஸ்தை தெளிவாகக் காட்டியுள்ளது. உண்மையில் தமிழ் பேசும் மக்கள் கலனி எதேச்சாதிகார ஆதிக்கத்தின் கீழ்தான் உள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் பிரதம மந்திரியின் பிரசங்கங்களில் கூட எதேச்சாதிகார முறைகளைக் காணக்கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. பெரிய பிரித்தானியாவுக்குப் புறப்படுமுன் பிரதமர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். சமஷ்டி வாதிகளான "குழப்பக்காரர்களின்" நடவடிக்கைக்கு முறியடிக்கும்படி "நியாயமான தமிழர்கள்" என்று அவர் அழைத்த தமிழ் மக்களுக்கு பிரதமர் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்திய தேசாபிமானிகளின் விடுதலைப் போராட்டத்துக்கு பிரிட்டிஷ் எதேச்சாதிகாரிகள் இப்படித்தான் பதிலளித்தனர். உண்மையான நிலைமை என்னவெனில், தமிழ் பேசும் மக்களில், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில், சத்தியாக்கிரகத்தை ஆதரிக்காதவர்களே இல்லை என்பதுதான்.

பிரதம மந்திரியின் பேச்சுக்களின் பொருள்பற்றிச் சிறிது ஆராய்வோம். சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டதும், சிங்களம் மட்டும் சட்டம் அமுல் நடத்தப்படுவதால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பற்றி பரிசீலனை செய்யத் தாம் தயாராக இருப்பதாகப் பிரதமர் கூறியிருக்

கிறர். சிங்களம் மட்டும் சட்டம் அமுல் நடத்தப்படுவ தால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைவிட மொழிப் பிரச் சினை சம்பந்தமான தமிழ்பேசும் மக்களின் கோரிக்கை களின் சாரம் அதிக முக்கியமான தென்பதை பிரதமர் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

இந்த நாட்டின் நிர்வாகத்திலும், இந்த நாட்டின் நீதிமன்ற நிர்வாகத்திலும் தமிழ் மொழிக்குக் குறிப்பிட்ட ஒரு அந்தஸ்து இருக்கவேண்டும் என்பது தான் தமிழ் மக்களின் கோரிக்கை. இந்த அந்தஸ்து பற்றியும் உப யோகம் பற்றியும் விளக்கமான விபரங்கள் பிரதம மந் திரியிடம் தமிழரசுக் கட்சி கொடுத்துள்ளது. எங்களுக் கும் அரசாங்கத்துக்கும் உள்ள பிரச்சினை மொழிப் பிரச்சினையைவிட இதர அம்சங்களைக் கொண்டதாயி னும், இந்த அறிக்கையைப் பொறுத்தளவில் மொழிப் பிரச்சினையுடன் மட்டும் நிறுத்திக் கொள்கிறேன்.

மொழிப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் தமிழ் மொழியின் அந்தஸ்து, உபயோகம் இவை பற்றியே தகராறுக் கிடமானதாக உள்ளது. ஆனால் பிரதம மந் திரி இதைப்பற்றிப் பேசவில்லை. இதைப்பற்றி மகா நாடுகளில் விவாதித்தும், மகஜர்கள் சமர்ப்பித்தும் கூட தமிழ் மொழிக்கு அந்தஸ்து அளிக்க அவர் தயாரில்லை என்பது தெளிவு. மேலும் பாராளுமன்றத்தில் நீதி மன்ற மொழி மசோதாவை ஆட்சேபித்து நாங்கள் நீண்ட நேரம் விவாதித்தோம். தமிழ் பேசும் மக்கள் தங்கள் பிறப்புரிமை எனக் கருதும் மொழி உரிமை பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தியும் பாராளுமன்றத் தில் விவாதித்தும் பயன் கிடைக்கத் தவறியதால்தான் சத்தியாக்கிரக ஆயுதத்தை மேற் கொண்டோம். இந் நிலையில் பிரதமர் பின் வருமாறு சொல்லுகிறார்:-

(1) சத்தியாக்கிரகத்தை வாபஸ் பெற வேண்டும்.

(2) மொழிப் பிரச்சினையில் எங்கள் கோரிக்கை களை நிறைவேற்றவோ அதைப்பற்றி விவா திக்கவோ மாட்டார்.

(3) ஆனால் சிங்களம் மட்டும் சட்டம் அமுல் நடத் தப் படுகையில் கஷ்டங்கள் ஏற்பட்டால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய அவர் தயா ராக இருக்கிறார்.

எனவே, பிரதம மந்திரியின் பேச்சில் ஒப்புக் கொள் ளக்கூடிய அம்சம் எதுவும் இல்லை என்பது தெளிவு.

விளைவுகள் பற்றிப் பிரதமர் பயமுறுத்துகிறார், படை பல உபயோகத்தைத்தான் இது குறிப்பிடுகிறது. பிரதம மந்திரியின் சக்தியை நாங்கள் ஒருபோதும் குறை வாக மதிப்பிடவில்லை. தனது ஆயுதப் படைகளை எங் களுக்கு எதிராக "ஏவி" விடுவதற்கு அவருக்கு அதி காரம் இருக்கிறது என்பதை நாங்கள் நன்கு அறி வோம்.

*1959*-ம் வருடத்தில் அந்தத் துக்கமான தினத்தில் கொலையாளி கைத்துப்பாக்கியிலிருந்து குண்டுகள் பாய்ந்த போது பிரதமரின் காலஞ்சென்ற கணவர் எவ் வித சக்தியற்ற நிலையில் இருந்தாரோ, அதே நிலையில் தான், பிரதம மந்திரியின் ஆயுதந்தரித்த கொலையாளி கள் எங்கள் முன் துப்பாக்கியை நீட்டும் பொழுது நாங்களும் நிராதரவற்றவர்களாக சக்தி இழந்து நிற் போம் என்பதை அறிவோம்.

பங்கீட்டரிசி விநியோகம் சம்பந்தமாக சரியான அறிக்கையைப் பிரதம மந்திரி விடுக்காதது வருந்துதற் குரியது. சத்தியாக்கிரகிகளுக்கு ஊடாகக் கச்சேரிக்குச் சென்று பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுகளைப் பெற்

றுக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைமையைச் சமாஜங்களுக்கு ஏற்படுத்தாமல், கூட்டுறவுச் சங்க சமாஜங்களின் காரியாலயங்களுக்குச் சென்று பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுகளை ஒரு அரசாங்க அதிகாரி, சத்தியாக்கிரகம் ஆரம்பித்த முதல் இரண்டு வாரங்களிலும் வழங்கி வந்தார். மூன்றாவது வாரத்திலிருந்து இந்த முறையை மாற்றி, சமாஜங்களின் பிரதிநிதிகள் கச்சேரிக்குள் வந்து பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுகளை பெற்றுச் செல்ல வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தத் தொடங்கியது. கச்சேரிக்குள் சென்று அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ள சமாஜங்கள் மறுக்கவே, அனுமதிச் சீட்டுகள் பெற்றுக் கொள்ள வேண்டியவர்கள் கச்சேரிக்குள் செல்ல வேண்டியதற்குரிய நடவடிக்கைக்கான தந்திரோபாயங்களை அரசாங்கம் மேற் கொண்டது. அரசாங்கம் கைக்கொண்ட இந்த ஏமாற்று நடவடிக்கைதான், பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுகளை கூட்டுறவுச் சங்க சமாஜங்களும் உத்தரவாதம் பெற்ற வியாபாரிகளும் பெற்றுக் கொள்ள வாய்ப்பில்லாமல் செய்து விட்டது. இது தான் பங்கீட்டரிசி பற்றிய உண்மை விபரம்.

சத்தியாக்கிரகி தனக்குச் சரி என்று நினைப்பதைச் செய்கிறான். தனது வேலையின் பலாபலன்களைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. தமிழ் பேசும் மக்களின் வாக்குகளில் தங்கியிருக்க வேண்டியதில்லை என்ற ஒரே காரணத்துக்காக தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட உறுதியான கோரிக்கைகளை மறுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தோன்றுகிறது."

மேலே தரப்பட்ட, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 25-3-61இல் விடுத்த அறிக்கையும், தமிழரசுத் தந்தை செல்வநாயகம் உடனடியாக விடுத்த பதிலறிக்கையும் மிக

முக்கியமானவை. ஏனெனில் இவை அரசாங்கமும் தமிழ் பேசும் மக்களும் தமிழ் உரிமைபற்றிக் கொண்டுள்ள கருத்து வேற்றுமையைத் தெளிவாகக் காட்டுகின்றன. பிரதமர் அறிக்கை, "தமிழர்களே" மரியாதையாக சத்தியாக்கிரகத்தை உடனே கைவிட்டுச் சரணகதி அடையுங்கள். இன்றேல், சிங்களப் பொதுமக்கள் உங்களுக்கு நல்ல பாடம் படிப்பிப்பார்கள். உங்களுக்கு உணவு கூடத் தரமாட்டோம். உரிமையாவது மண்ணுங்கட்டியாவது "என்ற அதிகாரமும் அகம்பாவமும் தொனிக்க அமைந்திருக்கிறது, பதில் அறிக்கை." தமிழ் பேசும் மக்கள் சத்தியாக்கிரகத்தை உங்கள் மிரட்டல்களுக்குப் பயந்து கைவிடத் தயாராக இல்லை. நீங்கள் ஏவி விடும் குண்டர்கள் காலிகளின் துப்பாக்கிகளுக்கும் கத்திகளுக்கும் அஞ்சோம். மலை மலையாகக் கொன்று குவித்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருக்கிறோம். பட்டினி கிடந்தாலும் பணிய மாட்டோம்." என்ற உறுதியும் நம்பிக்கையும் தொனிக்க அமைந்திருக்கிறது.

## சிங்கள அரசு போட்ட தப்புக் கணக்குகள்

### பெரும்பாலான தமிழர்கள் இயக்கத்தை ஆதரியார்.

பிரதமர் 4-3-61றில் நிகழ்த்திய வானொலிப் பேச்சில் நியாய புத்தி படைத்த தமிழ் மக்களை ஒரு சில விஷமிகள் பிழையான வழியில் கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள் என்றும், ஆனல் தமிழ் மக்களே இந்த விஷமிகளுக்கு நல்ல பாடம் படிப்பிப்பார்கள் என்றும் கூறினர். நிதிமந்திரி திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா லண்டனில் பேசிய போது பெரும்பாலான தமிழர்கள் அரசாங்கத்தை ஆதரிக்கிறார்கள் என்றும், சுமார் ஆயிரம் பேர் வரையில் தான் சமஷ்டி கேட்கிறார்கள். சமஷ்

டியை ஆதரிக்கிருர்கள், சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுகிருர்கள் என்றும் கூறினர். சமஷ்டிக் கட்சியில் இன்று சற்றேறத்தாழ 25,000 அங்கத்தினர் கட்சியின் நான்கு அம்சக் கோரிக்கைகளையும் ஏற்று உறுப்பினராய் இருக்கிருர்கள். 1960-ம் ஆண்டு நடைபெற்ற இரு பொதுத் தேர்தல்களிலும் 21 அங்கத்தினரைக் கட்சி சார்பில் நிறுத்தி, மார்ச் தேர்தலில் 15 அங்கத்தவர்களையும் ஜுலை தேர்தலில் 16 அங்கத்தவர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களாய்த் தேர்ந்து அனுப்பி யிருக்கிறது. சென்ற தேர்தலில், 218753 வாக்குகள் தமிழரசுக் கட்சிச் சார்பில் பதியப் பட்டிருக்கின்றன. கட்சியின் தலைமையில் நடைபெற்று வரும் சத்தியாக்கிரக இயக்கத்தில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னூர், வவுனியா ஆகிய ஐந்து இடங்களிலும் பல்வேறு அரசாங்க காரியாலயங்களிலும், யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 25 காரியாலயங்கள் முன் மறியல் செய்யும் தொண்டர்களின் தொகை 50,000திற்கு மேற்பட்டதெனக் கருதப் படுகிறது. உண்மைநிலை இவ்வாறிருக்க, சுமார் ஆயிரம் பேர் வரையில் தான் சத்தியாக்கிரகம் செய்கிருர்கள் என்று கூறுவது, ஒன்றில் விவேக சூனியத்தைக் காட்டுகிறது, அல்லது பொது மக்களையும் பிற தேசங்களையும் ஏமாற்ற ஒரு பெரிய அண்டப் புழுகை அவிழ்த்து விடுவதாயிருக்கிறது.

## முஸ்லீம்கள் இயக்கத்தைப் பகிஷ்கரிப்பர்.

இலங்கையில் வாழும் 27 லட்சம் தமிழ் பேசும் மக்களில் 7 லட்சம் பேர் முஸ்லீம்களாகும். இவர்கள் எல்லா மாகாணங்களிலும் எல்லாப் பகுதிகளிலும் சிதறிக் கிடக்கிருர்கள், ஆயினும் இவர்கள் எங்கு வசித்தாலும், இவர்களது தாய் மொழி தமிழ் மொழியே என்பதைத் திரும்பத் திரும்ப முஸ்லீம்கள் கூறி வருகி

ரர்கள் 1915-ம் ஆண்டு நடைபெற்ற சிங்கள—முஸ்லீம் இனக் கலவரத்தின் போதும், அதையண்டி அரசாங்கம் அமுல் செய்த இராணுவ ஆட்சிச் சட்டத்தின் போதும், அனேக முஸ்லீம்கள் சிங்கள பிரதேசங்களில் தமது உயிரையும் உடைமைகளையும் இழந்தனர். தமிழ்ப் பிரதேசங்களில் மாத்திரம் ஒரு வித தீங்குக்கும் உள்ளாகாது அச்சமின்றி வாழ்ந்தனர். மதத்தால் வேறுபட்டாலும், மொழியாலும் இனத்தாலும் ஒன்றுபட்ட முஸ்லீம்களும் தமிழர்களும் சகோதரத்துவம் பூண்டு வாழ்ந்தனர், வாழ்கின்றனர். இவர்களைப் பிரிக்கும் நோக்கமாக சென்ற பல ஆண்டுகளாகச் சிங்களத் தலைவர்கள் செய்த முயற்சியெல்லாம் வீணாயின இன்று. சேர் றசீக் பரீது போன்ற கொழும்பு முஸ்லீம் தலைவர்களும், வேறு சில முஸ்லீம் செல்லாக் காசுகளும், தமிழ் மொழியைக் கைவிட்டு சிங்களத்தையே தாய் மொழியாக முஸ்லீம்கள் கைக்கொள்ள வேண்டுமெனப் பிரசாரஞ் செய்கின்றனர். இவர்கள் கூறும் சுயநயம் கலந்த புத்திமதியை முஸ்லீம்கள் பெரும் பாலானோர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவு. சத்தியாக்கிரகம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்ததும், முஸ்லீம்கள் தமது தாய் மொழியாம் தமிழ் மொழி உரிமை காக்கும் பொருட்டு ஆயிரக்கணக்கில் அறப்போரில் குதித்தனர். ஆண்கள், பெண்கள், செல்வர், வறியோர், சிறுவர், வயோதிபர் என்னும் பல வகைப்பட்டோரும் சத்தியாக்கிரகத்தில் கலந்து பொருளுதவியும் பிறவுதவிகளும் நல்கினர். முன்னாள் எம். பீக்கள் பலரும், இந்நாள் எம். பீக்கள் பலரும் முஸ்லீம் சமுதாயத்தின் சார்பிலே சத்தியாக்கிரகத்தில் பங்கு பற்றினர். முஸ்லீம் பகுதிகளில் உள்ள நகர சபைகள் கிராமச் சங்கங்கள் கிராம முன்னேற்றச் சங்கங்கள் முதலியனவற்றின் உறுப்பினர் மிகப்பலர் பகிரங்கமாகவே இயக்கத்தில் ஈடுபட்டனர். சுருங்கச் சொன்னால், வடக்கு கிழக்கு மாகாணங்களில்

உள்ள முஸ்லீம்களில் 90 வீதமானோர் சத்தியாக்கிரகத்தில் தீவிர பங்கு கொண்டனர் என்று கொள்வது மிகைபடுத்திக் கூறியதாகாது. ஆகவே, முஸ்லீம்கள் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு அளிக்க முன் வரமாட்டார்கள் எனச் சிங்கள அரசு எதிர்பார்த்தது பொய்க் கனவாகப் போய் விட்டது.

### சிங்களப் பொதுமக்கள் தீவிர எதிர்ப்பு

கொழும்பில் 1956-ம் ஆண்டில் சிங்களம் மாத்திரம் சட்டம் அவையை எதிர்த்துத் தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகத்தைச் சிங்களக் குண்டர்கள் சிலர் ஒரே நாளில் ஒரு சில மணித்தியாலங்களில் முடியடித்து வாகை சூடினர். இந்தச் சிங்களக் குண்டர்கள் அந்நாள் சிங்களத் தலைவர்களால் பொது ஜனங்கள் என விபரிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு அரசாங்க எம். பீக்களின் உதவியும் ஊக்கமும் வெளிப்படையாகக் கிடைத்தது. மறைமுகமாக அந்நாள் அமைச்சர் அவையினர் மிகப்பலர் ஆதரவு கொடுத்தார்கள். இதைப் போலவே, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தையும் முறியடித்து விடுவார்கள் என்றும், சிங்களப் பிரதேசங்களில் உள்ள தமிழர்களைச் சிங்களப் குண்டர்கள் பொதுஜன எதிர்ப்பு என்ற போர்வையில் தாக்கி அடித்து நொறுக்கி ஊரை விட்டு ஓடச் செய்வார்கள் என்றும், இதனால் பயந்து தமிழர்கள் சத்தியாக்கிரகத்தை இம்முறையும் கைவிடுவார்கள் என்றும் ஸ்ரீமாவோவின் அரசாங்கம் எதிர் பார்த்தது. அநேக அரசாங்க எம். பீக்களின் பேச்சுக்களும் அமைச்சர்களின் விளக்கங்களும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் விமர்சனங்களும், பிரதமரின் வானொலிப் பிரசங்கங்களும், சூசகமாக இவ்வித இனக் கலவரத்தை உருவாக்கத் தூண்டும் விதமாக அமைந்திருந்தன. ஆயினும் இவை

பலனளிக்கவில்லை. சிங்களக் குண்டர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் வந்து தமது கைவரிசைகளைக் காட்ட முன்வரவில்லை. சிங்களப் பிரதேசங்களில் கூட தமிழர்களை நேர் முகமாகத் தாக்கிக் கலவரம் விளைவிக்க யாரும் விரும்பவில்லை. ஆகவே, சிங்கள அரசு எதிர் பார்த்தது போல ஒரு சிங்கள - தமிழ் இனக் கலவரம் உருவாக மறுத்து விட்டது.

இதற்கு மாறாக தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்து தம்தொழிலை நடாத்தி வந்த சிங்களக் குடும்பங்கள் அமைதியுடனும் பாதுகாப்புடனும் கிலேசமற்று வாழ்ந்து வந்தனர், தமிழர் கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்தனர், சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு நல்கினர், பணமும் உதவினர், உணவும் அளித்தனர், தகிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்ாது ஆண்களும் பெண்களும் தமிழ் பேசும் மக்களோடு சேர்ந்து தாமும் சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினர். ஊர்வலங்களிற் கலந்து கொண்டு, "சிங்களவராகிய எங்களுக்குச் சிங்கள மொழி கண் போன்றது, தமிழர்களுக்கும் தமிழ் அப்படியே" "அரசாங்கம் எமது தமிழ்ச் சகோதரர்களுக்கு அநீதி செய்கின்றது, நீதி வழங்குக" என்பன போன்ற சுலோகங்களை சிங்கள மொழியில் அட்டைகளில் எழுதி அவற்றைத் தாங்கிக் கொண்டு தமிழர்களோடு ஊர்வலங்களிற் பங்கு பற்றினர். இவற்றையெல்லாம் கண்ட சிங்கள அரசு துணுக்குற்றது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை போல். சிங்கள மக்கள் சத்தியாக்கிரகத்தை எதிர்ப்பார்கள் என்றும், இதனல் ஏற்படக்கூடிய கலவரத்தைக் காரணமாகக் கொண்டு இராணுவ நடவடிக்கைகளால் இயக்கத்தை அடக்கி விடலாம் என்றும் எதிர்பார்த்த அரசாங்கம், சிங்கள மக்கள் பலர் சத்தியாக்கிரகத்தில் கலந்து

கொண்டு ஆதரவளித்ததைக் கண்டு திகைப்பும் ஏமாற்றமும் அடைந்தது.

### சிங்கள அரசுக்குப் பிற நாடுகளின் ஆதரவு

உலகம் முழுவதிலும் சிறப்பாக ஆசிய ஆபிரிக்க நாடுகளிடையே, இன ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேசங்கள் மதிப்பிழந்தன. சர்வதேச ஸ்தாபனம் கொம்மன்வெல்த் மகாநாடு போன்ற ஸ்தாபனங்களில், ஏதாவது ஒரு தேசத்தில், பெரும்பான்மை இனம் சிறுபான்மை இன மக்களை துன்புறுத்தும் போதெல்லாம் கண்டனக் குரல் கிளப்பப் பட்டது. இலங்கையில் மக்கள் அரசாங்கம் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் சிங்கள பௌத்த அரசாங்கம் உள்ளூர் விவகாரம் என்றும் திரைமறைவில் சிறுபான்மை இனமாகிய தமிழ் இனத்தை அழித்துக் கட்டத் தீட்டிய திட்டங்களும் சட்டங்களும் அயல்நாடு அந்நிய நாடுகளின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கின. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, சிங்கப்பூர், இந்தியா முதலிய பல தேசங்களில் உள்ள அநேக பத்திரிகைகளும், அரசியல் ஸ்தாபனங்களும், பிரமுகர்களும் இந்த இன ஒழிப்பு நடவடிக்கைகளைக் கண்டிக்கத் தொடங்கினர். தென் ஆபிரிக்காவில் உள்ள இன வெறி நிற வெறியைக் காரசாரமாகக் கண்டித்த இலங்கை, தன் உள்நாட்டு விஷயத்தில் கையாளும் இன வெறி நடவடிக்கைகளை, தென் ஆபிரிக்க பிரதமரே லண்டனில் அண்மையில் நடந்த கொம்மன்வெல்த் மகாநாட்டில் சுட்டிக் காட்டினார். இலங்கையில் நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கத்தையும் அதை அடக்க சிங்கள அரசாங்கம் கையாளும் நடவடிக்கைகளையும் விளைவுகளையும் அவதானிப்பதற்காக பிறநாடுகளிலிருந்து அநேக பத்திரிகை நிருபர்கள் வந்து குவிந்த வண்ணமாக இருந்தனர்.

இவர்கள் தாங்கள் நேரில் கண்ட உண்மையான செய்திகளை பாரபட்சமற்ற முறையில் தமது பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தனர் இது காரணமாக அயல் நாடு அந்நிய நாடுகள் உண்மை நிலையை உணரவும், சிங்கள அரசினரின் ஏமாற்றுப் பிரசாரங்களை நம்பாமலும் மிருகத்தனமான அடக்கு முறைப் பிரயோகத்தை அறியவும் கூடியதாக உலக அபிப்பிராயம் உருவாகிறது. எனவே, சிங்கள அரசு எதிர் பார்த்ததற்கு மாருக பிறநாட்டு அரசாங்கங்கள் நேர்முகமாகக் கண்டிக்கா விட்டாலும், உலக மக்கள் அபிப்பிராயம் இலங்கை அரசினரின் இன ஒழிப்பு நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்தது.

இரண்டொரு நாட்களில் பிசு பிசுத்துப் போய்விடும் என்று எதிர் பார்த்த சத்தியாக்கிரக இயக்கம் இரண்டு மாதங்களாக தங்கு தடையின்றிப் பரந்து பட்டு வலுவுற்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து இயக்கத்தை ஆதரித்தனர். முஸ்லீம் மக்களின் பேராதரவையும் இயக்கம் பெற்றது. சிங்களப் பொது மக்கள் இயக்கத்தை எதிர்க்கவில்லை. பிற நாடுகளின் அபிப்பிராயம் இலங்கை அரசைக் கண்டிக்கும் குரலாக உருப்பெற்றது. ஆகவே, தனது மானத்தைக் காப்பாற்ற ஏதாவது தீவிர செயலில் இறங்க வேண்டுமெனச் சிங்கள அரசு உணரத் தொடங்கியது. இது போலவே, பல்லாயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் வாரக் கணக்கில் எரிக்கும் வெய்யிலிலும் பொழியும் மழையிலும் சத்தியாக்கிரகம் செய்து அலுத்துப் போயினர். ஏதாவது புதிய திருப்பத்தை இயக்கத்திற் புகுத்த வேண்டிய நிர்ப்பந்தம் தமிழரசுக் கட்சிக்கும் ஏற்பட்டது. இதன்படி சில தீர்மானங்கள் செய்யப்பட்டது.



"தமிழன்னை அரசாள வழி செய்வோர்" என முழக்கமிட்டவாறு
தமிழ் வளர்க்கும் ஆசிரிய திருக்கூட்டம்
மட்டுநகர் அறப்போர்க் களத்தை நோக்கி விரைகிறது.

# தபாற் சேவை.

சத்தியாக்கிரகப் போர் தொடங்கி தமிழ் பிரதேசத்திலுள்ள அரசினர் காரியாலயங்கள் அனைத்திற்கும் விஸ்தரிக்கப் பட்டது. பல நாட்களாக அமைதியோடும் கட்டுப் பாட்டுடனும் அறப்போர் நடந்து வந்தது. மக்களுக்குள் சலிப்புத் தொட்டு நம்பிக்கையிழந்து சத்தியாக்கிரகம் தானகவே பிசு பிசுத்து விடும்; அதன் பின்னர் தனிச் சிங்கள சட்டத்தை இன்னும் வேகமாக அமுல் செய்யலாம் என அரசாங்கம் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சில பச்சோந்திகளும் அரசாங்கத்தின் குருட்டு நம்பிக்கைக்கு பக்க மேளம் வாசித்தனர்.

அறப்போரை நடத்த வேண்டுமென்ற முடிவிற்கு வந்த தலைவர்கள் உலக நாடுகளின் சரித்திரமுணராதவர்களென்றே? அன்றேல் படிமுறைத் திட்டங்களெதுவு மற்றவர்களெனவோ? அன்றேல், மனத்தளர்வு கொண்டு போராட்டத்தை நட்டாற்றில் விட்டு விடுவார்களெனவோ யாரும் கருதி இருந்தால் அவர்கள் விவேகத்திற்கு வணக்கஞ் செலுத்த வேண்டியதே. "அறப் போர் நடத்தும் தலைவர்களிடம் எதுவித திட்டமுமில்லை, இதோ அறப்போர் பிசு பிசுத்து விட்டது" என்று பிரசாரஞ் செய்த அரசாங்கத்தின் கூலிகளின் பிரசாரத்தை நம்பிய ஆட்சியாளர் "சத்தியாக்கிரகம் தோல்வி காணுகிறது, மக்கள் அதில் நம்பிக்கை இழந்து விட்டார்கள்; சத்தியாக்கிரகம் நடைபெறுமிடங்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்பேசும் மக்கள் சத்தியாக்கிரகத்தை ஏற்க மறுத்து விட்டார்கள் என்றெல்லாம் ஆரம்பத்திலே பிரசாரஞ் செய்தவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆட்சி நடை பெறவில்லை என்று பகிரங்க அறிக்கை

வெளியிடுமளவுக்கு வந்தனரென்றால் மக்கள் எத்துணைத் தூரம் அறப்போரில் நம்பிக்கை வைத்தனரென்பது தெள்ளென விளங்கும்.

ஒரு தேசத்தில் எல்லா இன மக்களும் இணைந்து நடாத்தும் போராட்டத்திற்கும், ஒரு இனம் தன் உரிமை கோரி இன்னுமோரின ஆட்சியாளரொடு நடாத்தும் போராட்டத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதம் உண்டு. இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையோராகவும், சிங்களம் பேசும் மக்கள் பெரும்பான்மையோராகவும் இருக்கின்றனர். பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகள் ஆட்சி செய்யும் உலக நாடுகளில் பரந்த அறிவியல் ஞானத்தால் திறந்த மனப்பான்மையோடு சிறுபான்மை இனங்களின் உரிமைகளைக் காத்து, அவர்களின் ஒத்துழைப்போடு நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கிறார்கள். ஆனால் இலங்கையின் துரதிஷ்டம் சிங்களப் பொதுமக்கள் எத்துணை நல்லவர்களோ அதற்கு எதிராக சிங்கள அரசியல் தலைவர்கள் வகுப்புவாதிகளாகி சிங்களப் பொதுமக்களைத் தவறான பாதையில் சிந்திக்கத் தூண்டி வகுப்புத்துவேஷ விதையை விதைத்தார்கள். இதனால் தமிழ் பேசும் மக்கள் தமது உரிமை கோரி ஆட்சியாளரை எதிர்க்கும் போது சிங்களப் பொதுமக்கள் மத்தியில் பரபரப்புத் தோன்றும். தவறான பாதையில் வளர்க்கப்பட்ட சிங்கள பாமர மக்கள் முடிவை ஆலோசியாது தம் தலைவர்களின் தயவிற்கோ, அற்ப சலுகைகளுக்கோ, கொள்ளை அடிப்பிற்கோ முனைந்து வகுப்புக் கலவரத்தை உண்டாக்கி இறுதியில் சிறைக்கூட வாழ்வையும் தூக்குத் தண்டனையையும் பெறும் போது தான் தம் தலைவர்கள் தங்களை எவ்வளவு தூரம் தவறான பாதைக்கு இட்டுச் சென்று தம் வாழ்வைப் பாழாக்கி விட்டனரென ஏங்கி வருந்துவர்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலைநாட்டுப் பகுதிகளில் தமிழரும் ஏனைய இடங்களில் சிங்களவரும் பெரும்பான்மையாக வாழினும், சிங்களப் பிரதேசங்களில் தமிழ் பேசுவோர் கணிசமான அளவும், தமிழ்ப்பிரதேசங்களில் சிங்கள மக்கள் கணிசமான அளவும் கலந்து வாழ்வதால் வகுப்புக்கலவர காலங்களில் இனங்கள் பெருமளவு பாதிக்கப்படும். வகுப்புக் கலவரம் தோன்றி வளர்ந்து அதன் பூதாகாரமான நிலை எவ்வளவு பயங்கரமான தென்பதைப் பூரணமாக இலங்கைமக்கள் காணுவிடினும் - வகுப்புக் கலவரம் தொடங்கி ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தப் பட்ட போதிலும் - ஆரம்ப நிலையால் மக்கள் பட்ட வேதனையைக் கொண்டு வகுப்புக் கலவரத்தின் கோரப்பசிக்கு இனமும் நாடும் எந்த அளவுக்கு இரையாகும் என்ற சித்தாந்தம் இருபக்க அரசியல் அறிவியல் தலைவர்களின் உள்ளங்களிலே தோன்றாமலில்லை.

வகுப்புக் கலவரமென ஒன்று தோன்றினல் அதனல் பெருமளவு தாக்கப் படுவோரும் நஷ்டமடைவோரும் தமிழ்ப் பேசுவோராவார். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைத்தல், உயிருடன் அக்கினியுட் போட்டு வதைத்தல் என்பன போன்ற சித்திரவதைகளைச் செய்வதற்கு உலகிலேயே முதன்மை பெற்றவர்கள் சிங்களக் காடையர்கள். உரிமைப் போரை ஆரம்பித்தால் தமிழ்ப் பேசும் மக்கள் அழிக்கப் படுவார்கள், இம்சிக்கப் படுவார்கள் என்பதை தெளிவாக உணர்ந்தும், அப்படியான சூழ் நிலையை உருவாகாது ஆட்சிப் பீடத்தையே தாக்கக் கூடியதான போராட்ட திட்டத்தை வகுத்த பெருமை அமரர் **வன்னியசிங்கம்** அவர்கட்கே உரியது. ஆரம்பத்தே அமரர் வன்னியசிங்கம் அவர்கள் வேறிரு பெரியார்களுடன் பல நாட்களாகச் சிந்தித்து அறப் போர்த் திட்டமொன்றை வகுத்தார். இடுக்கித் தாக்

குதல் போன்ற அத் திட்டம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமின்றி இலங்கை முழுவதிலுமே அரசாங்கம் ஸ்தம்பிக்கும் வன்மையைப் பெற்றது." மூன்றே மூன்று மாதங்களில் இலங்கை முழுவதும் ஆட்சி ஸ்தம்பிக்கும் அறப்போர் என்ற தலையங்கம் எழுதப்பட்ட முதலாம் பக்கத்தை விட திட்டங்கள் எழுதப்பட்ட ஏனைய இதழ் அனைத்தையும் தீக்கிரையாக்கிவிட்டுத் தம் உள்ளத்தோடு வைத்து இருந்தார். ஊழெனும் பெருவலி சூழ்ந்த தமிழ் இனத்தின் துரதிஸ்டம், திட்டம் தீட்டிய வரையும் உடனிருந்த இருவரில் ஒருவரையும் அமரத்துவமடையச் செய்துவிட்டது. ஒரு சில அம்சங்களை விட ஏனைய திட்டங்கள் எவை என்பது பற்றி மூன்றுவது பெரியாரை வினவியபொழுது அவர் எதுவும் கூற மறுத்துவிட்டார். பின்னர் போராட்ட செயற்குழு அறப்போர் திட்டத்தைத் தீட்டியது. எந்தத் தேசத்திலும் கண்ணியமான இயக்கமாயினும் தீவிர வாதிகளும் அந்த இயக்கத்தில் இருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியிலும் செல்வாக்கும் விவேகமுடைய தீவிர வாதிகள் இருந்தபோதிலும் தலைவரின் கட்டுப்பாட்டுக்குள் தீவிர வாதிகள் அடங்கி தலைவரின் கட்டளையை ஏற்று நடக்க பெருந்தன்மையாலே தான் அறப்போர் உலகப்பிரசித்தி அடைந்தது. அறப் போர்த் திட்டங்கள் பல ஆண்டுக் காலமாக-பல அரசியல் ஞானிகளின் தீர்க்க தரிசனத்தை முன் வைத்து சிந்தித்து அலசி ஆராய்ந்து – இரு வகையான திட்டங்களைத் தீட்டினார்கள். இருவகைத் திட்டங்களும் ஆட்சி ஸ்தம்பிக்கத் தக்க தொடர்பான பலபிரிவுகள் கொண்டிருந்த போதிலும், இரண்டாவது திட்டத்தையே தீவிர வாதிகள் வரவேற்று அதை அடிப்படையாக வைத்து அறப்போரை நடாத்த வேண்டுமெனத் துடிதுடித்தனர். ஆனால் பொறுமையும் சிந்தனை சக்தியும் பொறுப்புணர்ச்சியும் விவேகமும் படைத்த அறப்போர்ச் செயற்குழு முதலாவது திட்டத்தின் முதலாம் பிரிவை

அடிப்படையாகக் கொண்டு அறப்போரை ஆரம்பித்து சிறிது சிறிதாக விஸ்தரித்து பொறுப்புணர்ச்சியோடு நடாத்தி வந்தது. சத்தியாக்கிரகம் தோல்வி கண்டு விட்டது என ஆனந்த நடனமாடிய ஆட்சியாளர் ஒரு நாள் நடன மண்டபத்திலேயே திக்பிரமை கொண்டு செய்வதறியாது ஏக்கமுற்றனர். தமிழ்த் துரோக பரம்பரை தலைமீது கைவைத்து நெடுமூச்செறிந்தது. சுதந்திர வீரர்கள் புத்துணர்வு படைத்தனர். அகில உலகிலும் பத்திரிகைகள் தலையங்கம்தீட்டின. எங்கு பார்ப்பினும்மக்கள் முகங்கள் புதிய சோபையுடன் விளங்கின. திட்டமில்லை என்றவர்கள் திகைத்தனர். பச்சோந்திகள் பதறினர். கயவர் கூட்டம் கலங்கியது. போராட்டத் தலைவர்களே தெரிந்து கொள்ளாத வகையில் செயற்குழு தனது முதலாவது திட்டத்தின் முதலாம் பிரிவின் இரண்டாவது சரத்தை 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ந் தேதி அன்று நடைமுறையில் கொண்டு வந்தது. இத்தனை பரபரப்பை உண்டாக்கிய அத்திட்டம் தான் தபாற் சேவையாகும். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த மூது பெருங்குடிகளாய தமிழ்ப் பேசும் பெருமக்கள், இறவாத புகழ் தாங்கி உலகம் புரந்த பண்டைய சரித்திர வரலாற்றையும், இன்றைய உலகில் பரந்து வாழும் அவர்களது பண்பியல், மாண்பியல், திண்பியல், பொருளியல் வரலாற்றையும் அகில உலகத்திற்கும் எடுத்துக் கூறும் வகையில் அலை கடலில் பவனிவரும் நாவாய், ஏரும் சக்கரமும் தாங்கிய கருத்தியல் சின்னத்தை கவர்ச்சிகரமான முறையில் வெளியிட்டு சுமார் ஆறுகோடிக்கதிகமான தமிழ்ப்பேசும் பெருமக்களது சார்பாக உலகத்தின் கவனத்தை இலங்கைபால் திருப்பிய பெருமைக்குரிய போராட்ட செயற்குழுவின் முத்திரை வெளியிட்டன்று தந்தை செல்வநாயகம் அவர்களால் சத்தியாக்கிரக தலைமைக்களமாய யாழ்ப்பாண அரசியல் ஆணை நிலைய வாயிலில் ஐயாயிரத்துக்

கதிகமான முத்திரை ஒரு மணி நேரத்துள் விற்கப்பட்டதென்றால் தமிழ் பேசும் மக்களது சுதந்திரத் துடிப்பு எந்த அளவிற்கு இருந்ததென்பதை சிங்கள ஆட்சியாளர் உணரவில்லையே என எவராவது நினைப்பார்களேயாயின் நினைப்பவர்களைப்பற்றி நாம் கவலைப் பட வேண்டியவர்களே. மனிதனின் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் மதிக்காமல் அடக்கு முறையால் பயமுறுத்தி நசுக்கி எடுக்கும் காலம் இருபதாம் நூற்றாண்டல்ல. ஆதிக்க முகிற் கூட்டம் சுதந்திர உடல்களிலிருந்து சீறிப்பாய்ந்த ரத்தச் சூறுவளியால் கரைக்கப்பட்ட காட்சி முதலாளித்துவத்தை தகர்ந்த ருஷியாவிலோ - முடியரசை உடைத்த பிரான்ஸிலோ, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பொடியாக்கிய இந்தியாவிலோ தென்னுபிரிக்காவிலோ மட்டுமல்ல — அல்ஜீரியா, கயானா முதலிய எத்தனையோ நாடுகளில் பார்க்க முடியும். ஆதிக்க எண்ணத்தால் சுதந்திர உணர்வை அடக்க முடியாது. அடிபணிந்ததாகத்தான் சரித்திரம் பறை கொட்டுகிறது. இந்த சாகாத உண்மையை அறியாத சிங்கள ஆட்சி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை சிங்களவராக்கி விடுவோமென எண்ணி ஆற்றும் திட்டத்தின் முடிவை காலம் விரைவில் அறிவுறுத்தும்.

# அவசரகாலமும்-
# -சத்தியாக்கிரகத் தடையும்.

தபால் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புத்துணர்ச்சி யொன்று தோன்றி சத்தியாக்கிரகத்தை விறுவிறுப்பு அடையச் செய்தது. வெளிநாட்டுத் தினசரிகள் தபால் விநியோகத்தைப் பற்றித் தலையங்கம் எழுதி சத்தியாக்கிரகப் போரின் புதிய திருப்பத்தைப் பற்றி விமர்சனம் செய்தன. இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்துச் சத்தியாக்கிரகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் வழியை ஆலோசிக்கத் தொடங்கியது. வெளிநாட்டுப் பத்திரிகைகளின் பிரசாரமும், பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட புத்துணர்வும், அரசாங்கத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பும் சேர்ந்து அவசரகால நிலைமையையும் அதைத்தொடர்ந்து ஊரடங்குச் சட்டத்தையும் பிரகடனஞ் செய்வதென அரசாங்கம் முடிவு செய்தது.

1961-ம் ஆண்டு சித்திரை மாதம் 17ந் திகதி நள்ளிரவு 12 மணிக்கு அரசாங்கம் இலங்கை முழுவதும் அவசரகால நிலைமையையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 48 மணி நேர ஊரடங்குச் சட்டத்தையும் பிரகடனஞ் செய்தது. பகலும் இரவும் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணக் கச்சேரிகளிலும் பிற முக்கிய காரியாலயங்களிலும் சத்தியாக்கிரகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மட்டக்களப்பு திருமலை போன்ற இடங்களில் சத்தியாக்கிரகிகளுக்கு அவசரகால நிலையையும் ஊரடங்குச் சட்டத்தையும் பற்றி அதிகாரிகள் கூறி அவர்களை எழுந்து செல்லுமாறு பணிவுடன் வேண்டிக் கொண்டார்கள். ஆனல்

யாழ்ப்பாணத்தில் எந்த அதிகாரியாவது இப்படியான வோர் நிலை பிரகடனஞ் செய்யப் பட்டுள்ள தென்பதைச் சத்தியாக்கிரகளுக்கு எடுத்துக் கூறவில்லை.

யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகத்தை நடாத்திய தலைவர்கள் 18ந் திகதி பகல் 12 மணிக்கு அல்லது இரவு 12 மணிக்குத் தான் அவசரகால நிலையும் ஊரடங்குச்சட்டமும் பிரகடனப் படுத்தப்படுமெனத் திட்டமாக நம்பினார்கள். காரணம் 17ந் தேதி இரவு ஒரு மணி வரை எந்த வித அரசாங்க அறிவித்தலும் கச்சேரி வாயிலில் இருந்த சத்தியாக்கிரகளுக்கு அறிவிக்கப்படாமையாலும் தலைவர்களைக் கைது செய்யும் சூழ்நிலை கூட இல்லாமையாலும் இவ்வித முடிவுக்கு வந்தார்கள்.

நேரம் சுமார் ஒரு மணி 15 நிமிஷம், பொலீஸ் ஜீப் வண்டியொன்று கச்சேரி வாயிலில் வந்து நின்றது. அதிலிருந்து இரு பொலீஸ்காரர் துப்பாக்கிகளுடன் குதித்து ஜீப் வண்டிக்கு எதிரே ஐந்து யார் தூரத்தில் நின்றார்கள். பொலீஸ் அதிபர் ஒருவர் ஜீப் வண்டியை விட்டிறங்கி உடுவில் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு தருமலிங்கம் அவர்களிடம் ஏதோ ஒரு பத்திரத்தைக் கொடுத்தார். ஓரிருவரிகள் வாசித்தது தான் தாமதம் திரு தருமலிங்கம் அங்கிருந்த அனைவர்க்கும் வணக்கம் செலுத்தி விட்டு உடன் சென்று ஜீப் வண்டியில் ஏறினார். பார்த்திருந்த மக்கள் கரகோஷம் செய்தனர்; தாய்மார்கள் அரோகரா என்றும் மாதாவே என்றும் குரலெழுப்பினார்கள். ஜீப் வண்டி ஒரு வட்டம் போட்டு விட்டு வேகமாக விரைந்தது. பின்பு இரண்டாவது ஜீப் வண்டி வந்தது. அதுவும் முதல் வந்த ஜீப் வண்டியிலுள்ளோர் செய்த நிகழ்ச்சிகளையே செய்தது. அதில் வந்த பொலீஸ் அதிகாரி திரு அமிர்தலிங்கம் அவர்களிடம் ஏதோ ஒரு அறிக்கையொன்றைக் கொடுத்தார். திரு

அமிர்தலிங்கம் அவர்களும் சத்தியாக்கிரகிகளைப் பார்த்துத் தமது வணக்கத்தைச் செலுத்தினர். அதே நேரத்தில் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களுக்கும் பொலிஸ் அதிகாரி அறிக்கை ஒன்றினைக் கொடுத்தார். மங்கையர்க்கரசி புன்முறுவல் பூத்த முகத்துடன் எழுந்து "தமிழ்ப்பெருங்குடி மக்களே! சர்க்கார் விருந்தாளியாக என்னை அழைத்துள்ளார்கள்; நான் சென்று வர விடை தாருங்கள்" என்றதும் சத்தியாக்கிரகத்திலிருந்த தாய்மார்களும் சகோதரிகளும் கண்ணீர் விடத் தொடங்கினர். இச் சந்தர்ப்பத்தே மூன்ருவது ஜீப் வண்டி வந்து நின்றது. பொலீசார் துப்பாக்கிகளுடன் குதித்து நிற்க அதில் வந்த பொலிஸ் அதிகாரி திரு சி. கதிரவேற்பிள்ளை அவர்களிடம் அறிக்கையைக் கொடுத்தார். கதிரவேற்பிள்ளை அவர்கள் அங்கு கூட்டமாக நின்ற மக்களிடம் விடைபெற்று ஜீப் வண்டியில் ஏறினர். எல்லா ஜீப் வண்டிகளும் விரைந்து சென்றன. மக்களின் உணர்ச்சி ஒலியும் வானைப் பிளந்தது.

இச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற அங்கத்தவர் திரு மு. சிவசிதம்பரம் அவர்களும், ஜெனட்டர் ஜி. நல்லையா உதவி மேயர் செல்லத்துரை, திரு பீற்றர் சோமசுந்தரம், வழக்கறிஞர் சு. நடராசா, வழக்கறிஞர் அ. செ. மகாதேவா, திரு சேனுதிராசா, திரு அன்ரன் முதலியோரும் தொண்டர்களும் நின்ருர்கள். தலைவர்கள் பிடிபட்டதும் வழமைபோல் காவல் செய்த பொலிசாரும் அந்த இடத்தில் இல்லாமையால் சத்தியாக்கிரகிகளுக்குக் கண்ணீர்ப் புகை அடிக்கப் படலாம் என்ற சந்தேகத்தின் மீது தொண்டர்கள் கண்ணீர்ப் புகை மாற்று மருந்துகளைச் சத்தியாக்கிரகிகளுக்கு துரிதமாகக் கொடுத்து முடித்து விட்டுதேனீர் விநியோகஞ்செய்து கொண்டு நின்ருர்கள்.

தலைவர்கள் பிடிபட்டதும் பல தொண்டர்கள் நாலா பக்கமுஞ் சென்று கிராம மக்களுக்கு இந் நிகழ்ச்சிகளை

அறிவித்தார்கள். கோவில்களிலே மணி அடிக்கப்பட்டதும் தலைவர்கள் பிடிபட்டார்களென்பதை உணர்ந்த பொதுமக்கள் கால்நடையாகவும் மோட்டோர் வண்டிகளிலும், துவிச்சக்கரவண்டியிலுமாக கச்சேரியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். நேரம் 2 மணி 25 நிமிஷம். கச்சேரிக்கு அண்மையிலுள்ள சந்திகளிலும் ஒழுங்கைகள் வந்து தெருவில் சந்திக்குமிடங்களிலும் ராணுவ லொறிகள் குறுக்கே போடப்பட்டு வீதிகளில் மக்கள் நடமாட முடியாதவாறு தடை செய்யப் பட்டிருந்தது ராணுவ வீரர்கள் காரில் செல்வோரை மறித்து தமது ஆசை தீரும் வரை அடித்தும் துப்பாக்கியின் அடிப்பாகத்தால் நெஞ்சிலே குத்தியும் போதாக் குறைக்கு மோட்டோர் வண்டிகளை உடைத்தும் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண வழிப்போக்கர்களும் பிரயாணிகளும் தாக்கப் பட்டார்கள். இந்த நிகழ்ச்சி கச்சேரிக்கு வெளியே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு வெளியில் நடைபெறும் போது கச்சேரி பெரிய வாயிலின் உட்புறமாக ராணுவ வீரர்கள் சுமார் 300 பேர் மூன்று பிரிவுகளாக நிறுத்தப் பட்டார்கள். இவர்கள் கச்சேரியின் பின்புற மதில் வழியாக உள்ளே வந்தார்கள். இவர்கள் அவ்வாறு வந்து அங்கு மறை முகமாகத் திரண்டு நின்றதை யாருமே கவனிக்கவில்லை.

சத்தியாக்கிரகத்தைப் பார்வையிடுவதற்காக வெளியூர்களிலிருப்போர் பலர் துவிச்சக்கர வண்டிகளிலும் மோட்டோர் வண்டிகளிலும், பஸ் வண்டிகளிலும் வருவார்கள். இராக் காலங்களில் தங்கி தங்கள் தங்கள் அபிமானத்துக்கமைய சத்தியாக்கிரகத்தில் கலந்தும், தொண்டு செய்தும், வெளி வேலைகளைச் செய்து முடித்தும் காலையில் மறுபடி செல்வார்கள். அன்றைய தினமும் பல வெளியூர் அன்பர்கள் சத்தியாக்கிரக வைப

வத்தைப் பார்வையிடவும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளவும் துவிச்சக்கர வண்டிகளிலும், மோட்டோர் வண்டிகளிலும் வந்து வண்டிகளை அவற்றினுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் விட்டு சத்தியாக்கிரகத்தில் கலந்தும், தொண்டுகளைச் செய்து கொண்டும் நின்றூர்கள். நேரம் 2 மணி 45 நிமிஷம். கச்சேரியின் பெரிய வாயிலில் தயாராக ராணுவ வீரர்கள் நிற்கிறூர்கள். தளபதிகள் அவர்கட்கு ஏதோ கூறுகிறூர்கள். கூறி முடிந்ததும் முதற் கூட்டத்தின் தளபதி ஊதுகுழலை ஊதுகிறூர். ராணுவ வீரர்கள் மிகப் பெரிய ஒலியை எழுப்பினூர்கள். வேகமாக வெளியே ஓடி வந்தார்கள். கச்சேரி நல்லூர் வீதியில் நின்ற பொதுமக்களைத் தாக்கினூர்கள். ராணுவ வீரர்கள் தெருவுக்கு வரும்போது எழுப்பிய சத்தத்தைவிட அவர்கள் பொது மக்களை அடித்த சத்தம் கூடுதலாக இருந்ததென்றூல் அப்பாவி மக்களை எத்துணைத் தூரம் ஆட்சியாளர் தண்டித்துள்ளார்களென்பதைச் சிந்திக்க வேண்டியதே.

நேர்மையும் நீதியும் நிலவவேண்டுமென எண்ணினூல் அதிகாரிகள் சத்தியாக்கிரகிகளை எச்சரிக்கை செய்திருக்க வேண்டும். அதே போல பொது மக்களையும் எச்சரித்திருக்க வேண்டும். எச்சரிக்கை பயன்படவில்லையானூல் தண்டனையைக் கொடுத்திருக்கலாம் எந்தவிதமான அறிவித்தலுமின்றி எதிர்பாராத வகையில் நடைபெற்ற மிருகத் தனமான தாக்குதலைக் கண்ட பொது மக்கள் நாலாதிசையும் தெறிகெட்டு ஓடினூர்கள். செல்லமறுத்த வாலிபர் பலர், ஓட முடியாத வயோதிபர் பலர் ராணுவத்தினரின் மிருக பலத்துக்கு இரையாகி மயங்கி வீழ்ந்தார்கள். வீழ்ந்தவர்கள் ராணுவத்தினரால் உதைபந்தாடப்பட்டனர். இந்த நிகழ்ச்சி கச்சேரி நல்லூர் வீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முதலாவது கூட்டத்தினர் வெளியேசென்ற இரண்டு நிமிஷங்களின் பின் இரண்டாவது கூட்டத்தின் தளபதி ஊது குழலை ஊதினர். அவர்களும் ஒலியை எழுப்பிக் கொண்டு பெரிய வாயிலால் கிழக்குப் பக்கந் திரும்பி சத்தியாக்கிரகிகளுக்கு முன்புறம் நின்றோரையும், தேர்தற் காரியாலய வளவில் மதிலின் உட்புறத்தே நின்றோரையும் தாக்கத் தொடங்கினர்கள். இந்த இரு கூட்டத்தினரும் தங்கள் கண்ணியமான கடமையை மிக உயர்ந்த முறையில் 15 நிமிஷ நேரத்தில் செய்து முடித்தனர்.

இப்புனித கைங்கரியம் நடைபெற்று ஐந்தாவது நிமிஷத்தில் மூன்றாவது ராணுவக் கூட்டத் தளபதி ஊது குழலை ஊதினர். ராணுவ வீரர்கள் கற்றிச் சுழன்றனர். மகிழ்ச்சி ஒலி எழுப்பினர். பெரிய வாயிலால் சத்தியாக்கிரகிகள் இருந்த திசையை நோக்கி வந்தனர். இச் சந்தர்ப்பத்தில் திரு சிவசிதம்பரம் அவர்கள் சத்தியாக்கிரகிகளுக்கு முன் நின்று ஏதோ சொல்லி விட்டு சத்தியாக்கிரகிகளுக்கு முன் உட்கார்ந்தார். வீரர்கள் வந்தார்கள். கைவரிசை, கால்வரிசை, தலைவரிசை, துப்பாக்கி வரிசை, வாய் வரிசை அனைத்தையும் காட்டினர்கள். முதலில் தாக்கப்பட்ட பெருமையும் பாராளுமன்ற உறுப்பினரே தாக்கப்பட்டாரென அகில உலகமும் கண்டனக் குரலெழுப்பி இலங்கை அரசாங்கத்தின் பேடித்தனத்தை அம்பலமாக்கிய பெருமையும் திரு மு. சிவசிதம்பரம் அவர்களுக்கே உரியது. திரு சிவசிதம்பரம் தாக்கப்பட்டநிலை வேறொருவர்பட நிகழுமானல் அவரை மரண நிலையிலே தான் பார்த்திருக்க முடியும். ராணுவப் பெரியார்கள் ஒவ்வொரு சத்தியாக்கிரகிக்கும் முறைப்படி தங்கள் சேவையைச் செய்தார்கள். இரு ராணுவ வீரர் சத்தியாக்கிரகியைத் தூக்கிப் பிடிக்க இரு ராணுவ வீரர் கால் வரிசை காட்ட துப்பாக்கி வீரன் துப்பாக்கியின் அடிப்புறத்தால் நெஞ்சிலும் முதுகிலும்

தாக்குவார். அப்படியே சத்தியாக்கிரகியைத் தூக்கிச் சென்று வீசுவார்கள். பல சத்தியாக்கிரகிகள் இவ்வாறு தாக்கப்பட்டார்கள்.

மகாத்மாக் காந்தி அடிகள் ஆரம்பித்து நடாத்திய சத்தியாக்கிரகப் போர் இருபத்து மூன்று. அதில் ஏழு சத்தியாக்கிரகப் போர் தென்னுபிரிக்காவிலும் பதினறு சத்தியாக்கிரகப் போர் இந்தியாவிலும் நடைபெற்றது. அத்தனை சத்தியாக்கிரகப் போர்களும் மகாத்மாவின் அறிக்கையோடு தான் முடிவுற்றன. பல பல காரணங்களை முன்னிட்டுச் சத்தியாக்கிரகப் போரை மகாத்மா இடை இடையே நிறுத்தினர். நிறுத்தியதற்கு முக்கிய காரணம் சத்தியாக்கிரகிகளும் தொண்டர்களும் கட்டுப்பாடாக நடந்து கொள்ளவில்லை என்பது. ஆனல், இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் இரண்டே இரண்டு சத்தியாக்கிரகங்களை மட்டும் நடாத்தி யுள்ளார்கள். ஒன்று 1956-ம் ஆண்டு ஆனி மாதம் 5ந் திகதி தனிச்சிங்கள பிரகடனத்தை எதிர்த்து காலிமுக மைதானத்திலே நடைபெற்ற ஒருநாட் சத்தியாக்கிரகம். அது காடையர் கைவரிசைகளை யெல்லாஞ் சமாளித்து வெற்றியுடன் முடிந்தது. இரண்டாவது சத்தியாக்கிரகம் 1961ம் ஆ. மாசி மாதம் 20ந் திகதி தமிழ்ப்பிரதேசங்களில் அரசாங்க காரியாலயங்களின் முன் செய்யப்பட்டதாகும். இச் சத்தியாக்கிரகத்தை முறியடிக்க அரசாங்கம் கையாண்ட சூழ்ச்சிகளெல்லாம் தவிடு பொடியாயின. எதிர்க்கட்சிகள் முக்கியமாக கொம்மியூனிஸ்டுக்கள் செய்த துரோகங்களும் மண்ணேடு மண்ணுயின. பல கட்சிகளிலுமுள்ள பொதுமக்கள் இன விடுதலையைத் தமது பிறப்புரிமையாக எண்ணி சத்தியாக்கிரகத்தில் கலந்து தினந்தோறும் புதிய வலுவை யூட்டினர். பிற கட்சித் தலைவர்கள் செய்வதறியாது பாசாங்கிற்காகத் தாமும் ஊர்வலங்களிலும் சத்தியாக்கிரகத்திலும் பங்கு கொண்ட

னர். சத்தியாக்கிரகத்தை முறியடிக்க அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுள் ஒரு சிலரைக் கைக்கூலியாகப் பிடித்தது. அந்தப் பெரியார்கள், அடிக்கடி சத்தியாக்கிரகத்திலும் சத்தியாக்கிரகத்தை நடாத்தும் தலைவர்களுடனும் தொடர்பு வைத்து இரகசியங்களை அறிந்து ஆட்சியாளர்க்கு அறிவிப்பார்கள். ஆட்சியாளர் அதற்கேற்க சதிமுறை வகுப்பார்கள். ஆனால் சத்தியாக்கிரகத் தலைவர்கள் வேறொரு திட்டத்தைக் கையாள்வார்கள். உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்பது போல தமிழ்த் துரோகிகள் செய்த இம்சைகளினால் உண்மையாகவே இயக்கத் தலைவர்களும் தொண்டர்களும் பட்ட துன்பம் சொல்லத் தரமானதல்ல. இத்தனை துன்பங்களையும் வெளியில் யாருமறியாதாறு காத்துத் தமது கடமைகளைக் கட்டளைப்படி செய்து முடித்த பெருமை உண்மையாகவே தொண்டர்களைச் சார்ந்ததாகும். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றை தலைவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு மேலாக சத்தியாக்கிரகத்தை அசம்பாவிதங்களின்றி நடாத்திய புகழ், பெருமை அனைத்தும் தொண்டர்கட்குரியனவே.

தம்மைப் பூரண தியாகஞ் செய்யும் நிலையில் காந்தீஜியின் தலைமையில் சத்தியாக்கிரகஞ் செய்தோர்களே தவறான வழியிற் செல்கின்றனர் எனக் காந்திஜீ கூறிச் சத்தியாக்கிரகப் போரை நிறுத்துவார். ஆனால் சத்தியாக்கிரகி சத்தியத்தை நம்புபவன். தான் மரணம் அடைய நேரிட்டாலும் லட்சியத்தில் அசையாத நம்பிக்கை கொண்டு சத்தியாக்கிரகத்தைக் கடைப் பிடித்தால் தனக்கு எவ்வித இம்சை செய்யப்பட்ட போதிலும் இடத்திலிருந்து அசையாதிருப்பவனே தத்துவார்த்தமான சத்தியாக்கிரகி. இந்த வரவிலக்கணப்படி அன்றைய சத்தியாக்கிரகிகள் நடந்து கொண்டதை மகாத்மா காந்தி அடிகள் கண்டிருந்தால்?........ராணுவ வீரர்களின்

இம்சைகட்குப் பயப்படாது பணியாது தமிழ் வாழ்க என்ற ஒலியை கூறியபடியே இருந்தோரை இறுதியில் ராணுவக் குண்டர்கள் அடித்து உதைத்து தூக்கி எடுத்துத் தூரத்தே கொண்டு சென்று வீசினார்கள். இவ்வாறு குண்டர்கள் செய்து கொண்டிருக்கும் போது முதலாவது இரண்டாவது பிரிவினரில் சிலரும் மூன்றாவது பிரிவினரில் அரைவாசிப் பேரும் பெண் சத்தியாக்கிரகிகளுக்கு முன் சென்றார்கள். அனுராதபுரத்திலிருந்து கிளார்க் வேலை பார்க்க யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வந்த சிங்கள வீரர்கள் பின்புறமாக வந்து தமதுபழைய தொழிலாய எறி வரிசையைக் காட்டினார்கள். இச் சந்தர்ப்பத்தில் திரு. சிவசிதம்பரம் ஓடோடி வந்து பெண்களுக்கு முன் உட்கார்ந்தார். இரு இராணுவ லொறிகளைப் பெண்களுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். எதிரி ஆயுதமற்றதால் இன்று போய்ப் போருக்கு நாளை வா எனக்கூறிய பரம்பரைத் தமிழன் போர் முகத்தே புறமுதுகிடா வன்னெஞ்சன் என்பதை அன்று காணும் பாக்கியத்தைக் காட்டிக் கொடுப்பதிலே முனைந்துள்ள தமிழ் வீரர் கண்டிருப்பார்களேயானால் தமது எதிர்காலம் எப்படி என்பதைத் தாமே உணர்ந்திருப்பார்கள்.

பெண்களின் முன் ராணுவ லொறி வந்து நின்றதும் கச்சேரியின் முன்புறமுள்ள பெரிய வாயிற் கதவுகள் திறக்கப் பட்டன. திரு. உடுகம என்பவர் அவ்விடத்திற் பிரசன்னமானார். இராணுவக் குண்டர்கள் பெண்கள் மத்தியில் சென்று தமது கைவரிசையைக் காட்ட முனைந்தனர். லொறியில் ஏறலாம். ஏற மறுத்தால் அவங்களுக்குச் செய்த உதை உங்களுக்கும் கிடைக்கும். "என்ற விடையைக் கூறினார் ஒரு ராணுவக் கனவான். இச்சந்தர்ப்பத்தில் தமிழ் வீரர்கள் சிலர் ஓடி வந்து பெண்களைச் சூழ நின்றார்கள். திரு. உடுகம அவர்கள் பெண்களைப் பார்த்து லொறியில் ஏறுங்கள் என்ற கட்டளையைப் பிறப்பித்தார்.

மறக்குடி மைந்தர் பலரை ஈன்று பரிவுடன் வீரப் பாலூட்டி வளர்த்துப் போர்க்களம் நோக்கி வாளுடன் அனுப்பும்போது முதுகிலே காயம்பட்டு மடிவாயேல் உனக்குப் பாலூட்டிய என் ஸ்தனங்களை அறுத்தெறி வேன் என ஆணையிட்டனுப்பும் மறமாதர் பரம்பரை அற்றுப் போகவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக உடுகம அவர்களின் கட்டளைக்கு "இங்கிருந்து அசைய மாட்டோம்; எங்களுக்கு கட்டளையிட நீங்கள் யார்?" என்ற பதில் ஒரு பெண்ணின் வாயிலிருந்து அம்புபோல் வந்தது.

திரு. உடுகம: லொறியில் ஏறு விட்டால் சங்கடப் படு வீர்கள்.

பெண் குரல்: ஏற முடியாது;

இராணுவக் குண்டனொருவன் அப்பெண்ணின் கைக ளைப் பிடிக்கத் தாவிச் சென்றான். உடனடியாக அக் குண்டன் கச்சேரி வாயிலில் நின்ற பொலிஸ் அதிகாரிக ளால் தடுத்து நிறுத்தப் பட்டான். இந்த நேரத்தில் ராணுவ வீரர்களுக்குள்ளேயே சல சலப்புத் தொடங்கி அடங்கியது.

திரு. உடுகம: தயவு செய்து லொறியில் ஏறுங்கள், உங் களைப் பொலிஸ் நிலையத்தில் சேர்க்கலாம்.

பெண் குரல்: எழும்பவும் மாட்டோம், லொறியில் ஏற வும் மாட்டோம், பொலிஸ் நிலையம் செல்ல வும் மாட்டோம்.

பொலிஸ் அதிபர்: வீரர்களுக்கு நடந்து கொண்டிருப்ப தைப் பாருங்கள்.

பெண் குரல்: கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்த சத் தியாக்கிரகிகளைத் தாக்கும் உங்கள் வீரம் உண்மையிலே போற்றப்பட வேண்டியது தான். வெட்கமில்லையா?

பொலிஸ் அதிபர்: பொத்து.

இந்த நேரத்தில் ராணுவ அதிகாரியின் கட்டளை பிறந்தது.

முதலில் ராசாத்தி என்ற வீரப் பெண்மணியை லொறியில் ஏற்ற முயன்றார்கள். மேலே லொறியில் நின்று கையிற் பிடித்து ஏற்றும் பொழுது கீழே இருந்த பெண்கள் ராசாத்தியின் காலை இறுகக் கட்டிப் பிடித்தார்கள். லொறியிற் பிடித்த கை வழுவியதால் நிலத்தில் தலை அடிபட விழுந்து மயக்க முற்றாள் ராசாத்தி. ஏனைய பெண்கள் லொறியில் ஏற்றப் பட்டார்கள். ஓம் முருகா நாதம் வானைப் பிளந்தது. இராணுவ லொறி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தை நோக்கி வாயுவேகத்திற் சென்றது.

17-ந் திகதி இரவு ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் அற்புதமான நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. பொலிஸ் நிலைய அறைகள் சிலவற்றின் யன்னல்கள் உடைக்கப்பட்டும், சிவர், கதவு முதலியன சேதப் படுத்தப் பட்டும் இருந்தன. அபூர்வமான திட்டமொன்றினை மனதில் வைத்து இவ்வேலையைச் செய்தார்கள். சத்தியாக்கிரகத்திலிருக்கும் பெண்களை ராணுவ லொறி மூலம் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வந்தவுடன் ஆண்கள் அங்கு ஓடோடி வருவார்கள். அவ்வாறு வருவோர்களைத் துப்பாக்கிக்கு இரையாக்கி விடவேண்டும். இவ்வாறு சுடப்பட்டதேன் என யாராவது கேட்பின், பெண்களை பந்தோபஸ்திற்காக அறைகளில் விட்டிருந்தோம். ஆண்கள் பொலிஸ் நிலைய அறைகளை உடைத்தெறிந்தார்கள். நிலைமையைச் சமாளிக்க முடியாமல் சுட்டோம் என்ற பதிலைக் கூறலாமென்ற உயர்வான திட்டத்தை மனதுள் வைத்துக் கொண்டு இவ்வாறு செய்த பொலிஸ் நிலையத்தார் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டார்கள் ஒருமணித்தியாலம் வரை பொலிஸ் நிலையத்தில் பெண்கள் நிறுத்தி

வைக்கப் பட்டார்கள். ஆனால் ஆண்கள் எவராவது அங்கு செல்லவில்லை. மீண்டும் பெண்களை அங்கிருந்து கச்சேரி வாயிலாலே கொண்டு சென்று அரியாலை அநாதைச் சிறுவர் மண்டபத்தில் விட்டு விட்டுச் சென்றார்கள்.

பெண்கள் லொறிகளில் ஏற்றப்பட்ட பின்னர் சத்தியாக்கிரகிகளைப் பார்வையிட வந்தவர்களது வாகனங்கள் மீது ராணுவ வீரர்களும் அனுராதபுர வீரர்களும் தம் கைவரிசையைக் காட்டினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள் நொருக்கப்பட்டன. மோட்டோர் சைக்கிள்கள் அடித்து நொருக்கப் பட்டன. மோட்டோர் வண்டிகளும் நொருக்கப் பட்ட நிலையில் சாரதிகளால் அப்புறப் படுத்தப் பட்டன. சத்தியாக்கிரகத்தைப் பலமுறை முறியடிக்க ஆட்சியாளர் முனைந்த போது தன் பூரண சக்தியைப் பயன்படுத்தி ஆட்சியாளரை முறியடித்த இரும்பு மனிதன் திரு நாகநாதன் மீது அரசாங்கம் எத்துணை ஆவேசத்தோடு இருந்ததென்பதை திரு நாகநாதன் அவர்கள் பாவித்த 1 ஸ்ரீ 6251 இலக்க மோட்டோர் வண்டியைப் பார்ப்போர் அறிந்து கொள்வர். 18-ந் திகதி அதிகாலையில் யாழ்தேவி மூலம் கொழும்பு செல்வதற்கு இருந்த நாகநாதன் அவர்களைப் புகையிரத நிலையத்திற்கு ஏற்றிச் செல்வதற்காக அக்கார் தேர்தற் காரியாலயத்தின் பின் புறம் நிற்பாட்டப் பட்டிருந்தது. அதன் சாரதி காருக்குப் பக்கத்தில் நின்ற போது ராணுவ வீரர்களின் தாக்குதலால் மயக்கமடைந்தார். ராணுவ வீரர்கள் காரைச்சுற்றி நின்று அக்காருக்குச் செய்த சித்திரவதையைக் கொண்டு சிங்கள ராணுவம் தமிழ் பேசும் மக்கள் மீது எவ்வளவு மனிதத் தன்மையைப் பாவித்ததென்பது புலனாகும். காரின் உறுப்புக்களையும் கண்ணாடிகளையும் யந்திர சாதனங்களையும் ஒவ்வொன்றாக உடைத்தெறிந்துவிட்டு பெற்றோல் ராங்கியினுள் சீனியை நிரப்பி வைத்தார்கள்.


அப்பொழுதும் அவர்கள் ஆத்திரம் அடங்கவில்லை. கற்களை எடுத்து கார்மீது மோதினார்கள். காரின் ஆசன மெத்தைகளைப் பிய்த்து நெருப்புக் கிரையாக்கினார்கள். சில்லுகளிலுள்ள ரயர்களைக் குத்தி துண்டு துண்டாக்கினார்கள். இக்கைங்கரியம் முடிந்த பின்னர் சத்தியாக்கிரக மைதானம் வந்து சத்தியாக்கிரகிகள் பாவித்த பொருட்கள், ஊர்வலங்கள் வந்தபோது பாவித்த சுலோக அட்டைகள், கொடிகள், இருப்பதற்கு உபயோகித்த பாய், இரட்டு முதலியன வற்றை எல்லாம் மூன்று இடத்திற் சேர்த்துத் தீ மூட்டினார்கள். அந்தத் தீயைச் சுற்றி நின்று பைலா ஆடினார்கள். தண்ணீர் வைத்திருந்த ராங்கியை நொருக்கினார்கள். விலையேறப்பெற்ற பெரிய பெரிய கிடாரங்கள் பாத்திரங்கள் முதலியவற்றையும் அடித்து நொருக்கினார்கள்.

சத்தியாக்கிரக காலத்தில் பல கடைகள் காரியாதிகாரியின் மைதானத்தில் இருந்தன. ஒரு சிங்களச் சகோதரரும் ஒரு கடையை வைத்திருந்தார். அச்சிங்களச் சகோதரரின் கடைமட்டும் சேதமின்றி இருக்க ஏனைய கடைகள் தீக்கிரையாக்கப் பட்டன. நிரந்தரமாக பல ஆண்டுகளாக இருந்த கடைகளும் அடித்து நொருக்கப் பட்டன. அக்கடையின் சொந்தக்காரரின் காரும் சேதமாக்கப் பட்டது.

தமிழரசுக் கட்சி தனது இரண்டாவது நடவடிக்கையாக தபால் சேவையை ஆரம்பித்தது. அதற்காக சுமார் 200 ரூபா செலவில் உறுதியான அறை ஒன்றினைச் சத்தியாக்கிரக மைதானத்தில் அமைத்திருந்தது. ராணுவ வீரர்கள் அந்த நிலையத்தைத் தாக்கினார்கள். வேயப் பட்ட தகரங்கள் இரும்புக் கேடருடன் மிகப்பலமான முறையில் ஆணிகளால் பொருத்தப் பட்டிருந்தது. தகரத்தைப் பிடுங்க முடியாது போகவே ஆணி பொருத்

தப்பட்ட இடங்களை நோக்கித் துப்பாக்கியாற் சுட்டார்கள் ராணுவ வீரர்கள். இத் துப்பாக்கிச் சூடுகளின் போது துப்பாக்கியுள் இருந்து புறப்பட்ட குண்டு கேடரில் பட்டு மீண்டும் ராணுவ வீரர் இருவரின் தோட்பட்டைகளைப் பிய்த்து விட்டன. **வீ**ரமும் விவேகமும் ராணுவத்தோர்க்கு எவ்வளவு தூரம் அமைந்துள்ளது என்பதற்கு இதுவோர் எடுத்துக் காட்டாகும்.

இந்தக் கைங்கரியங்கள் முடியும் பொழுது நேரம் **4-30** இருக்கலாம். இதன் பின்னரே மயக்க நிலையில் படுகாயங்களுடன் இருந்தோர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டனர். மொத்தம் **63** பேர் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். பிற இடங்களில் நூற்றுக் கணக்கானோர் சிகிச்சை பெற்றனர்.



யாழ்ப்பாணத் துறையிலே நூற்றுக் கணக்கான வள்ளங்கள்
அணி வகுத்து நின்றன.

தி+மு+கழகம் சென்னையில் 13. 3. 62 அன்று சுமார் ஐந்து லட்சம் மக்கள் மத்தியில் நடாத்திய கண்டனக் கூட்டத்தில் அறிஞர் அண்ணாவின் அறிவுரை.

# யாழிலிருந்து கிளம்பிடும் வீரம்!

கப்பற் படையும், தரைப் படையும் சென்றன! மாற்றாருடன் போர் தொடுக்கவா? அல்ல, அல்ல. சொந்த மண்ணிலே உழைத்து, அம் மண்ணிலேயே சாவோம் எனச் சங்கநாதம் செய்திடும் அண்ணன் தம்பிகளை ஒடுக்க. படை! தடை! எதனாலும் பயந்து விட, முடைநாற்றம் வீசும் முட்டைக்கூட்டமல்ல நாங்கள். மூச்சடக்கி முத்து எடுத்த இனம்! முழுமதியென உலகெல்லாம் ஒளி வீசி நின்ற பரம்பரை! எங்களை அழிக்க ஆயுதங்களால், முடியாது. அன்பால் வென்றாருண்டே ஒழிய, அதட்டலால் எம்மை மிரட்டியோர் அவனியிலே கிடையாது என முழக்கமிட்டனர். படை வீரர்கள் பாய்ந்தனர்! எதிர்நோக்கி வந்து, இதோ மார்பு, என்று காட்டினர்! கீழே தள்ளி உருட்டி, "கேடுகெட்டவர்களே துப்பாக்கி முனையிலே யிருக்கும் கத்தி, கிழிக்கும் உமது குடலை!!' என்றனர். இருதயத்தையே எடுக்கத் துணிந்து விட்ட இந்த அரசியல் குடல் போனால் என்ன, உடல் போனால் என்ன, எதற்கும் துணிந்தேவிட்டோம், எனக் கூவினர் மக்கள். படைவீரர்கள், "இதென்னடா, தொல்லை!" என்று நிமிர்ந்தனர். காலிகளும் கூலிகளுமாயிருந்தால், அவர்களை எளிதில், அடக்கிட முடியும், இவர்களோ, நல்லதொரு காரியத்துக்காக, மக்கள் மனை போனால் என்ன என்று பாடிக்கொண்டு வந்துவிட்ட அறப்போர் வீரர்கள். அடி! உதை! – என்று அஹிம்சை பிறழ்ந்த முறையில், ஏதாவது காரியங்களில் ஈடுபட்

டாலும், அதைக் காரணமாகக் கொண்டு, சுட்டுத்தள்ள லாம். துப்பாக்கியைக் காணும்போது கூட, சுடுசொல், கூருமல் அன்புரையே தருகிறார்கள்! என்ன செய்வது? என்று, யோசித்தது, அரசு. யோசனையின் விளைவாக, முரட்டு மூளையில், உதித்தது ஒரு குருட்டு எண்ணம். நம்மை நம்பி வாழும் இந்த மக்களுக்கு அரிசி கிடைக்காமற் செய்து விட்டால்? சோறின்றி இவர்கள் எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும்! வயிறு வாடினுல் எதுவும் வழிக்கு வந்துவிடுமன்றோ? இதனுல் தானே அந்தக் காலத்தில், எதிரிகளை ஒடுக்க அவர்களுக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்களைத் தடுத்து விடுவது, ஒரு போர் முறையாகக் கருதப்பட்டது. ஆட்சி நம்முடைய கையில்! அரிசி, கிடைக்காமற் செய்து விட்டால், என்ன செய்ய முடியும்? பிறகு அறப்போராவது, அட்டகாசப் போராவது. எல்லாம் அடங்கிவிட வேண்டியது தானே!! சொந்த மண்ணில் வாழும் மக்கள் மீது, இந்தப் பாணத்தைப் பாய்ச்சினர். மிக மிகக் கொடுமையான, பாணம்! கொடுங்கோலர் தம் மனதில் மட்டுமே, உருவாக வேண்டிய பாணம்!! எத்தனை நாளைக்குப் பட்டினி கிடக்க முடியும் — தானிருக்கலாம், தன் மனையாட்டியை இருக்கச் செய்யலாம், தாயிடம் கை கூப்பிக் கேட்டுப் பசியை அடக்கிக் கொள்ளச் சொல்லலாம், தான் பெற்ற மழலைச் செல்வங்கள் பசியால் துடிப்பதைப் பாதகன் கூடச் சகிக்க மாட்டானே? என்ன செய்வது, இத் தடையை எப்படி நொறுக்குவது, என்று அறப்போர் வீரர்களல்ல நாட்டு மக்கள் எண்ணினர்கள்!

அரசு, அரிசி அனுப்பாவிடில் போகிறது — கழனிகளிலே நாங்கள் அறுத்தெடுத்த நெல்மணிக் கதிரை விற்ருல் எமக்குப் பணந்தான் கிடைக்கும்-மானத்துக்குப் போரிடும் உம்மை விடப் பணமோ, எமக்குப் பெரிது?

அஞ்சி, அயராதீர்கள் – அரிசியை, நாங்கள் கொண்டு வந்து தருகிறோம் - இரயிலில், லாரியில் ஏற்றினால் தானே அரசு தடுக்கும் - எங்கள், தலையில், முதுகில், சுமந்து வந்து தருகிறோம் - என்று முன் வந்தனர்!! அறப்போர் நடத்தும் மக்களைப் பழிவாங்க எண்ணிடும் அரசின் போக்கு கண்டு நாட்டுப்புற மக்கள் பதறியது கேட்டு வணிகக் குடிமக்கள், கூடினர் அவர்கள் உள்ளமெல்லாம் மெழுகாகியது. இத்தனை நாளும் நாம் வாளாயிருந்தோமே? இதோ எமது உதவி! எங்கெங்கு அரிசி கிடைக்குமோ அதையெல்லாம் வாங்கி, நியாய விலைக்கு, நாங்கள் தருகிறோம் – அதோடு, உமது அறப்போருக்கு உதவியாக நிதியும் அளிக்கிறோம் - எமது நெஞ்சம் உமக்கே என முன் வந்தனர்! கொட்டுகிறது மழை தலையில்—கொட்டுகிறது பசி வயிற்றில்—கொட்டுகிறது அரசின் போக்கு நெஞ்சில்—எனினும் ஆடாது அசையாது, இருந்த இடத்தில் இருந்தபடியே இலங்கை வாழ் தமிழர்கள், சர்க்காரது அலுவலகங்களில் செய்து வரும் மறியல் நடந்து வருகிறது. யாழிலிருந்து இன்னிசையே கேட்கும்! மோகன ராகத்தை இசைப்பது போல அமைதியோடு வாழ்ந்த யாழ்ப்பாண நகரமும் ஏனைய தமிழ்ப் பட்டணங்களும், இன்று முரசொலிக்கின்றன!! இம்முறை, அங்கே நடைபெற்று வரும் அறப்போர் எளிதாக எண்ணக் கூடிய ஒன்றல்ல. ஏதாவது ஒரு அரசியல் கட்சியின் சார்பில் நடத்தப்படுவதுமல்ல. இலங்கையின் வட பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும், தமிழர்கள் அதிகம். அந்தப் பகுதிகள் யாவும் இன்று அறப்போர்க் களமாகி விட்டன! "யாரோ நடத்துகிறார்கள் எமக்கென்ன?" என்று போவோரில்லை நடக்கும் அறப்போருக்கு நம்முடைய பங்கென்ன, என்று கேட்கிறார்கள் ஒவ்வொருவரும். இலங்கை வாழ் தமிழர்களில், முசுலீம் மக்கள், குறிப்பிடக்கூடிய தொகையின

ராகும். அந்த மரக்கலராயரும், இப்போது, மார் தட்டி இறங்கியிருக்கின்றனர். அடுப்பங்கரைகளைவிட்டுஅணங்குகள், புறப்பட்டு அறப்போரிலீடுபட்டிருக்கின்றனர்!! எங்கும் பரபரப்புக் கூட்டம் - இதைப் பற்றியே பேச்சு — ஒரு தேசிய எழுச்சி, அங்கே உருவாகியிருக்கிறது.

இலங்கை! — வாழப்போய்த் தங்கிய வம்பு மடமல்ல, தமிழருக்கு. ஆண்டாண்டு காலமாய், அண்ணனும் தம்பியும் போல ஓடி விளையாண்ட கூடம். முடியுடை மூவேந்தர்கள் இறவாப் புகழோச்சியிருந்த காலத்திலே, இலங்கையும் தமிழ்நாடும் ஒரே தட்டிலுண்ணும் இரண்டு புறாக்களைப் போல் இருந்திருக்கின்றன. சோழ மன்னன் ராசரரசன், இலங்கையின் வடபுலத்தைவென்று அந்த இடத்துக்கு மும்முடிச் சோழமண்டலம் எனும் பெயரைச் சூட்டினன்! இலங்கையிலிருந்து கொணர்ந்த ஆட்களைக் கொண்டு, காவிரிக்குக் கரையமைத்தான் கரிகாற் பெருவளத்தான் என்பர்! உட் பூசல்கள் உருவான நேரத்தில், இலங்கயரசர்கள் இடந்தேடி வந்தது இங்கு தான். மூவேந்தர்களுக்குள்ளும் போர் மூண்டால் மூவரில் ஒருவரை ஆதரிக்க, சிங்கள அரசர்கள் படையுடன் வந்திருக்கின்றனர். பாண்டிய நாட்டுப் பைங்கிளிகள், இலங்கைச் சோலைக்குச் சென்றிருக்கின்றன! சோழனின் மணிமாடத்துக்குச் சிங்களத்துச் செவ்வந்திப் பூக்களும் வந்திருக்கின்றன! இலங்கையின் இரத்தினங்களை எடுத்து சேரநாட்டுத் தேனிதழ் மாதர் சிரிப்புதவழும் தத்தமது உதடுகளின் நிறத்துக்கு ஒப்பிட்டு மகிழ்ந்த காலமும் உண்டு! இலங்கையின் ஆதிக்குடிகள், திராவிடரே! — பஃறுளியாறு கடல் கொள்ளப்பட்ட போது, இரத்தினத் தீவான இலங்கை பிரிபட்டது என்பர், சரித வல்லநர் ஈழம் எனும் சொல்லே, 'கேரளர்' என்னும் சொல்லிலிருந்து மருவியதாகவும் ஒரு ஆராய்ச்சி இருக்கிறது. மலையாளத்தின் தென்னஞ் சோலைகளை

யும், இலங்கையிலும் அதே மண்வளம் இருப்பதையும் காட்டி, இரண்டுக்கும் ஒப்புவமை கூறுவோரும் உண்டு! கதிர்காமத்துக் கந்தனையும, திருகோணமலை போன்ற இடங்களிலுள்ள திருக்கோயில்களையும், தமிழறிந்தான் இராவணனையும் சான்றுக்கிழுத்து, பழந்தமிழர் வாழ்ந்த இடம் என்போரும், இருக்கிறார்கள். இப்போதும், நெல்லை மாவட்டத்தில் ஈழத்துப் பிள்ளைமார் என்போர் இருக்கிறார்கள். இவ்வளவு சான்றுகள் ஏன்?

**யாழ்ப்பாணம்!** — எனும் சொல்லே, போதும், தமிழர்கள் எவ்வளவு தொன்மை கொண்டவர்களாக இலங்கையில் வாழ்கிறார்கள் என்பதைக் கூற! இங்கே நம் பேச்சு வழக்கிலிருக்கிற தமிழை விட, அங்குள்ளோர் பேசிடும் தமிழில், தூய்மையும் தொன்மையும் இருக்கிறது!!

இலங்கையின் மொத்த மக்கள் தொகை 90 லட்சம், இதில்; தமிழர்கள் தொகை 30 லட்சம்!! மொத்த மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர், தமிழர்கள். மக்கள் தொகையில் மட்டுமல்ல, இலங்கையின் வாழ்வில், இரண்டறக் கலந்து விட்டவர்கள் தமிழர்கள். உழைப்பால், இலங்கையை உருவாக்கி வருகிறார்கள் — அறிவால், அந்நாட்டின் பெருமையை அதிகமாக்கி வருகிறார்கள்; தோட்டத் தொழிலாளிகளாக மட்டுமல்ல, டாக்டர்களாகவும், தமிழர்கள் இருக்கிறார்கள். "தமிழர்கள் இருக்கிறார்கள். "நமது தாயகம், இலங்கை. அதன் புகழே நம் பெருமை" என்று இரண்டறக்கலந்து வாழும், தமிழ் மக்களின் முக்கியத்தை. ஆண்ட வெள்ளையன் உணர்ந்தான்! அதனால், அவன் காலத்தில், தமிழர்களுக்கும் அரசியலிலும் அதிகாரங்களிலும் ஓரளவுக்கு இடங்கள் கிடைத்தன!! இன்னும் சொல்ல வேண்டுமானால், அவன் காலத்தில், சிங்களத் தோழர்களும், தமிழ்க் குடிகளும், ஒற்றுமையாகவே வாழ்ந்தனர் அதுமட்டுமின்றி, வெள்ளை ஆதிக்கத்தை இலங்கையை விட்டு அகற்றவும், தோள் கொடுத்துப் போராடினார்கள் தமிழர்கள். சிங்களத்தின் அரசியல்வாதிகளுக்கு அப்போது ஆண்ட வெள்ளையனை வெளியேற்றும் வேலை இருந்தது! அந்த வேலை முடிந்து, ஆட்சி தங்கள் கைக்கு வந்ததும்,

கிடைத்த சுதந்திரத்தைச் சுகவழியாக்கும் மார்க்கத்தில் ஆளவந்தவர்கள் செல்லவில்லை!! சிங்கள மக்கள் மனச்சோர்வு அடைந்து தங்கள் செயல் திறமையைச் சந்தேகிக்கக் கூடாதே என்பதற்காக, "ஒரே மொழி" எனும் வெறித்தனத்தை உண்டாக்கி "ஆகா! இவரைப்போல் நம்மொழிக்குப் பாடுபடும் உத்தமருண்டோ? சிங்களத்தைக் காக்க எழுந்த சிங்கங்களே வாழி! என்று பாராட்ட வேண்டும் என்பதற்காகப் பாதகமான வழிகளில், சிங்கள அரசியல் வேட்டைக்காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வீட்டைக் கொளுத்தி விட்டு, எரியும் நெருப்பில், சுருட்டுப் பிடிப்பவன், வாழ்க்கைச் சூதாடி மட்டுமல்ல, ஏமாளியுங் கூட! தீ பரவுகிறது என்று தெரிந்தால், அதை அணைத்து விட்டு, அன்பால் எதனையும் வெல்கிறவனே, புத்தரின் பொன்னுரை சீடனாவான்—சிறப்பும் அடைவான்!!

பற்று என்பது வேறு, வெறி என்பது வேறு. மொழிப்பற்று, எல்லோருக்கும் இருக்க வேண்டியது தான். ஆனால், பற்றினையே வெறியாக்கி, எமது மொழியை நீ பயில வேண்டும் என வற்புறுத்துவது, மனித நெறிக்கு மாறுபட்டதாகும். நெறி மாறிய வழியிலே, சிங்கள அரசு, செல்கிறது. ஒருவரல்ல, இருவரல்ல, நாட்டின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பகுதியினராயிருக்கும் — தமிழர் மீது சிங்களத்தைத் திணிக்கிறது!! இதன் சின்னமாக 1958ல் தமிழர் பட்ட அவதியினை நாம் மறந்திருக்க முடியாது," எனும் போர்வையில், தமிழர் தம் கடைகள் சூறையாடப்பட்டதும், தமிழர்களை நிறுத்தி அவர் தம் முதுகிலும் மார்பிலும் சிங்கள எழுத்துக்களைப் பொறித்ததும், தமிழ்ப் பெண்களெல்லாம் அவமானப் படுத்தப் பட்டதும், எல்லாவற்றிற்கும் மேலாக **158** தமிழ் உயிர்கள் சாகடிக்கப் பட்டதும், உலகம் அறியும்!!

பாலஸ்தீனத்திலிருந்த யூதர்களை, இப்படித் தான் அரபு மக்கள், அஞ்சுமளவுக்கு அடாபிடித்தனம் செய்து வந்தனர், இலங்கையைப் போல 30 லட்சம் கூட அல்ல அவர்கள் 16 லட்சம் தான்!! ஒரே பிடியாக இருந்து,

கடைசியில் இஸ்ரேல் என்கிற தனி நாட்டைப் பெற்று இன்று ஐக்கிய நாடுகள் சபையிலும் அங்கம் வகித்து வருகிறது. யூத மக்களுக்குக் கேடுகள் ஏற்பட்டபோது, அவர்கள் சார்பில்; வாதாட ஐக்கிய நாடுகள் சபையின் பல நாடுகள் முன் வந்தன! பண்டித நேருகூட, இஸ்ரேல் பக்கம் நின்றார்!! இதனைச் சிங்கள நாட்டின் பார்லிமெண்டு உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டி, **"ஒரே மொழி என்றால், இரு நாடுகள்! இரு மொழிகள் என்றால் ஒரே நாடு!!"** என்று முழக்கமிட்டிருக்கிறார். அந்தளவுக்கு, நிலமை செல்லாமல், இலங்கை அரசு, பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது நம்முடைய ஆவல்.

காங்கோவில் நடைபெறும் அட்டூழியத்தைக் கேள்வியுற்று, நயாள் என்கிற தன் பிரதிநிதியையே நிறுத்தி, போதாதென்று இந்தக் கிழமை 4500 படை வீரர்களையும் தமிழர் ராஜூ என்பாரின் தலைமையில், அனுப்பி வைத்திருக்கிறது!!

அந்தளவுக்குக் கடுமையான நடவடிக்கைகள் எதையும் கூட எடுக்க வேண்டாம்—நாமும் விரும்பமாட்டோம்—இலங்கைத் தமிழர்களும் ஏற்கமாட்டார்கள். அவர்கள் சார்பில், அண்மையில், தன்னைச்சந்தித்த இலங்கைப் பிரதமர் சிரிமாவோவிடம் ஒரு சொல் உதிர்த்திருக்கலாகாதா, பண்டித நேரு! வேண்டாம் இவ்வளவு பெரிய "அறப்போர்" இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தான் இலண்டனில் கூடிடும் "காமன் வெல்த்" மாநாட்டில் தினசரி சந்திக்கின்றனர், சிரிமாவோம் நேருவும்! அக்கறையிருக்குமாயின், ஒரு வார்த்தை பேசலாகாதா? அல்லது, காமன்வெல்த் மாநாட்டிலேயே, கண்டித்து, விளக்கம் கேட்கக் கூடாதா?

நேருவுக்கு, உள்ள நிலைமையைப்பற்றி மனத்துடிப்பு, ஏற்பட வழியில்லை! ஏனெனில், இது தமிழர் தம் பிரச்சனை. வேண்டுமென்று கூட அல்ல, தமிழர் தம் குரலின் உண்மையினை உணரும் ஆசை ஏற்படும் வழி கூடக் கிடையாது அவருக்கு. அதனை, எடுத்துச் சொல்லவோ, இங்கிருக்கும் காங்கிரஸ் அரசு அஞ்சுகிறது.

கிடைத்த சுதந்திரத்தைச் சுகவழியாக்கும் மார்க்கத்தில் ஆளவந்தவர்கள் செல்லவில்லை!! சிங்கள மக்கள் மனச் சோர்வு அடைந்து தங்கள் செயல் திறமையைச் சந்தே கிக்கக் கூடாதே என்பதற்காக, "ஒரே மொழி" எனும் வெறித்தனத்தை உண்டாக்கி "ஆகா! இவரைப்போல் நம்மொழிக்குப் பாடுபடும் உத்தமருண்டோ? சிங்களத் தைக் காக்க எழுந்த சிங்கங்களே வாழி! என்று பாராட்ட வேண்டும் என்பதற்காகப் பாதகமான வழி களில், சிங்கள அரசியல் வேட்டைக்காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வீட்டைக் கொளுத்தி விட்டு, எரியும் நெருப்பில், சுருட்டுப் பிடிப்பவன், வாழ்க்கைச் சூதாடி மட்டுமல்ல, ஏமாளியுங் கூட! தீ பரவுகிறது என்று தெரிந்தால், அதை அணைத்து விட்டு, அன்பால் எதனை யும் வெல்கிறவனே, புத்தரின் பொன்னுரை சீடனாவான்—சிறப்பும் அடைவான்!!

பற்று என்பது வேறு, வெறி என்பது வேறு. மொழிப்பற்று, எல்லோருக்கும் இருக்க வேண்டியது தான். ஆனால், பற்றினையே வெறியாக்கி, எமது மொழி யை நீ பயில வேண்டும் என வற்புறுத்துவது, மனித நெறிக்கு மாறுபட்டதாகும். நெறி மாறிய வழியிலே, சிங்கள அரசு, செல்கிறது. ஒருவரல்ல, இருவரல்ல, நாட்டின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பகுதியின ராயிருக்கும் — தமிழர் மீது சிங்களத்தைத் திணிக்கி றது!! இதன் சின்னமாக 1958ல் தமிழர் பட்ட அவதி யினை நாம் மறந்திருக்க முடியாது," எனும் போர்வை யில், தமிழர் தம் கடைகள் சூறையாடப்பட்டதும், தமி ழர்களை நிறுத்தி அவர் தம் முதுகிலும் மார்பிலும் சிங் கள எழுத்துக்களைப் பொறித்ததும், தமிழ்ப் பெண்க ளெல்லாம் அவமானப் படுத்தப் பட்டதும், எல்லாவற் றிற்கும் மேலாக **158** தமிழ் உயிர்கள் சாகடிக்கப் பட்ட தும், உலகம் அறியும்!!

பாலஸ்தீனத்திலிருந்த யூதர்களை, இப்படித் தான் அரபு மக்கள், அஞ்சுமளவுக்கு அடாபிடித்தனம் செய்து வந்தனர், இலங்கையைப் போல 30 லட்சம் கூட அல்ல அவர்கள் 16 லட்சம் தான்!! ஒரே பிடியாக இருந்து,

கடைசியில் இஸ்ரேல் என்கிற தனி நாட்டைப் பெற்று இன்று ஐக்கிய நாடுகள் சபையிலும் அங்கம் வகித்து வருகிறது. யூத மக்களுக்குக் கேடுகள் ஏற்பட்டபோது, அவர்கள் சார்பில்; வாதாட ஐக்கிய நாடுகள் சபையின் பல நாடுகள் முன் வந்தன! பண்டித நேருகூட, இஸ்ரேல் பக்கம் நின்றார்!! இதனைச் சிங்கள நாட்டின் பார்லிமெண்டு உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டி, "ஒரே **மொழி என்றால், இரு நாடுகள்! இரு மொழிகள் என்றால் ஒரே நாடு!!"** என்று முழக்கமிட்டிருக்கிறார். அந்தளவுக்கு, நிலைமை செல்லாமல், இலங்கை அரசு, பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது நம்முடைய ஆவல்.

காங்கோவில் நடைபெறும் அட்டூழியத்தைக் கேள்வியுற்று, தயாள் என்கிற தன் பிரதிநிதியையே நிறுத்தி, போதாதென்று இந்தக் கிழமை 4500 படை வீரர்களையும் தமிழர் ராஜா என்பாரின் தலைமையில், அனுப்பி வைத்திருக்கிறது!!

www.telibrary.com

அந்தளவுக்குக் கடுமையான நடவடிக்கைகள் எதையும் கூட எடுக்க வேண்டாம்—நாமும் விரும்ப மாட்டோம்—இலங்கைத் தமிழர்களும் ஏற்க மாட்டார்கள். அவர்கள் சார்பில், உண்மையில், தன்னைச்சந்தித்த இலங்கைப் பிரதமர் சிரிமாவோவிடம் ஒரு சொல் உதிர்த்திருக்கலாகாதா, பண்டித நேரு! வேண்டாம் இவ்வளவு பெரிய "அறப்போர்" இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தான் இலண்டனில் கூடிடும் "காமன்வெல்த்" மாநாட்டில் தினசரி சந்திக்கின்றனர், சிரிமாவோம் நேருவும்! அக்கறை யிருக்குமாயின், ஒரு வார்த்தை பேசலாகாதா? அல்லது, காமன்வெல்த் மாநாட்டிலேயே, கண்டித்து, விளக்கம் கேட்கக் கூடாதா?

நேருவுக்கு, உள்ள நிலைமையைப்பற்றி மனத்துடிப்பு, ஏற்பட வழியில்லை! ஏனெனில், இது தமிழர் தம் பிரச்சனை. வேண்டுமென்று கூட அல்ல, தமிழர் தம் குரலின் உண்மையினை உணரும் ஆசை ஏற்படும் வழி கூடக் கிடையாது அவருக்கு. அதனை, எடுத்துச் சொல்லவோ, இங்கிருக்கும் காமராசர் அரசு அஞ்சுகிறது.

"அநாதைகள் அல்ல, அவர்கள், கேடுற்றவர்களுக்குப் பரிதாபம் காட்ட, ஒரு அரசு இருக்கிறது," என்கிற அச்சமாவது, இருக்குமன்றோ! தமிழருக்கும் ஒரு தைரியம் ஏற்படுமன்றோ!!!

**"ஒன்று, தமிழர்கள் கண்ணுக்கெட்டாத தொலைவில் கடல் கடந்து வாழ்ந்தாலும் அவர்களைப் பற்றிக் கவலைப் படுவது தி. மு. க. தான்"**

**"நமக்கென்று இருப்பது, இன மரபு அறிந்தது, தி. மு க ஒன்று தான் என்ற உணர்வு அந்தத் தமிழர்கட்கு ஏற்பட்டுள்ளது இரண்டாவதாகும்.**

**"மூன்று, அவர்களுக்கெல்லாம் நாம் தரக்கூடியது அனுதாபச் செய்தியும், ஆறுதல் செய்தியும், வாழ்த்தும் நல்லுரையும் தான்.**

"வீழ்ந்து பட்ட தமிழர்களுக்கும், விரட்டியடிக்கப் படும் தமிழர்கட்கும் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில் நமது கண்ணீரைக் காணிக்கை யாக்குவோம், தாயிழந்து தவிக்கும் தனயனும், மகனை இழந்த தகப்பனும், அண்ணனைப் பறி கொடுத்த தம்பியும், தம்பியைப் பிரிந்த அண்ணனும், இப்படியாக, ஒரு கூப்பிடு தொலைவிலுள்ள இலங்கையில் இருந்து கொண்டு கொட்டும் கண்ணீருடனும், குமுறும் நெஞ்சத்தோடும் 30 இலட்சம் தமிழர்கள் வாடுகிறார்கள். அங்குள்ள தமிழ்ப் பெருங்குடி மக்கள் தணலிலிட்ட தங்கம் போல உருகுகிறார்கள்; அவர்கள் படும் துயரம் பற்றிய செய்தி தரணியெல்லாம் பரவுகிறது; ஆனால் இங்குள்ள அரசினருக்கு ஏனோ எட்டவில்லை. விரைவில் இலங்கைத் தமிழர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெற்றிருக்கிறது."